# புதுமை

329

329/1-58

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JAN 1958
MADRAS



SL
NV111, N57P8
N57.1.6,
197691

PUTHUMAI . ஜனவரி 1.1958.

25 நயா பைசா



சீமான்களும்
சீமாட்டிகளும்
என்றும் விரும்புவது
சீமாட்டி
ஸ்டோர்ஸ்
துணிகளையே!
சீமாட்டி ஸ்டோர்ஸ்
சாலைபசார், திருவனந்தபுரம்.

# ஒரு நாள் வாழ்வு

— செல்வம் —

**ஒரே நாள்தான் வாழ்ந்தாலும், 'பூரணமாக' வாழ வேண்டாமா? கவிஞனும் கலையரசியும் இந்தக் கொள்கையைத்தான் கடைப் பிடித்தார்கள்; ஆனால்?**

பொன் கொழிக்கும் பூமியென்றும் தானியக் களஞ்சியம் என்றும் சரித்திரப் புகழ் பெற்றது தஞ்சை மாநகரம்.

கலை ஆர்வமுள்ள குலோத்துங்க சோழன் தனது ஒரு குடையின் கீழ் அகண்ட சாம்ராஜ்யத்தை ஆண்ட காலம்.

நாள் தவறாமல் அவனை அணுகி பாடிப் பரிசு பெறும் பாவலர்கள், கேளிக்கை விளையாட்டு ஆர்வமுள்ளவர்கள், இயல், இசை நாடக கலைஞர்கள் ஏராளமாக இருந்தனர்.

பண்ணோடு இசை பாடும் பாணர் குலத்திலுதித்த பழையாறைக் கிழார் பாணர்குல வேந்தரென புனைப் பெயர் பூண்டவர், கணக்கில்லாப் பரிசு பெற்ற பாவலர், குலோத்துங்க சோழனின் தனிப் பெரும் மதிப்புக்கு ஆளாகி அவர் தம் கவிஞர் குழுவிலே தன்னிகரில்லாமல் வீற்றிருந்தார்.

'பழையாறைக்கிழார்', தனது புதல்வன் தனஞ்சயனுக்கு நல்ல முறையில் பயிற்சி அளித்துக்கவிதை பாடும் திறனை அளித்திருந்தார். தனஞ்சயனுக்கு இருபத்திரெண்டு வயது இருக்கும். கட்டழகு மேனி; காண்போரைக் கவரும் பால்வடியும் முகம்; எண்ணமெல்லாம் கவிதை இசைப்பதுதான். ஆனால் அவன் மன்னருக்கு முன்னிலையில் பாடியது கிடையாது. அன்று அவனை அரசரின் கலையரங்கிற்கு அழைத்துச் செல்லப் போவதாக அவனது தந்தை புகன்றதும் தனஞ்சயன் வியப்பு மேலிட, "உண்மையா அப்பா", என்றான். ஏனென்றால், அவன் என்றும் கலையரங்கிற்குச் சென்றதில்லை.

உடனே பழையாறைக்கிழார், "அதுமட்டுமில்லை. தனஞ்சயா! அங்கு நீ உனது கவிதைத் திறனைக் காட்டவேண்டும்; கேட்பவர் மெய் சிலிர்க்கப் பாடவேண்டும். எனது இருபது வருடப் பயிற்சி எல்லோராலும், அதுவும், மன்னர் குலோத்துங்க சோழரால் போற்றப் படவேண்டும். கவனம் வை", என்றார்.

"அப்பா பழையாறைக்கிழார் பாணர் குல வேந்தனின் மைந்தன் தனஞ்சயன் தந்தையின் பெயரை எடுத்து விட்டான் என்று எல்லோரும் கூறும் வண்ணம் எனது திறமையைக் காட்டுகிறேன்; ஆனால்......"

"ஆனால் என்ன?"

"சபையில் நான் பாடும்போது எதிர்ப்பு இருக்காதே?"

"அதெல்லாம் ஒன்றும் இருக்காது. நான் உன் அருகிலேயே அமருகிறேன். தைரியமாக இரு."

பிறகு தந்தையும் தனயனும் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த சமயம் அரண்மனைச் சேவகன் ஒருவன் வந்து, "ஐயா" என்றான்.

அரண்மனை ஆளைக் கண்டதும் பழையாறைக்கிழார், "என்ன விஷயம்?", என்று ஆவலுடன் வினவினார்.

"இன்று கலையரங்கிலே மாமன்னருக்கு முன்னால் அரண்மனை நாட்

டியக்காரி சித்ரா நாட்டியமாடப் போகிருளாம். அவள் ஆட்டத்திற்கு பதம் பாடும் பொறுப்பு தங்களுடையது என்று கலையரங்க நிர்வாகி சொன்ஞர். வேறு ஒன்றுமில்லை,'' என்று கூறிச் சேவகன் சென்ருன்.

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த பழையாறைக் கிழார் திடீரென்று, '' தனஞ்செயா! இன்று நீதான் 'பதம் பாட வேண்டும் ! நடனத்தை ரசிக்கும் மன்னன் உனது இசையைக் கண்டு இரங்க வேண்டும். மற



வாதே! உன்னைத் தயார் படுத்திக் கொள்,'' என்றதும் தனஞ்செயன் தான் கலையரங்கத்தில் எவ் விதம் நடந்து கொள் ள வேண் டும் என்ப தைப் பற்றி மனப்பாடம் செய்யஆர ம்பித் தான். அதாவதுதா ன் பதம் பா டும் பொழு து பாட்டின் உட் கருத்து முதலில் கட வுளைப்பற்றி யும் பிறகு மன்னரைப் பற்றியும் புகழுரை யாக இருக்க வேண்டும் என எண் ணினன்.

மன்னரின் மதிப்பு க்கு ஆளாகஎவ்விதம் நடக்கலாம் என்ப தைப்பற்றியே சிந்தித் தான்.

கலை யரங்கத்திலே கவிஞர்களும், பாவ லர்களும், வேதவிற் பன்னர்களும், இயல், இசை, நாடகக் கலை ஞர்களும் குழுமியி ருந்தனர்.

எதிரே மன் னரின் சிம்மாச னமும் அதற்கு மேலே சரஸ்வ





தியின் திருவுருவப் படமும் இருந்தன. மன்னரின் ஆசனத்திற்கு இடது பக்க நேர் வரிசையில் பழையாறைக்கிழார் முதல் ஸ்தானத்திலும் அவருக்குப் பக்கத்தில் தனஞ்செயனும் அமர்ந்திருந்தனர். மற்றும் ஏராளமான கலைஞர்களும், கவிஞர்களும் அமர்ந்து மன்னரின் வருகையை எதிர் நோக்கியபடி 'குசு குசு' வென உரையாடிக் கொண்டிருந்தனர்.

மன்னர் வரும் நேரம், சபையில் மௌனம் நிலவியது. சேவகன் விருதுகள் கூறி எதிர் கொண்டு அழைக்க மெய்காப்பாளர், மந்திரிகள், தளபதிகள் புடைசூழ, சூரியஉதயம் போல் வந்தான் சோழ சாம்ராஜ்யத்தின் மாமன்னன் குலோத்துங்க சோழன். வேங்கையின் உரு பொறித்த ஆசனத்தில் அமர்ந்ததும் வெண் சாமரம் வீசிடப் பணிப்பெண்கள் ஆயத்தமாயினர்.

### சமுதாயத் தொண்டு!

ஒவ்வொரு நாகரீக நாட்டிலும் இந்த ஐந்து மகத்தான அறிவியல் பதவிகள், வாழ்வின் அன்றாடத் தேவைகளை ஒட்டி இருந்து வருகின்றன.

போர்வீரன் வேலை நாட்டைக் காப்பது; பாதிரியார் அதற்குக் கல்வி புகட்டுவது; வைத்தியருக்கு வேலை, அதை ஆரோக்கியமாக வைத்திருப்பது; வழக்கறிஞருக்குப் பணி, நீதியை நிலைபெறச் செய்வது; வியாபாரியின் கடமை, அதன் தேவைகளைப் பூர்த்தி செய்வது.

தேவைப்படும்பொழுது நாட்டிற்காக உயிரை விட வேண்டிய கடமையும் இவர்களுக்கு உண்டு.

—ஜான்ரஸ்கின்

மாமன்னர் சபையை ஒரு முறை கண்ணோட்டம் விட்ட பிறகு தனது காலடியில் இருந்து நீண்ட ரத்தினக் கம்பளத்தைப் பார்த்தார்.

உடனே கலையரங்க நிர்வாகி எழுந்து, "நாட்டியக்காரி சித்ரா வரலாம்", என்றதும் மன்னருக்கு வலப்புறத்தே உள்ள ஒரு அறையின் திரை விலகியது.

இதுவரை அரண்மனை நாட்டியக்காரியைப் பார்த்தறியாத தனஞ்செயன் தனக்கு நேர் எதிர்புறத்தில் திரை விலகியதும், அங்கு வாசலில் நின்ற சித்ராவைக்கண்டதும், "இவ்வளவு எழிலுள்ளவளா?" என்று வியந்தான். மேகம் விலகி முழுமதி காட்சியளிப்பது போலிருந்தது அவளது முகம்.

அங்கிருந்து அவள் மெல்ல அடிமேல் அடிவைத்து அசைந்து அரங்கிற்குள் வரும்போது தனஞ்செயன் மனம் கவிதை பாட ஆரம்பித்து விட்டது. அதோடு அவள் சிறு புன்னகையை தனது உதட்டில் நெளிய அன்னநடை தனிலே அசைந்து வரும் பூங்கொடியாள் மின்னல் கொடியிடை தன் மேனி தனை எடுத்துக் காட்ட சின்னக் குவியிதழால் சிறு ஒலியில் நகைக்குங்கால் கன்னம் குழை குழைந்து கருத்தை கவர்வது ஏன்? என அவன் மனம் கேட்டது. வைத்த கண் வாங்காமல் அவளையே நோக்கியபடி இருந்தஅவனைக் கலையரங்க நிர்வாகியின்குரல்உலகிற்கு திருப்பியது. "சித்ராவின் நடனத்திற்கு பாணர்குல வேந்தர் பதம் பாடுவார் என எதிர் பார்க்கிறோம்", என்றார்.

உடனே பழையாறைக் கிழார் எழுந்து, "எனது வழித் தோன்றல் இசை வல்லபன் தனஞ்செயன் பதம்பாடச் சம்மதித்துள்ளான். ஆகையால் அவனே பாடட்டும்" என்றதும், மன்னரின் கண்கள் தனஞ்செயனை நோக்கின. தனஞ்செயன் எழுந்து அவருக்கு வணக்கம் செலுத்தி விட்டு அமர்ந்தான்.

ஆனால்அவன் மனமும் கண்களும் சித்ராவை நாடின.

தொண்டையைக் கனைத்து ராகம் இழுத்து பக்கவாத்தியங்களை தனது குரலோடு இணைத்துக் கொண்டு ஆரம்பித்தான்.

"நெஞ்சோடு நெஞ்சாகி வெண்
சாமரம் வீசி
கொஞ்சிக் குலாவிட நீ வா-வா"

சித்ராவின் காலிலிருந்த சதங்கை பேசத் தொடங்கியது. எடுத்ததும் கடவுள் வாழ்த்து பாடுவான் என்று நினைத்த பாணர்குல வேந்தர் திகைத்தார்.

"நினைந்து நினைந்து நெஞ்சம்
உருகுதே!
நினைவெல்லாம் உன்மீதன்றே"

உண்மையிலே காதல் கொண்டவன் பாடுவது போல் இருந்தது. அவனது பாட்டுக்கு மன்னர் என்ன சொல்லுகிறாரோ என்று பழையாறைக்கிழார் பதட்டமடைந்தார். ஒரு பதத்திற்கு அபிநயம் பிடித்த சித்ரா அடுத்த பதத்தை எதிர்நோக்கி பாட்டை உற்றுக் கேட்கத் தயாராக இருந்தும், அவன் பாடாததைக் கண்டு அதே பதத்திற்கு இரண்டாம் முறையாக அபிநயம் பிடித்தபடி கைவளையல்களைக்குலுக்கினாள். தன்னை மறந்த நிலையிலிருந்த தனஞ்செயன் உணர்வு பெற்றான்.

"கைவளை குலுங்கக் கண்டேன்
காரிகையே-என்
கருத்தும் அதிரக் கண்டேன்
பேரிகைபோலே"

'டும் டும்' என்ற மிருதங்க ஒலி பேரிகை ஒலியைப்போல் கேட்டது, அவனது பாட்டினாலும் அவளது நடனத்தினாலும்.

"மெய்யது சிலிர்த்தது-உந்தன்
மேனி அசைவினாலே"

மெய்சிலிர்க்க அவன் பாடியது எதனால் என்று அவனுக்கே புரியவில்லை.

"தையலே கேளடி எந்தன்
மையலை நீ அறியாயோ
வையக மாந்தர் தம் வாழ்
வதும்
பொய்யாமே-நினைந்து
நினைந்து நெஞ்சம் உருகுதே"

அவனது இந்த அடியைக் கேட்டு மன்னர் உட்பட அனைவரும் அவனை நோக்கினர். ஆனால் அவனோ சித்திரப்பதுமைபோல் அசையாமல்அமர்ந்திருந்தான். பழையாறைக் கிழாருக்கோ இருப்புக் கொள்ளவில்லை. மன்னரிடம் அவர் புகழ் பாடி பெருமை கொள்வான் என நினைத்ததற்கு மாறாக மங்கையிடம் தாபங்கொண்டானே என நினைந்து உள்ளூர வருந்தினார். தனஞ்செயன் தனது குரலையும் பாட்டையும் உச்சஸ்தாயியில் தூக்கினான்.



"எங்க வீட்டிலே என்னைக் 'கிளி' மாதிரி வளர்த்தார்களாக்கும்!"

"நீ இதையே தினமும் திருப்பித் திருப்பிச் சொல்றது லேருந்தே அது தெரியுதே!"

பாடல் முடிந்தது. ஆட்டமும் நின்றது; அனைவரின் கண்களும் அவனையே நோக்கின. அவனோ தனது தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தான். கலையார்வம் கொண்ட குலோத்துங்க சோழர் தனை மறந்து, ஆட்டத்தையும் பாட்டையும் ரசித்தார். ஏதோ புத்துணர்வு பெற்றவர் போல் தனஞ்செயனை நோக்கினர்.

தலையைத் தொங்க விட்ட தனஞ்செயனோ சித்ராவின் பாதங்களை நோக்கியவாறு அதே நிலையில் இருந்தான். "பிரமாதம். அற்புதமான பாடல்! அருமையான கருத்து! அரசியலிலே ஈடுபட்டு சஞ்சலம் அடைந்த என் உள்ளத்திற்கு சஞ்சீவி போன்ற கவிதை! தனஞ்செயா! உனது கவிதை பாடும் ஆர்வத்தை மெச்சினேன். இதைப் பெற்றுக் கொள்", என்று கூறிய மன்னன் தனது கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழற்றி தாம்பாளத்தட்டை வைத்திருந்த சேவகனிடம் நீட்டினர். சேவகன் அதை தட்டில் ஏந்திக் கொண்டு தனஞ்செயன் எதிரில் வந்தான். தனஞ்செயனோ எழுந்து நின்றான். "ஏற்றுக்கொள் தனஞ்செயா", என்ற மன்னரின் குரல் கேட்டு முத்து மாலையை எடுத்தவன், தனது கழுத்தில் அணியவில்லை. தனக்கெதிரே நடனக்கூடத்தில் நின்றிருந்த சித்திராவின் அருகில் வேகமாக சென்று அவள் கழுத்தில் அணிந்துவிட்டு வந்தமர்ந்தான்.

யாரும் எதிர்பார்க்காத இந்த செயலைக்கண்டு பழையாறைக்கிழார் திடுக்கிட்டார். மாமன்னரே அவனைப்பிரமையுடன் நோக்கி "தனஞ்செயா", என்றதும் தனஞ்செயன் எழுந்து, "மன்னிக்க வேண்டும் மன்னவா! எனது பாட்டிற்கு உயிர் கொடுத்தது அவள் ஆடற்கலைதான். அதனால்தான் அவளுக்குத் தங்கள் பரிசை அர்ப்பணித்தேன்", என்றதும், கோபக்கனல் தெரிக்கும் தனது கண்களால் பழையாறைக்கிழார் அவனை நோக்கினர். பெற்ற தந்தைக்கு தந்தையாயும் உற்ற குருவாயும் உள்ள தன்னை மறந்துவிட்டு ஒரு மங்கைக்கு தனது புகழை வார்த்தானே என்று உளம் பொருமினர், பழையாறைக்கிழார்.

"இன்று கலையரங்கம், சபை கலையட்டும்", என மன்னர் கூறி அங்கிருந்து சென்றதும் பழையாறைக் கிழார் தன் மகனை நோக்காமல் தனித்துக் கிளம்பி விட்டார். இதைத் தனஞ்செயன் கவனிக்கவில்லை; ஆனால் அவனது கண்கள் அப்பொழுதும் சித்ராவையே நோக்கின. இன்று எப்படியாவது அவளைச் சந்தித்துப் பேசவேண்டும், என முடிவு செய்து அவனும் அரங்கத்தை விட்டு வெளியேறினன். அவன் எண்ணியது போல் அவளை அவளது மாளிகையிலேயே தனி அறையில் சந்தித்தான். தனிமையில் இருந்த இருவரில் ஆடிய களைப்பால் துவண்டு விழும் பூங்கொடிபோல் இருந்த சித்ராவை நோக்கி முதலில் பேசியது தனஞ்செயன் தான்.

"சித்ரா! நான் ஏன் இங்கு வந்தேன் தெரியுமா?"

பதிலில்லை. மௌனமாக அங்கிருந்த கட்டிலின் முகப்பை பிடித்தபடி நின்றிருந்தாள். அவள் தன் மௌனத்தை கண்ட தனஞ்செயன் கட்டிலில் போய், அவளுக்கு முன்னல் அமர்ந்ததும், அவள் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். "பேச மாட்டாயா சித்ரா! எனது எண்ணத்தைப் புரிந்து கொள்ளமாட்டாயா?", என்று குரலில் குழைவும் ஏக்கமும் நிரம்பக் கூறினன். சட்டெனத் திரும்பியவள், "தெரியும், இந்த உடல்தானே தங்கட்கு வேண்டும். ஒரு தாசியிடம் உடல் இன்பத்தை தவிர வேறு எதை எதிர்பார்த்து வந்தீர்கள்", என 'வெடுக்'கெனக் கேட்டாள்.

உடனே அவன் அவளது கரத்தைப் பற்றியபடி, "சித்ரா! சிற்

றின்ப சுகத்துக்காக உன்னை நாடி வந்ததாகப் பதறுகிருய். ஆனுல் உண்மையில் உன்மேல் நான் காதல் கொண்டுள்ளேன். அந்தக் காதல் கடிமணம் வரை போயும் விடலால. அந்தக் காதல் எப்படி வந்தது என்பாய்? உன்னை இன்று காலைதான் கண்டேன். இது வரை இல்லாத உணர்வு ஒன்றைப் பெற்றேன். கடவுள் வாழ்த்துப் பாடலை மறந்தேன்; உன் மேல் காதல் கானமழையைப் பொழிந்தேன். இது என் குற்றமா?'' என்று குழந்தைபோல் கேட்டவன் அவளை அப்படியே தன்னருகில் அமர்த்திக் கொண்டான். உடனே அவள், 'தங்கள் மனதை அறிந்து கொண்டேன். ஆனுலும், அது வீண் கனவு'' என்ருள்.

"கண்ணே! காட்டாறு போல் பெருகிவரும் என் காதலுக்கு அணை போட உன் ஒருவளால்தான் முடியும்! இது எப்படி வீண் கனவாகும்?''

"எனக்கும் தான் அந்த எண்ணம் உள்ளது'' தனிமை...காளைப் பருவம், வாலைப் பருவம்; பூவுலகை மறந்த நிலையில் பூவும் வண்டும் போல் இன்பத்தேனைப் பருகினர்.

அவள் பேசினுள்: "நானே அரண்மனைக்குச் சொந்தமானவள்; தாசி குலத்தில் உதித்த நடனப் பெண். நான் ஒருவரைக் காதலிக்கவோ கடிமணம் புரியவோ முடியாது''.

"நீ மட்டும் பெண்ணில்லையா, உனக்கு மட்டும் உணர்ச்சி அலைகள் இல்லையா?''

"இருந்து என்ன செய்வது? சட்டம் அப்படி''

"சட்டத்தை மீறுவோம்''

"அரசாங்கத் தண்டனை பொல்லாதது''

"காதலின் பரிசு என ஏற்போம்''

"வீண் பிடிவாதம்''

"விவேகமற்ற வாழ்வை மாற்றுவது வீண் பிடிவாதமா?''

சித்ரா சிந்தனையிலாழ்ந்தாள்; தனஞ்செயனே விடவில்லை. "சித்ரா உனது முடிவை நாளைக்குள் எதிர்பார்ப்பேன். நமது திருமணம் கூடிய விரைவில் இருக்கும்''

"இப்போதே கூறிவிடுகிறேன் அது சாத்தியமில்லை''

"அப்படியானுல் தனஞ்செயன் உயிருடன் இருக்க மாட்டான்'' இப்படி கூறிக்கொண்டேவாசற்படி வரை சென்ற தனஞ்செயனை "நில்லுங்கள்'' என்றதும், நின்ருன். உடனே சித்ரா "இந்த முடிவை மாற்றமுடியாதா?'' என்ருள்.

"வேறு வழியில்லை''

"அப்படியானுல் நாளை வரை அவகாசம் தாருங்கள்''

"உன் இஷ்டம்''

"ஆணையிட்டுக் கூறினுல்தான் நம்பமுடியும்''

"கலைமகள் மீது ஆணை! நான் நிலையிழந்து தற்கொலை செய்து கொள்ள மாட்டேன். நிலமகளும் நெடுவானமும் சாட்சி''

சித்ராவிடமிருந்து பிரிந்து சென்ற தனஞ்செயன் வீட்டுக்குச் செல்ல விரும்பவில்லை. அவன் மனம்என்றுமில்லாத குதூகலத்துடன் இருந்தது. அதோடு அவன் மனம் தனது எதிர்காலத்தைப் பற்றியும் ஓயாது சிந்தித்தது. அவன் சித்ராவைத் தான் திருமணம் புரிந்து கொள்ள வேண்டுமென முடிவு செய்து கொண்டான்.

முழு நிலவு தன்னெளி வீசு பவனிவந்துகொண்டு இருந்த நேரத்தில் 'சல சல'வென சப்தத்துடன் காவேரி நதியில் நீர் நிலவின் ஒளியில் பிரகாசித்தபடி ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றங்கரையில் உள்ள வெண்மணற் பரப்பில் அமர்ந்தான். நிசப்தமான அந்த வேளையில் தனஞ்செயனின் சிந்தனை கலைந்தது. ஆற்றில் யாரோ இறங்கும் சப்தம், சட்டென திரும்பி பார்த்தான் தனஞ்செயன்.

திரும்பியவன் திடுக்கிட்டு ஒரு பெண்மணி ஆற்றில் இறங்குவதைக் கண்டு எழுந்து ஓடினுன். ஆனுல் அவளோ ஆற்றில் விழுந்து விட்

டாள். தனஞ்செயன் நீச்சல் தெரிந்தவனுகையால்அவளைக்காப்பாற்றும் பொருட்டு அவனும் குதித்து விட்டான்.

அவளோ ஒரு பயங்கர கோரச்சூழலில் சிக்கி உள்ளே சொருகப்பட்டாள். தனஞ்செயனும் அந்த சூழலுடன் போராடி அவளை மீட்க தன் உயிரையும் மதிக்காமல் போராடினுன். இரண்டு கைகளாலும் அவளைத் தாங்கியபடி கரையில் கொண்டுவந்து கிடத்தினுன். மேலாடை யெல்லாம், ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு இருந்த அவளை நோக்கிய தனஞ்செயன் திடுக்கிட்டான். சந்தேகம் தீர அவள் முகத்தை புரட்டியவன், "சித்ரா" என்று வாய்விட்டலறினுன்.

காதள வோடிய கயல்விழிகள் சற்றே அசைந்தன...'சித்ரா'

கண்திறந்து பார்த்தாள்...தனஞ்செயனின் உருக்கண்டு அவள் இதழ்க்கடை ஓர் இளநகையை உதிர்த்தது....

'ஸ்வாமி.....தாங்கள் மூட்டிய காதல் தீயின் வேகம் நெஞ்சைச் சுட்டது...தாங்க முடியவில்லை...சமூகம்...நமது வாழ்க்கை இன்பமாக அமைய அனுமதிக்காது...". பேச முடியாது திணறினுள் சித்ரா...

ஓரிரு நிமிடங்கள் கரைந்தன...

'தற்கொலை ...... செய்து கொள்ள...!"

வார்த்தைகள் முடியவில்லை......

அவள் வாழ்வு முடிந்து விட்டது....

சிறிது நேரம் பித்தனைப் போல் 'கல்'லாக இருந்தான் தனஞ்செயன்...

உயிர் பிரிந்த தன் உயிரோவியத்தைத் தூக்கிக் கொண்டான். அவன்முகத்தில் ஓர் உறுதி பளிச்சிட்டது. 'ஒரு நாள் வாழ்வு' என்று முணு முணுத்தபடி நீரை நோக்கி நடந்தான்...

'சல சல' வெனச் சிரித்தபடி ஓடிக் கொண்டே இருந்தாள் காவேரி அன்னை !



புதுக்கோட்டை கலையரசி பேபி இந்திரா, ஜனவரி மாதம் 28-ம் தேதி, தேனும்பேட்டை காங்கிரஸ் பொருட் காட்சி அரங்கில் நடனம் ஆடுவார்கள். திருக்கோகரினம் திரு. கலியாண சுந்தரம், பேபி இந்திரா வின் நடன ஆசிரியர்.

# ஜெயா டயர் ரீடிரேடிங், பெரியகுளம்.

மதுரை மாவட்டம்



உங்கள் டயர்களை
குறைந்த செலவில்,
நவீன முழுவட்ட
இயந்திரங்களைக்
கொண்டு
அனுபவமிக்க
ஆட்களால் இயங்கும்

**ஜெயா டயர்
ரீடிரேடிங்கில்
புதுப்பியுங்கள்.**

புரொப்ரைட்டர்ஸ்:

**S. G. ஜெயராஜ் நாடார் & சன்ஸ்,**

பெரியகுளம், மதுரை மாவட்டம்

---

தபால் பெட்டி எண்: **69**

நாடு முழுவதும் மாத்திரமல்ல......
நாநிலம் எங்கும் புகழ் பெற்றவை
எங்கள் பட்டாசு ரகங்களும்,
மத்தாப்பு வகைகளும்......!
பொங்கல், குடியரசு விழாக்களில்
உங்களை அவை மகிழ்விக்கும்!!

# தி ஸதர்ன் இண்டியா எக்ஸ்போர்டிங் கம்பெனி

**சிவகாசி.** (தென் இந்தியா)

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

# SRI RANGA VILAS
# GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(*Incorporated in 1922*)

**PEELAMEDU P.O. COIMBATORE**

| | | |
|---|---|---|
| SPINDLES | : : | 36,368 |
| LOOMS | : : | 88 |

SPINNERS OF:

Superior kinds of yarn from 2$^s$ to 80$^s$ counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

# பூத்தெழில் பொழியட்டும்

"ஷேரலி"

1. எண்ணமெலாம் ஈர்த்துவிட்ட ஏந்தி ழையாள்;
இசைபாடும் யாழொலியாள்; மிளிரும் தங்க
வண்ணத்தாள்; அன்புளத்தாள் மலர்கன் னத்தாள்;
மஞ்ஞையதின் அங்கத்தெ ழிலுடை யாள்;நீள்
கண்ணுள்; மா லையிட்டோன் பக்கம் வந்துக்
"கலைவடிவே" என்னத்தான் இதோபா ருங்கள்
வண்ணமுடன் நான்படைத்த பொங்க" லென்று
மகிழ்வுடனே இட்டுநிற்கும் காட்சி என்னே!

2. செங்கரும்பும் செந்நெல்லும் செழித்து நின்றுத்
தென்றலினில் தேமதுரக் கீதம் பாடும்;
பங்கமிலா பேரழகுப் பாவை போன்று
பார்தன்னில் பண்பாடும் பாவ னையில்;
எங்குமசைந் தாடிநிற்கும் தருணந் தன்னில்
இன்னகையை இன்பமுடன் இளவல் சிந்திச்,
செங்கதிரோன் வருங்காலை யறுத்துச் சென்று
தெம்மாங்கால் தம்களிப்பைத் தெளிப்ப தென்னே!

3. "செந்தமிழாள்; சிரிப்பொலியாள்; சிந்தை யள்ளும்
தேமதுரக் கீதத்தாள்; மழலை பேசும்
பொன்வடிவாள்; முத்தமிழாள்; எழிலின் கன்னிப்
பருவத்தாள்; இயற்றமிழாள்; இன்பத் தோடு
என்னிதயந் தனைத்தொட்டக் கலையின் கோட்டம்;..."
என்றுபுகழ் இசைபாடும் தமிழ ணங்கின்
இன்மடியிற் தவழ்ந்துவரும் தமிழர் தன்னின்
இன்பவிழா இப்பொங்கற் புதுவி ழாவாம்!

4. பொங்கட்டும் பைங்கூழும், புதுமை, இன்பம்,
புத்துணர்வு, தமிழ்ச்செல்வம், கலைகள் யாவும்;
மங்கட்டும், இனவெறியும், பொய்யும், சூதும்
வன்நெஞ்சும், புறங்கூறும் பழக்க மெல்லாம்;
தங்கட்டும் தேன்கனிபோல் தேசந் தோறும்
தாழாத ஐக்கியமும், அன்பும், பண்பும்;
பொங்கலிடும் பொன்னுளாம் இன்று தொட்டு
பூத்தெழில் சொரியட்டும்; வளர்ந்தோங் கட்டும்.

# கலைப்பகுதி

விமர்சனம்

## மகதல நாட்டு மேரி

கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய பைபிளின் ஏடுகளில் காணப்படும் அருமையான ஓர் வரலாறு, மகதல நாட்டு மேரியின் கதை... கலிலேயா நாட்டுத் தளபதி பிலிப். அவன் காதலி மரியாள்......விந்தை மனிதன் ரிசாரியோவில்லி...ராணி ஏரோதியாள்......கடமை தவறாத சிமியோன் இவர்கள் முக்கிய பாத்திரங்கள்...புனிதர் 'ஏசு' கிறிஸ்துவுக்கும் கதையில் ஓர் முக்கிய இடம் உண்டு.



அருமையான உலகமறிந்த உயர்ந்த கதை.

பரத்தையாயிருந்த பின் பரமனின் பாதத்தைப் பூஜித்து பக்தி மார்க்கத்தில் திரும்பிய மகதல நாட்டு மேரி மனம் மாறிய, உள்ளம் உருக்கும் உயிர்க்காவியம். இக்கதையைப் பார்ப்பவர்கள் பரிகசித்து வெறுக்கக்கூடிய கேலிச் சித்திரமாகத்தான் திரை காண்பிக்கின்றது.

திரையுலகில் பல படங்களின் தோல்விக்கு முக்கிய காரணம் கதையைச் சரியான முறையில் கையாளாமையே யாகும். அதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது இப்படம். உலகில் எல்லோரும் எக்காரியத்தையும் செய்துவிட முடியாது. தமக்குத் தெரியாததும், தம் சக்திக்கு மேற்பட்டதுமான கதையொன்றைப் படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஜெய்குமார் பிக்சர்ஸ் படுதோல்வி யடைந்திருப்பது பரிதாபத்துக்குரியது.

அடிப்படை சரியில்லாமற் போகவே, இப்படத்தில் முக்கிய பாக மேற்று நடிக்கும் ஸ்ரீராம், வீரப்பா, சகாதேவன், வி. பி. எஸ். மணி, வீரன் சிமியோனாக நடிக்கும் ரகுவீர் முதலியோரின் நடிப்பு சோபிக்கவில்லை. முகத்தில் பால் மணம் மாறாத பாலகனின் தோற்றந்தான் காணப்படுகிறது!

ராணி ஏரோதியாளாக நடிக்கும் ரேவதியின் நடிப்பு மிகவும் மட்ட ரகம்!

மாவீரன் பிலிப்பிடம் தன் காதல் நாடகம் வெற்றி பெறாததினால் தோழியிடம் சினங் கொள்ளும் காட்சி நகைச் சுவையைத்தான் அளிக்கின்றது!

ஜி. சகுந்தலாவிற்கு நல்லதோர் பாத்திரம் கொடுத்திருக்கலாம்.

கதையின் முக்கிய பாகத்தை ஏற்று நடித்திருக்கிறார் குமாரி தங்கம்.

மகதல நாட்டு மேரியாக நடிக்க அவர் எந்த விதத்தில் தகுதியுள்ளவர்? கவர்ச்சியுள்ள தோற்றம் உண்டா? அல்லது காதலர்களுக்குக் கன்னல் மொழிப் பாவையாகக் காட்சியளிக்கிறாரா? மாவீரன் பிலிப்பை "அத்தான்" என்று அவர் அழைப்பது அர்த்த மற்றதாகக் காணப்படுகிறது! குமாரி தங்கத்தின் ஆடை அலங்காரம்—இயேசுவிடம் மன்னிப்புக் கேட்கும் காட்சியிலும், பிந்திய காட்சிகளிலும்—அருவருக்கத் தக்கதாய் இருக்கின்றது. ஒரு புனிதமான கதையில் ஆடை அலங்காரமும் அதற்குத் தகுந்தாற் போல் இருக்க வேண்டாமா?

இயேசுவைச் சிலுவையில் அறைவதற்காகக் கொண்டு போகும் காட்சி மிகவும் கண்டிக்கத் தக்கது. அவரைப் பின்பற்றிச் செல்லும் பட்டினிப் பட்டாளத்தை தயார் செய்தவர்கள் மிகவும் அறிவாளிகளாக இருக்க வேண்டும்!

படத்திலுள்ள ஒன்பது பாட்டுக்களில் கடைசிப் பாட்டு மட்டும் கேட்பதற்குச் சுமாராக யிருக்கின்றது. கவிஞர் கம்பதாஸனின் கருத்து நிறைந்த பாட்டுக்களை நல்ல விதமாகக் கையாளாத குற்றம் சங்கீத டைரக்டரைச் சார்ந்ததாகும்.



வசனகர்த்தா சாம். டி. தாசன் அவர்களின் முதல் முயற்சி இது. அவர் பைபிளிலுள்ள பல அரிய வசனங்களை சேர்த்திருந்தால் நலமாயிருந்திருக்கும்.

படத்தின் தோல்வியை மொத்தத்தில் டைரக்டர் எஸ். எஸ். ராஜன் தலையில்தான் போடவேண்டும். கதை சம்பந்தமான எல்லா விஷயங்களையும் நுணுக்கமாக ஆராய்ந்து ஒன்று சேர்க்க வேண்டிய பொறுப்பு அவருடையதன்றோ!

குறைகள் நிறைந்த இப்படத்தை பார்க்கும் கிறிஸ்தவ ரசிகர்கள் மனம் நொந்து போவார்கள்; கோபமும் அடையக்கூடும். ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர், "ஜெய் குமார் பிக்சர்ஸ் தெரியாமல் செய்து விட்டார்கள். அவர்களை மன்னியுங்கள்", என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

—பி.எக்ஸ்.ஆர்.

# ஸ்ரீ காளீஸ்வரி பயர் ஒர்க்ஸ்,

**சிவகாசி.** (தென் இந்தியா)

'சீனத்துப்பட்டாசு'—அது அந்தக் காலம்!

'சிவகாசிப் பட்டாசு'—இது இந்தக் காலம்!

பட்டாசு உற்பத்தியில் பாரதத்தை முன்னணியில் நிற்க வைக்கும் பெருமை எங்களுடையது!

**உங்களுக்கு எமது**

## பொங்கல் வாழ்த்துக்கள்!

---

AT YOUR SERVICE

Grams : CORONATION

Phone : 54

# THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

**POST BOX NO: 2. SIVAKASI.** (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: **HOOGHLY INK Co, Private, Ltd.**

# நாட்டியம்

ரஞ்சன், பி.ஏ., எம்.லிட்.,






செழிப்பும் சீர்குலேவும்:—கி. மு. 5-வது நூற்ருண்டிலிருந்து படிப்படியாக உயர்ந்த நிருத்தியக்கலே, கி. பி. இரண்டாவது நூற்ருண்டில் நன்ருகச் செழித்துவிட்டது.

இதன் பின்புதான் வெளி நாட்டவர் படையெடுக்கலாயினர். அவர்களுடைய செல்வாக்கு உயர்ந்தது. தேசமெங்கும் கலே வளர்ச்சி தடைப் பட்டுப் போயிற்று. பெயருக்கு நிருத்தியம் என்றிருந்து பின்பு செம்மை குறையலாயிற்று. பலஇடையூறுகளுக்கு இடையிலேயும் கி. பி. 8-வது நூற்ருண்டுவரை இந்திய நிருத்தியக் கலே, தன் அழகிய வடிவம் குன்ருதிருந்தது என்று கூறமுடியும். தொன்று தொட்டே இந்தியக்கலேகளில் மாகாணத் தன்மைகள் படிந்திருந்தன, ஆயினும் முக்கியமான பிரிவுகள் மூன்றே வழங்கி வந்தன. ஒன்று ஆரியருடைய கலாசாரம்; அது ஈரான் வரை பரவியிருந்தது, இரண்டாவது திராவிட கலாசாரம்; அது தென்னிந்தியாவிலும் இலங்கை, சுமத்திரா, ஜாவா முதலிய இடங்களிலும் பரவியிருந்தது, மூன்ருவது மங்கோலியருடையது; இது சீனு, திபேத், பர்மா, ஆகிய இடங்களில் பரவியிருந்தது; இம்முறையாக வங்காளம், அஸ்ஸாம், பர்மா ஆகிய இடங்களில் நிருத்தியம் மங்கோலியப் பண்புடன் அமைந்திருந்தது. இம்மூன்று கலாசாரங்களும் மாறி மாறிச் செல்வாக்குப் பெற்றுப் படிப் படியாக முன்னேறிச் சிறந்து விளங்கின.

தென்னிந்தியாவும்—நாட்டியமும்:—இந்தியாவின் வடபகுதியில் இக்கலே காலப்போக்கில் பெரிதும் துன்புற்றது. அந்த சோக வரலாறு விரிவாகக் கவனிக்கத் தக்கது. தென்னிந்தியக் கலேமீது காலம் தன் செல்வாக்கைப் புகுத்தக்கூடவில்லே

இதற்கு முக்கிய காரணம், தேசத்தின் இயற்கை யமைப்பேயாகும். படையெடுப்பவர்கள் பெரிய பெரிய மலைகளையும் காடுகளையும் கடந்து வருவது கஷ்டமென்று இப்பகுதியை விட்டு விட்டனர்போலும்! இயற்கை இம்முறையில் நமக்குச் செய்துள்ள உதவி மிகப் பெரியது.

தமிழர், நாடகத் தமிழென மொழியினுள் ஒரு வகையுண்டாக்கி இக்கலைக்கு வேண்டிய வசதிகளை அமைத்துத் தந்தனர். சிலப்பதிகார மென்னும் தமிழ்க் காப்பியம் இன்றும் பண்டைய தமிழரின் நாட்டியத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்து நிற்கின்றது. பொதுவாகத் தென்னாட்டில் நாட்டியக் கலையின் உண்மையான பண்பு காப்பாற்றப்பட்டு வந்தது. அதை நம் நாட்டியக் கலையின் கையிருப்பு என்று சொல்லலாம். தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த மெலட்டூர், சூலமங்கலம் போன்ற கிராமங்களில் இந்தப் புராதனக் கலையின் சின்னத்தை இப்பொழுதும் காணலாம். கோயில்களிலும், சமஸ்தானங்களிலுந்தான், இக்கலை, பரம்பரையாக இத்தொழிலைக் கொண்ட தேவ தாஸிகளாலும், நடர்களாலும் காப்பாற்றப் பட்டது. அந்தணர் வகுப்பைச் சேர்ந்த நல்ல சங்கீத அனுபவ முள்ள பாகவதர்கள் திருவிழாக் காலங்களில் புராண சரித்திரங்களை நாடக ரூபமாக அமைத்து நாட்டியமாடி வந்தனர். அவர்கள் எந்தக் கருத்தையும் ஹஸ்தாபி நயத்தின் மூலம் உன்னதமான முறையில் வெளியிட முடியும்.

இவ்விதம் தென்னாட்டில் தன் மூல வடிவம் சிறிதும் மாறிவிடாத நிருத்தியக்கலை, தன்னிடம் குறைபாடுகளையும், கொள்ளத் தலைப் பட்டது. நிருத்தியத்திற்கு அவசியமான இலக்கியப் பயிற்சி இல்லாமல் கலையில் சிறப்புக் குறைந்தது. சிறந்த கலைஞரா யிருந்த போதிலும் அத்துடன் இலக்கியப் பயிற்சியில்லாத குறை, அவர்களைக் காலத்துடன் நடந்து செல்ல முடியாமல் செய்து விட்டது.

x x x


**மதுரை ஜில்லாவில்**

ஏஜன்ட் இல்லாத ஊர்களுக்கு கீழ்க்கண்டவருக்கு விண்ணப்பிக்கவும்:—

**M. P. மருதப்பன்**

புதுமை ஏஜன்ட்,
6, வெங்கட்ராம பூசாரி சந்து
சிந்தாமணி ரோடு,
மதுரை.

**கோவை ஏஜன்ட்:—**

போன்: 580

**M. வணங்காமுடி**

காரியதரிசி, இளைஞர் காங்கிரஸ்.
21/426, ரெங்கே கவுடர் தெரு,
கோயம்புத்தூர்.

உண்மையான
மணத்திற்கும் ருசிக்கும்...

# பி.வி. சாம்பார் பொடி

P. வெங்கடாசலம் காண்டிமெண்ட்ஸ்
1, பிராட்வே, மதராஸ்.

தேனம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சிச் சாலை
போது டேலிபோனுக்கு எதிரில் உள்ள
எங்கள் கடைக்கு த்வருது விஜயம் செய்யுங்கள்.

தென்னாட்டின் தலைசிறந்த அச்சகம்

# நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர்ரோடு, : : சிவகாசி.

தபால் பெட்டி நெ. 30

போன் : 58 & 75

தந்தி : "லித்தோகிராப்"

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஒர்க்ஸ், ஜவுளி, காபி, டீ, மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபில்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்ட்டூன்களும், லித்தோ விலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்ஸெட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். கவர்ச்சிகரமான பலவர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாணப் பத்திரிகைகள் ரெடிமேடாக ஸ்டாக் வைத்திருக்கின்றோம்.

## கிரிஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரி

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

தந்தி : "இங்கோகிராப்" : : சிவகாசி

தந்தி : 'ஜுவல்லர்ஸ்' போன் : 49



பவுன், தங்கம், வெள்ளி
வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி

கிளைகள் : சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

# ஸ்பூட்னிக் வாண்டுகள்!

—: வெடி வால் விச்சு :—

நீலகண்டன் ஏழாவது வகுப்பு படிக்கிற பையன். அவனை எல்லோரும் 'நீலு... நீலு' என்று கூப்பிடுவார்கள்.

நீலு படுசுட்டிப் பயல்... பெரிய போக்கிரி......குரங்கு மாதிரி மரம் ஏறுவான்...நண்டு மாதிரி பீச்சிலே ஓடுவான் ... சுறுமீன் போல ஏரியிலே நீந்துவான்...வயது பன்னிரெண்டு இருக்கும்...

அவனுக்கு ஒரு நண்பன்., பெயர் ராமன்... அவனை 'ராமு, ராமு' என்று செல்லமாகக் கூப்பிடுவார்கள்... அவனும் நீலு மாதிரியே பெரிய வால்தான்!

இரண்டு பேரும் ஒரு நாள் பீச்சுக்குப் போனார்கள்... நீலுவும், ராமுவும் மணலில் வீடு கட்டியும், ஓடி ஆடியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்...



திடீரென்று ஜனங்களெல்லாம் ஒரே கூட்டமாக நின்று கொண்டு வானத்தைப் பார்ப்பதை இரண்டுபேரும் கவ

னித்து அந்தப் பக்கம் போனார்கள்...

கூட்டத்திலே நெருங்கி நின்று கொண்டு இரண்டு பேரும் வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள்...அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை..

நீலு மெதுவாக ஒரு பெரிய வரை, 'அது என்ன ஸார்.. பார்க்கறீங்க?' என்று கேட்டான்.

அவர் திரும்பிப் பார்த்து விட்டு, 'போடா...வாண்டுப் பயலே!' என்று சொல்லி விட்டு மேலே பார்க்கத் தொடங்கி விட்டார்!

ராமு இன்னொருவரைக் கேட்டான்... அவருக்குப் பதில் சொல்லக் கூட முடியவில்லை..

நீலுவுக்கும், ராமுவுக்கும் ரொம்பக் கோபம் வந்து விட்டது!

'நமக்குத் தெரியாமல் இவர்கள் என்ன பார்க்கிறார்கள்?' என்று கேட்டுக் கொண்டே வீட்டிற்குப் போனார்கள்....

x x x

மறுநாள் மாலை இரண்டு பேரும் பீச்சுக்கு மறுபடியும் போனார்கள்...ஆனால் இப்பொழுது அவர்கள் இரண்டுபேருக்கும் அந்தப் புதிர் என்ன என்று தெரிந்துவிட்டது.

பறக்கும் சந்திரன் அல்லது ஸ்பூட்னிக்கைத் தான் ஜனங்கள் தெரிகிறதா என்று பார்க்கிறார்கள் என்று நீலுவின் அப்பா அவர்களுக்குச் சொன்னார்.

நீலுவும், ராமுவும் பெரியவர்களைப் பழிவாங்கவே மறுநாள் பீச்சிற்குப் போனார்கள்.

இருட்டும் வரை காத்திருந்து விட்டு, இரண்டு பேரும் ஓர் மூலையை நோக்கி ஓடினார்கள்.

'டேய் ... நீலு ...அதோ பார்!' ஸ்பூட்னிக்'!' என்று கூவினான் ராமு...

நீலுவும், ராமுவும் மேலே பார்த்தபடி நின்றனர்...அவ்வளவுதான்! கொஞ்சநேரத்தில் அவர்களைச் சுற்றி ஓர் பெரிய கூட்டமே கூடிவிட்டது! ஆனால் நீலுவும், ராமுவும் மெதுவாக நழுவி விட்டார்கள்!

இப்படி அன்று இரவு ஒன்பது மணிவரை, நீலுவும், ராமுவும் பல கூட்டங்களைக் கூட்டினார்கள்! பாவம், பெரியவர்கள் எல்லோரும் கழுத்து வலிக்கு மறுநாள் 'அமிர்தாஞ்சனம்' வாங்கினார்களாம்!

எப்படி! 'ஸ்பூட்னிக்' வாண்டுகளின் வம்பு பார்த்தீர்களா?

O

---

## நன்றி அறிவிப்பு

காயல்பட்டினம் மர்ஹூம் அ.க. முகம்மது அப்துல் காதிர் அவர்கள் 3—12—57ல் காலமானதை முன்னிட்டு தந்தி, தபால், பொதுக் கூட்டங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எங்களின் நன்றி. தனித் தனியே பதில் எழுத இயலாமைக்கு மன்னிக்கவும்.

செ. யி. சாமுலு லெப்பை,

அ. பு. செய்யது முஸ்தபா

---

Phone Nos. Madurai 356 Periakulam 22
Kodaikanal 56 Ammayanaickanoor,
(Kodairoad) P.C.O. Extension 1

*Avail your immediate opportunity to visit*

# KODAIKANAL

FAMOUS HEALTH RESORT IN SOUTH INDIA
AT 7000 FEET.

## OUR BUSES & LORRIES PLY TO KODAIKANAL

*FROM:*

MADURAI — PERIAKULAM — DINDIGUL & KODAIKANAL ROAD.

Our buses provide comfortable journey over the distance of fifty miles (20 miles on plains & 30 miles on picturesque ghat section full of Natural Sceneries). The buses are plying at convenient timings, start at the correct time and reach the destination in time.

*Note.* Tickets are issued direct to the hill station Kodaikanal from all stations in India and Ceylon. Return tickets are issued by the railway during season period at a concession rate for visiting Kodaikanal.

We are plying regular lorry service to other important stations besides our many bus-routes connecting important places in Madurai and Ramnad Districts.

Kodaikanal,
1st Jan. 1958.

S. G. JAYARAJ NADAR,
*Managing Director,*
Kodaikanal Motor Union (Private) Ltd.

# 30

## ஆண்டுகளாக நாடெங்கும்

## உழவர்கள் நம்பி வாங்குவது

**PSG**



**பம்பிங் செட்**

- குறைந்த செலவு
- சிறந்த உழைப்பு
- நீடித்த சேவை
- ஓசையில்லாத ஓட்டம்

விரங்க ளுக்கு எழுதுங்கள் :



**பி. எஸ். ஜி.**

**இண்டஸ்டிரியல்ஸ் இன்ஸ்டிடியூட்**

பீளமேடு போஸ்டு, கோயமுத்தூர், தென் இந்தியா.

# சித்திரப் பாவை

**நக்கீரன் பி. ஏ., (சட்டக் கல்லூரி மாணவர்.)**

'கமலா, அதோ பார். சாந்தம் தவழும் சித்தார்த்தரின் அந்த முகத்தைப் பார். ஆடாதே, ஹூம். அசையாதே. புருவங்களிலே ஏன் இந்தப் படபடப்பு! இதழ் ஓரத்திலே ஏன் இந்தச் சுணக்கம்... அடடா, உனக்கு எத்தனை முறை சொல்வது 'ஆடாதே ஆடாதே' என்று. வண்ணத் தாளில் ஒரு வளைவு வளர்வதற்குள் எத்தனை முறை நெளிவது?'

"போ அத்தான். இது என்னால் முடியாது. நான் என்ன செப்பால் அடித்த சிலையா. ஆடாமல் அசையாமல் இருப்பதற்கு. ஹூம். ஹூம். நேரமாகி விட்டது அத்தான். மாமி தேடுவாள். மாமா கோபிப்பார்,"



"ஐயோ, கமலா— உனக்கு எத்தனை முறை சொல்வது. கலை விழாவிற்கு இன்னும் நாட்கள் ஏழு கூட இல்லை. எப்படியாவது இன்னும் மூன்று நாட்களில்சித்திரம்பூர்த்தி ஆக வேண்டும்.

அத்தான் நம்முடைய திருமணம் எப்போது எப்போது என்று, என்னைத் துளைத்தாயே. அதற்குப் பதில் தான், படத்தின் முழு வெற்றியும், கலை விழாவில் உன் பெரும் பரிசும், அது உன் பரிசமாகமாறும் மகிழ்ச்சியும்......

ஹூம்—எவ்வளவோ எண்ணி இருமாந்தேன். அத்தனையும் ஏமாற்றம்... போ, கமலா போ. உன் மாமி உன்னைத் தேடுவாள். உன் மாமா உன்னை வைவார். போம்மா போ".

"அத்தான் என் மீது கோபமா?"

"நான் யார் உன்னைக் கோபிக்க"

"அத்தான் என் மீது கோபமா?"

கமலாவின் கண்களில் கண்ணீர் முட்டிற்று. இன்னும் சிறிது நேரம் சேகர் தாமதித்து இருந்தால் நிச்சயம் கண்ணீரைக் கொட்டியே இருப்பாள். ஆம். அவள் அழுதே இருப்பாள்.

"விளையாட்டுக்காகச் சொன்னேன். இதற்கா கண் கலங்குவது? பைத்தியக்காரி. கமலா. நான் கலை விழாவில் பரிசு பெறுவதை நீ விரும்புகிறாயா?"

"நான் விரும்பவில்லை என்று யார் உங்களுக்குச் சொன்னது?"

"அடடா, அதற்கில்லை. சொல்லமாட்டாயா? ஹூம் கொஞ்சம் சிரி. அட இன்னும் கொஞ்சம்."

கண்ணீருக்கிடையேதுன்பத்தைஅணுவணுவாக வென்று வெளிக் கிளம்பிய அந்த இளநகை மோகனமாக இருந்தது.

"கமலா, பரிசுப் பணத்தில் என்ன வாங்குவேன் தெரியுமா?"

"ஓ தெரியுமே. வர்ணத்தாள், தூரிகை, கண்ணைப் பறிக்கும் வண்ணக் கலவைகள், கண்ணாடித் தட்டு..."

"போதும். போதும்..."

"நான் சொன்னது சரிதானே அத்தான்"

"தவறு. மாபெரும் தவறு. ஹிமாலயத் தவறு"

"போங்கள் அத்தான். பின் என்ன வாங்க உத்தேசம்?"

"சொல்லட்டுமா?"

"சொல்லுங்களேன்"

"தாலி"

அவள் தலை நாணத்தால் கவிழ்ந்தது. ஏதோ ஒரு வகையான இன்பம் அவளுடைய மயிர்க் கால்களினூடே நுழைந்து உடல் முழுவதும் பரவுவது போன்ற உணர்ச்சி. அவளது இதயத்தில் யாரோ மின் சாரத்தைப் பாய்ச்சுவது போன்ற பிரமை. இன்பத்தில் முக்குளித்து எழுந்து விட்டது போன்ற தடுமாற்றம். உடலில் ஒரு வகை சிறு நடுக்கம். அவள் நாணத்தால் விழுங்கப் பெற்று ஓடி மறைந்தாள்.

மணித் துளி கால வெள்ளத்தில் கரைந்து அழிந்தொழிந்தது. சேகர் சிந்தனையின் சிகரமானான். அவனது இடைவிடா உழைப்பு அவனை உருக்குலைத்து விட்டது. விகாரத்தின் கிரலைக்கூட அவனது உடலிலே விட்டிருந்தது; தூரிகையும் கையுமாகச் சித்திரத்தின் முன் ஒளி மறைந்த பின்னும் அமர்ந்தபடி பரிதாபகரமாக இருமிக்கொண்டிருந்தான் சேகர்.

நாட்கள் வளர்ந்தன. வண்ணத் தாளில் சித்திரம் வளர்ந்து செழித்தது. கலை விழாவிற்கான கடைசி நாளும் வந்தது. ஏனோ சேகர் அந்த ஓவியத்தின் முன் சிலையாகக் கிடந்தான். அவன் நெற்றியிலே சிந்தனைக் கிரல்கள். அவனுடைய கீழுதடு பற்களிடையே சிக்கித் தவித்தது. அடிக்கடி தலைமயிரைப் பிய்த்துக் கொண்டான். அமைதியின்றிச் சிந்தனையினூடே கிடந்து தவித்தான். அவன் முன் ஒரு பொற் சித்திரம். ஆனால் அதற்குக் கண் இரண்டும் இல்லை. அந்த இடம் வெறிச்சோடிக் கிடந்தது. அந்தச் சித்திரத்திற்கு வாய் மட்டும் அமைந்துவிட்டால்... நிச்சயம் அந்தச் சித்திரம் சித்திரக் கலைக்கோர் வெற்றி!

சேகர் அந்தச் சித்திரத்திற்குக் கண் கொடுக்கப் பார்த்தான். வரைந்தான். அழித்தான். வரைந்தான். இன்னும் அந்தச் சித்திரம் குருடாகவே இருந்தது. அதற்குள் அவனை வாட்டி வதைக்கும் இருமல் வந்து, அவனைப் படுத்தலாயிற்று. 'லொக்...... லொக்' கென்ற அந்த இருமல் ஒலிக்கு இன்பம் கூட்டுவது போல் 'கல்... கல்' என்ற சதங்கை ஒலி கேட்டது.

"அத்தான், நீங்கள் சித்திரம் வரைந்தது போதும். படுத்துக் கொள்ளுங்கள்"—கமலா படுக்கையைத் தட்டிப் போட்டு, அவனை அழைத்துக் கொண்டுபோய் படுக்க வைத்தாள்.

'இப்படியா உடம்பைக் கெடுத்துக் கொள்வது?'' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள். பின் தன் மாமி வீடு போகப் புறப்பட்டாள். அவளை 'நில்' என்ற சேகரின் குரல் தடுத்து நிறுத்திற்று. சேகரின் பக்கத்தில் போய் நின்றாள்.

அவளை ஏன் அப்படிப் பார்க்கிறான்? இது வரை பார்க்காத உருவமா அவள்? இருந்தும் ஏன் அவன் அப்படிப் பார்க்கிறான்? கமலாவின் எண்ணங்கள் எங்கெங்கோ சிதறி உருண்டன; அவள் உள்ளத்தில் அச்சத்தை விதைத்தன. அவனிடத்திலே ஒரு வகையான இராட்சஸ வெறி, அது அவன் கண்களில் பளிச்சிட்டது.

"கமலா, அங்கே போய் உட்கார். ஹூம். சீக்கிரம். கொஞ்சம் இப்படி விழிகளைத் திருப்பு. கொஞ்சம் அப்படி. ஹா! அப்படியே. சபாஷ். பிரமாதம்."

சேகர் அசுர வெறியிலே மடமடவென்று கோடுகளை வரைந்து கொண்டே இருந்தான். அவள் அங்கே நின்று கொண்டே இருந்தாள், செய்யும் வகையறியாது.

சேகர் ஏட்டிலிருந்து விழிகளை எடுத்து, அவள் மீது பதித்தான்.

அவன் முகத்திலே வெற்றியின் பூரிப்பு மிதந்து கொண்டிருந்தது. அவன் இதழ்க் கடையில் ஒரு புன்னகை நெளிந் தோடி ஒழிந்தது.

"நீ போகலாம். நாளை இதே நேரத்திற்கு மறக்காமல் வந்துவிடு. அதிசயம் ஒன்று காத்திருக்கிறது"

சேகர் மறுபடியும் சித்திரத்தில் தன்னை மறந்தான்.

குறிப்பிட்ட நேரமும் வந்தது. அவளும் வந்தடைந்தாள். காதல் நெஞ்சு கொண்ட கரங்கள் இரண்டு தன்னை வா வென்று வரவேற்கும் என்று எண்ணி வந்தாள். ஆனால் அவளை வரவேற்றது அன்பு முத்தங்களும், ஆசை வார்த்தைகளுமல்ல; முனகல் ஒலி.

சேகர் ஜுரம் தாளமுடியாது 'ஐய்யோ, அம்மா", வென்று முனகிக் கொண்டிருந்தான். அவள் மெல்ல அந்தக் கயற்றுக் கட்டிலின் மீது அமர்ந்தாள். அவளுடைய தளிர்க்



கரத்தால் அவன் நெற்றியைத் தொட்டாள். ஏனோ அவள் கரம், நோயாளியின் உடம்பைவிட நடுங்கிற்று. அவள் கன்னக் கதுப்புகளில் கண்ணீர் கரையிட்டது. அவள் கண்களில் நீர் முட்டிற்று. அவனுடைய கைகள் எதையோ சுட்டிக் காட்டிற்று. அவள் நடந்தாள்.

ஓவியத்தின் அழகை மறைத்தது, அதன் திரைச் சீலை. திரை விலகிற்று. சித்திரம் பளிச்சிட்டது அவளைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது. அது அத்தனை அழகு!

ஓவியக் காட்சிக்கான நாளும் வந்தது. கலைக் காட்சியும் வந்து போய்விட்டது. ஆனால் அந்தச் சித்திரம் மட்டும் அந்த இடத்தை விட்டு நகரவே இல்லை. சேகரும் படுக்கையைவிட்டு எழுந்திருக்க வில்லை. அவனுக்குக் காய்ச்சல் அதிகமாகி விட்டது. பிதற்றவும் ஆரம்பித்து விட்டான். அந்த முனகலும் 'கமலா, கமலா' என்று அவன் போட்ட கூப்பாடும் அந்தச் சின்னஞ் சிறு அறையில் பரிதாபமாக ஒலித்துக் கொண்டிருந்தன. அவள் அவன் பக்கத்தில் மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

x x x

கிட்டத்தட்ட மாதம் ஒன்று ஓடி விட்டது. ஆனால் சேகரின் உடல் நிலை மட்டும் தேறியதற்கான அறிகுறிகள் ஒன்றும் தெரிய வில்லை.



கமலா ஒரு முடிவிற்கு வந்து விட்டாள். இனி நாடி பார்ப்பவரை நம்பிப் பயனில்லை, 'ஸ்டதாஸ்கோப்' ஆசாமியைத் தேடுவது என்று. அதற்குப் பணம்?

கருத்து குழம்பிக் கிடந்த கமலாவைப் பார்த்துப் பரிகசிப்பது போல் இருந்தது, அந்தச் சித்திரம். 'ஏன் கலங்குகிறாய்? இதோ நான் இருக்கிறேன்', என்று பேசுவது போன்ற மன மயக்கம் அவளுக்கு. மெல்ல அந்தப் படத்திடம் சென்றாள். அதை ஒரு துணியில் சுற்றினாள்.

வெளியே சிறு தூரல், கும்மிருட்டு. இருட்டைக் கிழித்துக் கொண்டு அந்தத் தூரலில் நடந்து கொண்டிருந்தாள், கமலா.

புண்ணிய கோடி பஞ்சாலையின் சொந்தக்காரர். அந்த வட்டாரத்தில் மிகப் பெரிய புள்ளி. காருண்ய வள்ளல், கலைப்பெருமையைத்தெரிந்தவர் என்ற விருதுகளைப்பெற்றவர். அவரது எடுபிடிகளின் மூலம் இது போல விளம்பரம் ஆனவரும்கூட, அவருடைய மாளிகையின் முன் நின்று கொண்டிருந்தாள், கமலா.

அவளுக்கு உள்ளே போகத் தயக்கமாக இருந்தது. சேகரின் நிலைமை அவளைத் துணியச் செய்தது. துணிந்து உள்ளே நுழைந்து விட்டாள்.

வராந்தாவிலிருந்த சோபாவில் வெற்றிலையை அசை போட்டுக் கொண்டிருந்த புண்ணியகோடிக்குத் தன் கண்களையே நம்ப முடிய வில்லை. அவர் முன் சித்திரப் பாவையோ, கொல்லி மலைப் பேரழகோ, நடந்து வருவது போன்ற பிரமை.

கமலா நிலைமையை விவரித்துத் தான் படம் விற்க வந்திருப்பதைத் தெரிவித்தவுடன், புண்ணியகோடிக்கு நிலைமை புரிந்து விட்டது. அதைப் பயன் படுத்திக் கொள்ள அவர் தீர்மானித்து விட்டார். அவளுடைய பரிதாபகரமான

நிலைமை அவருக்குத் தைரியத்தைத் தந்தது. அவர் துணிந்து விட்டார்.

கமலா, அந்தச் சித்திரத்தைச் சீமான் புண்ணியகோடியிடம் நீட்டினுள். அவர் கண்கள் குத்திட்டு நின்றன. சித்திரத்தின் மீதல்ல, அந்தச் சித்திரப்பாவையின் அங்கங்கள் ஒவ்வொன்றின் மீதும். சித்திரம் அவர் கை நழுவிக் கீழே விழுந்தது. அவளைத் தாவி அணைத்தார். எதிர்பாராத இந்த ஆபத்தைக் கண்டு கமலா திகைத்தாள். திமிறினுள். கத்தினுள். கதறினுள். போராடினுள். இடறி விழுந்தாள். பாவம்! அவள் தோற்ருள்! பாவி அவன் சென்ருன்.

அவள் முன் பத்து பத்து ரூபாய் நோட்டுகள் சலசலத்தன. அவளுடைய விக்கல் ஒலி அந்தப் பயங்கர மிருகத்தின் குகையின் நான்கு சுவர்களிலும் பரிதாபகரமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது.

x x x

கிழமைகள் முப்பது ஓடி ஒளிந்தன. சேகர் தேறிவிட்டான். திருமணத்தை நடத்திவிடத் துடித்தான். ஆனல் அவள்......

கமலா செத்தே விட்டாள். ஆம்! இப்பொழுது அவள் ஒரு நடைப் பிணம். அவளிடத்தில் இதுகாறும் இருந்த, துடிதுடிப்பும், பரபரப்பும் 'கலகல' வென்ற சிரிப்பொலியும், எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன. அவள் முகத்திலே ஒருவகைப் பீதியின் சாயல் புரையோடிக் கொண்டிருந்தது. அவள் முகம் பேயறைந்தவளின் முகம் போல் வெளிறிக் கிடந்தது. அந்த விழிகள் குறுகுறுப்பு இழந்து, ஒளி மங்கிய இரண்டு பீங்கான் கோலிகளைப் போல் பரிதாபமாகக் காட்சியளித்தன.

இதனை, இடைவிடாது தன் பக்கத்திலிருந்து உழைத்ததின் கடும் உழைப்பின் விளைவு என்று கருதினுன் சேகர். திருமணம் ஆனபின் சரியாகி விடும். அந்த மகிழ்ச்சியில்


மதுரையில் போட்டோ எடுக்கச் சிறந்த இடம்

**விக்டோரியா ஸ்டுடியோ**

(ஸ்தாபிதம் 1925)

3, அப்பாவு பிள்ளை சந்து, மீனாட்சி கோயில் தெரு, மதுரை.

**Karim Watch Company**

*Head Office* :- 53-A, Usman Road

*Branch* :- 16/7, Srinivasa Road

T. NAGAR - MADRAS-17.

Dealers in all kinds of Watches & Clocks. Sales and service. Rates Moderate. Delivery prompt.

காரம், மணம், குணம் நிறைந்த எமது

**லிங்கம் தர்பார்**

பீடியை வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :

டி. ஆர். தர்மலிங்கம், திருவல்லிக்கேணி, மதருஸ்-5.

**32** இனிய மணம் கமழும்

**302 ஜவ்வாது**

**3002 பத்திகள்**

—: தயாரிப்பாளர்கள் :—

S. V. செல்லக்கனி & கோ

மீனுக்ஷி கோயில் தெரு, மதுரை.

புத்துயிர் பெற்று விடுவாள் என்று நினைத்தான், சேகர்.

சேகர் ஒரு வார காலமாய் அவளைப் பார்க்க முடியவில்லை. வேலையின் பளு வெகு தூரம் அவனை அவளிட மிருந்து விலக்கி வைத்திருந்தது.

ஆனல் அன்று—நாளைக்கு அவனுக்கும் அவளுக்கும் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவன் சன்னிதானத்தில் நண்பர்கள் முன்னிலையில் திருமணம். திருமண எண்ணமும், நண்பர்களின் உதவியும் அவன் இதயத்தில் இன்பத்தை பொங்கி வழியச் செய்தது. இந்த மகிழ்ச்சியை யாரிடமாவது சொல்லிப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று துடித்தான். இல்லையெனில் அவனுடைய இதயமே மகிழ்ச்சிக்கொந்தளிப்பால் உடைந்து சுக்கல் சுக்கலாகி விடும் போல் இருந்தது. ஓடினன், ஓடினன்.

'கமலா',வென்று குரல் கொடுத்தான், சேகர். கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்த கமலாவைப் பார்த்தவுடன் அப்படியே கல்லாகச் சமைந்து விட்டான்.

அவள் முன் சிறு தகரப் பெட்டி.



"என்னய்யா, நீ கூட பொங்கல் இனம் கேக்கறே?"

"அது 'பேஷன்' சார்"

அதில் தாறு மாருகத் துணிகள் சிதறிக் கிடந்தன. அவள் கைகளிலே ஒரு படம். அவள் அவனைக் கண்டவுடன் விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

சேகருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மெல்ல அவளை நெருங்கினன். அவள் தோள் பட்டையை அழுத்தி 'கமலா—கமலா' என்று செல்லமாக அழைத்தான். அவனுடைய அன்பு அவளை மேலும் மேலும் குலுங்கிக் குலுங்கி அழச் செய்தது. அந்த விக்கலினிடையே 'எனக்குக் கல்யாணமேவேண்டாம்', என்று அலறினள். அவன் உள்ளத்தில் யாரோ தீக்கங்குல்களை வாரி இறைப்பது போன்ற வலி...

"கமலா, உனக்கென்ன பைத்தியமா?"

"அத்தான், எனக்கு ஏன் இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை? நான் சாக வேண்டும். நான் ஏன் இன்னும் செத்துப் போகவில்லை?" கமலா முகத்தை புதைத்துக் கொண்டு அழலானள்.

அவனல் இதைப் பொறுக்க முடியவில்லை. "கமலா, உனக்கென்ன பைத்தியமா? விஷயத்தைச் சொல்", என்று கத்தினன் சேகர். அவளுடைய மௌனம் அவனை மிருகமாக்கிற்று.

'பளார், பளார்' என்று இரண்டு மூன்று அறைகள் கமலாவின் கன்னத்தில் விழுந்தன. அவளைப் பிடித்துக்குலுக்கியபடி "என்ன நடந்தது, சொல்—என்ன நடந்தது சொல்" என்று கர்ஜித்தான் சேகர்.

'நான் கற்பிழந்தவள்'—அவள் அமைதியாகச் சொன்னள்.

அவன் தலை சுழன்றது. அவனது இருதய ஓட்டமே நின்று விடும் போல் ஆகிவிட்டது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டான். 'நீ...கற்...பி...ழந்...தவள்' வார்த்தைகள் எழுந்து உடைந்துச் சிதறின.

"நீங்கள் நோயால் தவிப்பதைக் காணச் சகிக்காமல், இந்தச் சித்திரத்தை விற்றுப் பணம் பெறலாம். டாக்டருக்கு அதைத் தரலாம் என்று போனேன். சித்திரம் வாங்குவான் என்று எதிர்பார்த்துப் போனேன். அவன் என்னையே சிதைத்து விட்டான்''.

'' யார் அந்தப் பாவி?''

'' புண்...ணிய...கோடி '' விக்கலிடையே வெளி வந்தது அந்த வார்த்தை.

சேகர் சிரித்தான். பயங்கரமாகச் சிரித்தான். ''புண்ணியகோடி, சீலமிகும் சீமான் புண்ணியகோடி. கமலா, அழாதே. நான் இருக்கும் வரை உன் வாழ்வு இருண்டு போக விடமாட்டேன்! காட்டு விலங்கால் சீரழிக்கப்பட்ட விளை நிலத்தை விட்டு விடுகின்றனரா? மண்ணை விட மங்கை அவ்வளவு கேவலமானவளா? பைத்தியக்காரி, அழாதே. ஆனால் நாட்டிலேயே நடமாடும் புண்ணியகோடிகளைப் போன்ற காட்டு விலங்குகள் அழிக்கப்பட வேண்டும். இதோ வருகிறேன்'', என்று அந்த இடத்தை விட்டு வெளியேறினான், சேகர்.

பக்கத்து வீட்டில் வம்பளக்கச் சென்ற மாமி இன்னும் வரவில்லை. அடுத்தத் தெரு ஜோசியனைப் பார்க்கச் சென்ற மாமா இன்னும் வீடு திரும்பவில்லை. அவன் அந்தப் பதைபதைக்கும் வெயிலில் ஓடினான்; நீதி சிரித்தது...புண்ணியகோடி பிணமானார்... அல்ல... சேகரால் ஆக்கப்பட்டார்... கருணையின் உருவான நீதிபதி சேகரின் 'உணர்ச்சிப் பூர்வக்' குற்றத்திற்கு ஏழு ஆண்டுகள் பிராயச் சித்தம் சிறையிலே செய்ய விதித்தார்...

அவன் விடுதலையாகும் நாளை எண்ணியபடி ஏங்கிக் கிடக்கும் கமலா... ஏழாண்டுகளுக்குப் பின் தான் இனி அந்தச் சித்திரக் கூடத்திலும், சித்திரப் பாவையினிடத்திலும் சிரிப்பைப் பார்க்கலாம்...

O


**சிறந்த மலிவுப் பதிப்புகள்**




| | |
|---|---|
| பார்த்திபன் கனவு 'கல்கி' | 1-50 |
| விக்கிரமாதித்தன் கதைகள் | 1-50 |
| அரபுக்கதைகள் | 1-50 |
| பாரதியார் கவிதைகள் | 1-50 |
| பாரதியார் கதைகள் | 1-50 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | 1-25 |
| பகவத் கீதை (பாரதியார்) | 0-75 |
| நேரு சுயசரிதம் | 2-00 |

**பாரதி பதிப்பகம்**

தியாகராய நகர், சென்னை–17.

**தேனாம்பேட்டை, காங்கிரஸ் கண்காட்சியில் எங்கள் 157-ம் நிர். ஸ்டாலிலும் எல்லாப் புத்தகங்களும் கிடைக்கும்.**

**"Standard Fire Works"**

*for*

QUALITY AND

SUPERB PERFORMANCE

**The Standard Fire Works Industries**

SIVAKASI (S. INDIA)

உண்மையில் உறுதியாக

குறைந்த செலவில்

உங்கள் வீட்டை கட்ட

இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு &
ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

# For Complete Range of Cotton Spinning Plant

## TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRAMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

*For Agricultural purposes.*

★

*ENQUIRIES SOLICITED*

**TEXTOOL COMPANY LIMITED**

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409

Telegrams: "TEXTOOLCO"


பீடி சக்கரவர்த்தி
கு.பி.சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
RAMSAIT
BEEDI
கு.பி.சொக்கலால்
முக்கூடல்
ராம்சேட்
பீடி
INDIA No.5901
CEYLON No.5929
BY
RAJAN & Co. SVKS.

# தேனாம் பேட்டைத் திருவிழா

ஏழை பங்காளன்

‘என்ன... சம்பளம் வாங்கியாச்சே... போக வேண்டாமா?’ என்ற குரல் என்னைப் பேப்பரைக் கீழே போட வைத்தது... திரும்பினேன்... கோமா நின்று கொண்டிருந்தாள்.

‘எங்கே போகிறது?’

‘தெரியாதது மாதிரிக் கேட்கிறீர்களே. ஊரே, திருவிழாவாகக் கிடக்கிறதே... எக்ஸிபிஷனைத் தான் சொல்கிறேன்.’

சரி; ஆபத்து வந்து விட்டது. சம்சாரக் கடலில் குதித்து விட்டு, செலவுப் புயலுக்குப் பயப்பட முடியுமா? பொன் விலங்கு தான், இருந்தாலும் அடிமைத்தனம் தானே!

‘தேவியார் கட்டளைக்குப் பிறகு அடியார் என்ன சொல்வது? புறப்படு, புறப்படு’ என்றேன். குதி போட்டுக் கொண்டே உள்ளே ஓடினாள் என் சிந்தைக்கினியாள்!

நீண்ட ‘க்யூ’ வரிசையில் நின்று கால் ஓய்ந்து, அரசாங்க பஸ்ஸின் அசைவால் உடல் நலிந்து, ஒரு வழியாகத் தேனாம்பேட்டையை அடைந்தோம்.

பிரயாணக் களைப்பை எல்லாம் கணப் பொழுதில் ‘**கட்ட பொம்மன் வாசலே**’ மாற்றி விட்டது. சிம்மக் குரலோன் சிவாஜி கணேசன், செம்மல் கட்டப் பொம்மனாக, கோட்டை வாயில் முகப்பிலே! அற்புதமான காட்சி!

நுழைவு சீட்டைப் பெற்றுத் திரும்பினேன்.

‘கட்டப் பொம்மன் வாயில்’ என்றால் தானே நல்ல தமிழ்?’ என்றாள் கோமா.

‘போடு, தமிழ்ப் பண்டிதை மாதிரிப் பேசுகிறாயே?’

பொருட்காட்சியின் உள்ளே நுழைந்தோம்!

ஒரே தலைகள் மயம்! ஏகக் கூட்டம்!

‘அதோ, அவள் புது மாதிரிக் கொண்டையைப் பாருங்களேன்!’ என்றாள் கோமா!

திரும்பினேன். அது என்ன சிகை யலங்காரமா! அலங்கோலமா! ‘இந்த ஜார்ஜெட்டைப் பாருங்கள். அவள் சோளி எப்படி இருக்கிறது? என்று துளைத்து விட்டாள்.

‘கோமு! கொஞ்சம் ஆட்களை விட்டுவிட்டுக் கடைகளைப் பாரேன்.’ இந்தக் கடைகளில் பலவற்றில் ஆர்ட் டைரக்டர் ஆர். ரத்தினமே வந்திருந்து கலை வேலைகளைச் செய்தாராம், என்று யாரோ பேசிக் கொண்டு போனார்கள்.

வளையல், சோப்பு, சீப்பு அலங்கார சாதனங்கள். சைனா பஜார் இங்கே வந்து விட்டதோ? இதைத் தானா பொருட்காட்சியிலும் பார்க்க வேண்டும்? என்று எண்ணிக் கொண்டே, ‘புக் இண்டஸ்டரி

கவுன்சிலில்' நுழைந்து நாலு புத்தகங்களை வாங்கிக் கொண்டேன். ஐந்து ரூபாயை 'மேக்கப்' சாமான்களாக மாற்றிக் கொண்டு கோமா வந்தாள். நான் ஒரு புத்தகக் கட்டுடன் வந்தேன்.

'சரி, சரி சீக்கிரம் நகரு.'

'ராட்சச நீருற்று' எங்களைக் கவர்ந்தது. அழகிய சிறு குளம். வளைந்து இதற்காகவே வளர்ந்தது போன்ற மரங்கள். இடையிலே ஊற்றுக்களின் உல்லாச வீச்சு. பி. எஸ். ஜி. பம்புகள் நிகழ்த்தும் அற்புதம்! 'இதோ பார் கோமா, இந்த பி. எஸ். ஜி. ஸ்டால் முகப்பைப் பார்வையிட்டோம். நேரு—பாபா எல்வாலில் சந்தித்த பொழுது எடுத்த படத்தை பூமிதான மண்டபத்தில் கண்டோம்.

'கிராம தானம் எங்களால் கொடுக்க முடியாதம்மா. ஒரு கிராம ராஜ்யம் பத்திரிக்கையாவது வாங்கிக் கொள்கிறோம்' என்று சேவகியிடம் ஓர் இதழை சிரித்துக் கொண்டே வாங்கினேன்.

மேலே நடந்தோம். நான் பத்திரிக்கை வாங்கியதற்குப் போட்டியாக பி. வி. சாம்பார் பொடி ஸ்டாலில் ஒரு பொட்டணம் கோமா வாங்கிக் கொண்டாள். ஒரு பேபி சோடாக் கலர், நான் குடித்துக் கொண்டேன்!



(திறந்த வெளி அரங்கின் தோற்றம்)

பிரமாதம் இல்லையா?'

உள்ளே நுழைந்தோம். தென்னிந்தியாவின் சிறந்த தொழில் ஸ்தாபனத்தில் உற்பத்தியான பல்வேறு கருவிகள்.

விரிசடைக் கடவுள் உரு! மேலே கங்கை! சித்திரத்தின் முன்னால் பி.எஸ்.ஜி. பம்பு நீரைப் பொழிந்து கொண்டிருந்தது.

'கங்கா தேவியைப் பார்த்தால் சினிமா ஸ்டார் சாவித்திரி மாதிரி இருக்கிறதே?' என்று குறும்பாகக் கேட்டாள் கோமா!

கால்நடை பராமரிப்பு இலாகா

'திறந்த வெளி அரங்கு' எங்களைக் கவர்ந்தது. 'இது ஆசியாவிலே பெரிய அரங்கு. 60' நீளம், 50' அகலம், பிறை வட்ட வடிவம், ஐயாயிரம் பேர் சாதாரணமாகப் பார்க்கலாம். இங்கேயே இருந்து பார்க்கக் கட்டணம் கிடையாது. உள்ளே போய் அமரத்தான் கட்டணம்' என்று ஓர் தொண்டர் விளக்கிச் சொன்னார்.

ஏதோ ஓர் நடனம் நடந்து கொண்டிருந்தது. சிறிது ரசித்து விட்டுப் புறப்பட்டோம்.

இதென்ன, மகாபலிபுரம் கல்

ரதம் மாதிரி இருக்கிறதே! ஓ! சென்னை அரசாங்க செய்தித் துறையா?

திருத்தணிக் குமரன்—எல்லைக் குமரி படங்களிடையே வரையப் பட்டிருந்த தமிழகத்தின் படமே எங்களைக் கவர்ந்து விட்டது.

உரிமை இழந்து, ஐம்பெரும் காப்பிய அணிகளை மறந்து அலங் கோலமாக இருந்த தமிழ்த்தாய் உருவம்; அடுத்து தமிழை ஆட்சி மொழியாக்கும் சட்ட சபைக் காட்சி; மூன்றாவதாக, உரிமை பெற்ற அன்னையின் பொலிவு மிக்க தோற்றம்.

'ஏன் இதில் தாய் அரியணையில் ஏறாமல் பக்கத்தில் நிற்கிறாள்?' கோமா கேட்டாள்.

'சட்டம் இன்னும் பூரணமாக அமுலாகவில்லை. பல்கலைக் கழகத் துணை வேந்தர் போன்ற பெரியவர் களின் சந்தேகம் தெளியவில்லை அல்லவா?' என்று பதில் கொடுத் தேன்.

தவறிய பெண்கள் மீட்புப் பணி ஸ்தாபனங்களின் பிரிவில், கோமா இரண்டு கைக் குட்டைகள் வாங்கிக் கொண்டாள். பெண் மனம் இரக் கம் நிறைந்தது அன்றோ?

க்ஷயரோக இன்ஸ்டிட்யூட்டில், ஒரு ரூபாய்க்கு 'எக்ஸ்ரே' படம் எடுக்கும் சேவை பற்றிய அறிவிப் புக் கண்டு, 'நல்ல சேவை' என்று எண்ணிக் கொண்டேன்.

புள்ளி விவர இலாகாவையும் கடந்து, நெய்வேலி லிக்னைட் கார்ப்போரேஷனில் நுழைந்தோம்.

'நமது நகர இலாகாவைப் பார்ப் போமே?' என்று உள்ளே போனோம். 'புழலேரித் திட்ட மாடல்' நன்றாக இருந்தது.

'தென்னிந்திய இரயில்வே' ஸ்டாலில் மலைப் பாதைப் போக்கு வரவு மாடலும், காதி இலாகாவில் 'அம்பர் சர்க்கா'வும் மிகவும் சிறந் துள்ளன. கிராமத் தொழில் போர் டில், புகையில்லாத அடுப்பு, ஜனதா குளிர் சாதனம், விசித்திர கூஜா போன்றவைகளைப் பார்த்தோம்.

அதோ! சென்னை சர்க்கார் போக்கு வரவு இலாகாவா? இது வும் நன்றாகத் தான் உள்ளது. பஸ்ஸிலேயே தங்கள் ஸ்டாலை அமைத்துள்ளனர். 'ஓ தபாலா பீஸ்! போலீஸ் ஸ்டேஷன்! இது ஒரு குட்டி நகரம் தான்'—கோமா ஆச்சரியப்பட்டாள்!

'தேனீக் கூடு என்ற பெயர் இதற்கு மிகப் பொருத்தம் தான்' என்றாள் கோமா, தொழில் வர்த்தக இலாகாவின் அழகிய ஸ்டாலைப் பார்த்து வெளி வரும் பொழுது.

'இன்னொரு நாள் வந்து பத்த மடைப் பாய், அப்பளக் கட்டு எல்லாம் வாங்க வேண்டும்!'

'திண்டுக்கல் பூட்டையும், ரஷ்ய மாதிரி பூட்ஸையும் சேர்த்துக் கொள்ளேன்!'

'மகாபலிபுரம் ஆயனச் சிற்பி வம்ச ஸ்தபதிகளின் சிற்பங்கள், நாச்சியார் கோவில் வெண்கல வார்ப்புக்கள் எல்லாம் பிரமாதம்' இப்படிப் பேசியபடியே, மராமத்து இலாகாவில் நுழைந்தோம். பிரம் மாண்டமான அணைக்கட்டு மாடல் கள்; நன்றாக அமைத்துள்ளார்கள்! சென்னை மாநிலத்தின் பெரிய பாலங்களை முகப்பிலே கொண்டு அருமையாக அமைக்கப்பட்டுள்ள, பெருவழிகள் இலாகாவை அடுத் துப் பார்த்தோம்.

போர்க் கருவி உற்பத்தி சாலைகள், சமாதான காலங்களில் தயாரிக் கும் கருவிகளைப் பார்த்துவிட்டு மீன் இலாகாவில் நுழைந்தோம்! 'இந்த மாதிரி 'கோல்ட்பிஷ்' சீக்கிரம் நமது மீன் தொட்டிக்கு வாங்கி விடவேண்டும்' என்று ஓர் உத்திரவைப் போட்டாள் கோமா! மின்சார சக்தியால் இயங்கும் கார்; இரண்டணாக் கட்டணம் என்றறிந்து உள்ளே போனோம். விஞ்ஞான முன்னேற்றத்தை விளம் பரப்படுத்தியபடி கார் டிரைவரில்லா

மல் போய்க் கொண்டிருந்தது.

'ஹனி...'ட்யூ' ஹனி !' என்றேன் விவசாய இலாகாவின் ஸ்டாலில்.

கோமதி திரும்பி முறைத்துப் பார்த்தாள். 'என்ன பொது இடத்தில் வந்து தேனே ! மானே ! என்று ஆங்கிலேயனைப் போல் கொஞ்சுகிறீர்கள் ?'

'ஐயையோ...உன்னைச் சொல்ல வில்லை. அதோபார் !' என்றேன். தேன் பாட்டிலைக் காட்டியதும் இலேசாகச் சிரித்துக்கொண்டாள்.

மின்சார இலாகாவை நோக்கி நடந்தோம்.

'டக்......டக்'

உள்ளே ஒரு ஆள் நுழைந்ததும் உடனே பதிவு செய்கிறது ஓர் இயந்திரம். மொத்தம் எத்தனை பேர் இந்த ஸ்டாலுக்கு வந்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள அமைத்துள்ளார்கள்.

மின்சார ரேகை சாஸ்திரியிடம் பலன் கேட்கப் பெரிய கூட்டம் !

கார் ஓட்டும் திறமையைப் பரீட்சித்துப் பார்க்க ஓர் அற்புத இயந்திரம். மின்சார ஸ்டாலைக் கடந்து வெளிவந்து 'டெலிவிஷன்' காட்சிப் பக்கம் வந்தோம்.

'ஜனதா காட்சி என்றால் 25 நயா பைசா. 'ஏர்கண்டிஷன்' காட்சி 50. எங்கே போகலாம் ?'

'போனால் போகிறது. 50 நயா பைசாவே வாங்குங்கள்.

அமெரிக்கா மாதிரி, நம் நாட்டில் வீட்டிற்கு வீடு 'டெலிவிஷன்' என்று வருமோ ? அது வருவதற்குள், சந்திர மண்டலத்தில் மற்ற நாட்டு மக்கள் குடியேறி விடுவார்கள் !

ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகளை விளக்கும் ஸ்டாலைப் பார்த்து. பாரத முன்னேற்றம் கண்டு பரவசமடைந்தோம்.

மாதர் நல இலாகாவில் ஓர் 'ஸ்ட்ராங்'...சாயா...

'இதோ நமது எல். ஜி. பெருங்காய ஸ்டால்' என்றாள் கோமா.

'அதோ 'பாரதி பதிப்பகம்' பார்' என்றேன். 'கலங்கரை விளக்குகள்' மாதிரியைப் பார்த்துவிட்டு, 'மாணவர் காங்கிரஸ்' ஸ்டாலில் நுழைந்தேன்.

'இது அவ்வளவும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் வரைந்த படங்களா ?' ஆச்சரியப்பட்டாள் கோமா.

ஓவியக் கலைஞர்கள் பாலு சகோதரர்களின் அற்புதக் காட்சியில் ஐந்து நிமிடம் என்று நுழைந்தவர்கள், ஒரு மணி நேரம் கழித்து வெளியே வந்தோம். பொருட் காட்சிக்குள்ளே, மற்றொரு கலைக் காட்சி! சினிமா நடுவில் வரும் 'நாடகம்' போல.

'அறிவுக்கு விருந்து! அழகுணர்ச்சிக்குப் படையல்!' என்ற எண்ணமே இக்கலைக் கூடத்தில் நமக்கு மேலோங்கும்.

கண்ணாடி வழியாகப் பார்த்து நாமே கட்டபொம்மனுக மாறுகையில்...வீரம் கொப்புளிக்கிறது.

நான் கட்டப்பொம்மன் ஆனால் என் மனைவி ஜான்ஸி ராணியாகி விட்டாளே! வீர நடை...கலை கண்ட களிப்புமின்னும் கண்களுடன் வெளி வந்தோம். பொருட்காட்சியைச் சிக்கனமாக திறம்பட அமைத்த நிர்வாகிகளைப் பற்றிய மதிப்பு என் மனதிலே நிறைந்தது.

நேரே 'பதிபக்தி' வாயில் வழியாக பொருட்காட்சியை நீங்கினோம்.

**மறுநாள்**. 'என்ன மொத்தம் எவ்வளவு செலவு ?' என்று ஆரம்பித்தாள் கோமா.

'கொஞ்சம்தான்! இரண்டு பத்து ரூபாய்களைத்தான் காணவில்லை.'

'அதில் பாதி உங்கள் செலவு.'

'இதோ பார்...எதற்கு வீண் சண்டை? கண்காட்சியைக் கண்டதால்உன் முகத்தில் நிலவுகிறதே புன்னகைஅதன் விளைவாக நிலவுகிறதே வீட்டில் சமாதானம். அதற்காக எவ்வளவு செலவு ஆனாலும் நான் கவலைப்பட மாட்டேன் ! சொக்க வைக்கும் சிரிப்பொன்றை மீண்டும் உதிர்த்தாள் கோமா.



197691

*Hearty*

*Pongal Greetings*

TO

**ALL OUR FRIENDS**
**AND CUSTOMERS!**

★

**Yennarkay Rajaratnam Charities,**

SIVAKASI.

சிங்காரமான **'லித்தோ'** அச்சு

வேலைகளுக்குச் சிறந்த இடம்!

செந்தமிழ் நாட்டின் பெருமை!

**தி ரத்தின விலாஸ்**
**லித்தோ பிரஸ்**

**சிவகாசி—தென் இந்தியா**

தேனும்பேட்டை
பொருட்காட்சி சாலையில்

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஸ்டாலில்

**பானங்களில் சிறந்த**

# பேபி மார்க்

சோடா & கிரஷ் அருந்துங்கள்.

: MANUFACTURERS :

**BABY AERATED WATER WORKS,**
**MADRAS-21.**

# "புரு" மார்க்
# தீப்பெட்டிகள்

வெண்மையான குச்சிகள் மழை காலத்திற்கும் காற்றுக்கும் உத்திரவாதமுள்ளவை




விற்பனை டிப்போக்கள் :

கோயம்புத்தூர், கடலூர், மதுரை, நாகப்பட்டினம், பாலக்காடு, பன்ருட்டி, பய்யனூர், திருச்சி, திருவாரூர், விழுப்புரம்.

தந்தி : 'LOTUS

**தி லோட்டஸ் மேட்ச் ஒர்க்ஸ்**

த. பெ. நெ. 52 : : சிவகாசி

# தேனும்பேட்டை பொருட் காட்சிச் சாலையில்

**147/148-வது ஸ்டாலில்**

குணத்தில் மேலானது

# L. G. - எல். ஜி.

**கூட்டுப் பெருங்காயம் மார்க்கைக் கவனித்து வாங்கவும்.**

லால்ஜி கோது & கம்பெனி
சௌக்கார் பேட்டை, மதருஸ்.

தலைமை ஆபீஸ் : பம்பாய் :: பிராஞ்சு ; கும்பகோணம்

5,00,000
கதிர்கள்

நெ. 80 வரை
நூல்கள்

# பருத்தி நூல்கள்

## மதுரை மில்ஸ் கம்பெனி
## லிட்., மதுரை.

மில்கள்:

மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்.

## கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான சகல விதமான நூல்கள்

விசேஷ ரகங்கள்: கயிறுகள் — விழுதுகள் — கித்தான்கள்-நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள்—தையல் நூல்—முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன.

மானேஜர்கள்:

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

**மதுரை**

போன்: 420 (4 லைன்) தந்தி: "ஹார்வி"



Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 283-A, T. H. Road, Madras-5.




இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

IC. 424

# THE LAKSHMI MILLS COMPANY LIMITED

Pappanaickenpalayam,

COIMBATORE.

Telephone : 18 & 818
Telegrams : 'LAKSHMI'

Branch at Kovilpatti : Telephone : 18
Telegrams : 'LAKSHMIMIL'

SPLINDLAGE AT { *Coimbatore—59,680 & Looms 200*
*Kovilpatti —51,120* }

★

*SPINNERS OF :*

**Quality Cotton Yarn $20^s$ to $100^s$ Combed and Staple Fibre Yarn**

●

*Manufacturers of :*

**GREY LONGCLOTH AND MULLS**

: MANAGING AGENTS :

**G. KUPPUSWAMY NAIDU & CO.,**

COIMBATROE.

# INSTALL

# DPF

# PUMPS

## DHANDAYUTHAPANI FOUNDRY PRIVATE LTD.,

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Phone : 219 - P. B. No. 278 - Grams : MOTORPUMP.

உலகப் பிரசித்திப்பெற்ற

## டாடா - மெர்ஸிடிஸ் – பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்

உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

**தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.**

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

## பாண்டியன்

**ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,**

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

# பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 1 | ஜனவரி 1958 | ஓசை 6


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **அரசியல் :** | | | |
| நவீன க்விக்சாட்டுகள்! | | ... | 6 |
| ஈரோடும், திரு அரங்கமும்! | | ... | 7 |
| தூங்குகிறதா, தொண்டைமான் திட்டம் | | ... | 11 |
| புதிய மேயரின் பொறுப்பு | | ... | 12 |
| **தொடர் கதைகள் :** | | | |
| காமனை வென்ற கண் | சுகி | ... | 17 |
| வள்ளியின் உள்ளம் | கு. ப. சேது அம்மாள் | ... | 65 |
| **கதைகள் :** | | | |
| பொங்கல் விரதம் | ஆர். பி. மல்லாரி | ... | 35 |
| மறுமணம் | சிற்பி | ... | 47 |
| ஒரு நாள் வாழ்வு | செல்வம் | ... | 81 |
| ஸ்பூட்னிக் வாண்டுகள் | வெடிவால் விச்சு | ... | 99 |
| சித்திரப் பாவை | நக்கீரன் | ... | 103 |
| **கட்டுரைகள் :** | | | |
| இயற்கை வைத்தியம் | என். எஸ். சுப்பையர் | ... | 14 |
| கிண்டிக்கு போவீர் | ஆரெஸ்ஸஸ் | ... | 29 |
| மாமிசம் உண்ணும் தாவரங்கள் | ஜி. வெங்கட்ராமன் | ... | 55 |
| தஞ்சையின் வீழ்ச்சி | டி. எஸ். சொக்கலிங்கம் | ... | 59 |
| தேனும்பேட்டை திருவிழா | ஏழை பங்காளன் | ... | 113 |
| **கவிதை :** | | | |
| பூத்தெழில் பொழியட்டும் | ஷேரலி | ... | 91 |
| **நாடகம் :** | | | |
| விரல் வீக்கம் ஏதுக்கடி? | ராஜன் | ... | 41 |
| **கலைப்பகுதி :** | | | |
| மகதல நாட்டு மேரி | பி. எக்ஸ். ஆர். | ... | 92 |
| நாட்டியம் | ரஞ்சன் பி.ஏ. எம்.லிட். | ... | 95 |


'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

# நவீன குவிக்சாட்டுகள்!




197691

# புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.

சென்னை — மார்கழி–தை — ஜனவரி 1958

## ஈரோடும், திரு அரங்கமும் !

முடிந்தது முதுகுளத்தூர்... இனியாவது தமிழகத்தில் அரசியல் அமைதி நிலவும் என்று எண்ணியவர்களுக்கு ஏமாற்றம்.

'புத்திசாலித்தனத்துக்குப் பெயர் பெற்ற தமிழகத்திலிருந்து சிலமாதங்களாக வரும் செய்திகள், நமக்கு வியப்பை அளிக்கின்றன' என்று பிரதமர் நேரு கூறும் அளவிற்கு ஏமாற்றம். 'ஜாதி ஒழிப்பு' என்ற போர்வையிலே, தமிழ் நாட்டிலேயே ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற ஒரு சிறுபான்மைக் கூட்டத்தாருக்கு விரோதமாகப் பலாத்காரப் பிரச்சாரம்—அதன் விளைவாகச் சில மோசமான செயல்கள். அன்பிற்கும், பண்பிற்கும், நீதிக்கும், நேர்மைக்கும் புகழ் பெற்ற செந்தமிழ் நாட்டின் வரலாற்று ஏடுகளில் கடந்த சில மாதங்களில் கறை படிந்து விட்டது.

x x x

சற்று சிந்தித்துப் பார்த்தால்—தமிழகத்திலே இந்தக் குழப்ப நிலைக்கு மூன்று முனைகளிலிருந்து தீய சக்தி கிடைப்பதைப் பார்க்கின்றோம்.

'நாமே நாட்டை ஆளப்பிறந்தவர்கள், மற்றவர்கள் நமது அடிமைகள்' என்று ஓர் இனத்திடையே பிரசாரம் செய்து, ஜாதி வெறியைக் கிளப்பிவிடும் திருப்பணியைச் செய்து வந்த ஸ்ரீ முத்துராமலிங்கத்தேவர் ஓர் புறம்.

'உயர்ந்த நிலையில் உள்ள இனத்தை ஒழித்து விடவேண்டும்' என்று மற்றோர் வகை பலாத்காரப் பிரச்சாரம் செய்து வரும் ஸ்ரீ ஈ. வெ. ரா. இன்னும் ஓர் முனையில்.

'இன்றுள்ள சமுதாய சம்பிரதாயங்கள், சனாதனப் பழக்கங்கள் அப்படியே இருக்க வேண்டும் ; தாழ்ந்த இடம் உயர்வதை சாணக்கிய தந்திரத்தால் தடுக்க வேண்டும்' என்று எண்ணியபடி சொல்லில் வெல்லமும், செயலில் கள்ளத்தனமும் காட்டிவரும் சக்கரவர்த்தியார் மூன்றுவது முனையில்.

இந்த மூன்று முனைகளும் சேர்ந்தே இன்றைய தமிழகத்தில் குழப்ப நிலை உண்டாகக் கூட்டாக உதவி இருக்கின்றன என்பதை விருப்பு வெறுப்பற்ற நடு நிலையான அரசியல் வாதி எவனும் மறுக்க மாட்டான், முடியவும் முடியாது என்பது உண்மை, வெறும் கற்பனை அல்ல.

'முதுகுளத்தூர் முனிபுங்கவரின்' திருவிளையாடல்கள் பற்றி நாம் தெளிவாக விமர்சித்து விட்டோம். அடுத்த இரண்டு முனைகள் பற்றியே இந்த இதழில் நமது சிந்தனை ஓடியிருப்பதை, 'ஈரோடும், திரு அரங்கமும்' என்ற தலைப்பே புலப்படுத்த வில்லையா!

x x x

'ஜாதி ஒழிய வேண்டும்' என்பதிலே இன்று கருத்து வேற்றுமை சமுதாயத்திலே இல்லை. ஆனால்? எந்த அடிப்படையில், எந்த வழியில் என்பதிலே தான் பிளவுகள்.

கொலை வெறி, கொள்ளை வழி-இதைக் கூறுகிறார்கள், ஈரோட்டுப் பாதையிலே செல்பவர்கள்.

சிறுபான்மையினரான ஓர் இனத்தின் மீது பலாத்காரம் காட்டுவது எவ்வளவு மோசமான 'நாஸிஸச் செயல்' என்பதை அவர்கள் எண்ணுவதாக நமக்குத் தெரியவில்லை. குருட்டுத்தனமாக ஓர் கொள்கையைப் பின்பற்றும் கொடுமையின் விளைவே இது.

சேரிகளை ஒழிக்கப் புதிய வீடுகள் கட்டுவது புத்திசாலித்தனம்...இருப்பதையும் எரிப்பதோ?

தாழ்ந்தவர்களை உயர்த்த இருக்கும் வசதிகளைப் பெருக்குவதுதான் அறிவுடைமை. இருப்பதையும் உடைப்பது தவறாகும்.

ஈரோட்டுப் பாதையிலே செல்பவர்கள் சிந்திக்காமல்சென்றால் அந்தப் பாதை சுடுகாட்டிலே போய்த்தான் முடியும்!

ஈரோட்டுப் பாணியிலேயே அதற்கு எதிராக உருவாகி வரும் மற்றோர் முகாமையும் தமிழகத்தில் காண்கின்றோம்.

திரு அரங்கம் அதன் தலை நகரம். கீழ்ப்பாக்கம் பிரச்சாரத் தலைமை நிலையம்.

ஈரோட்டுப் பாதையைப் போலவே திரு அரங்கப் பாதையும் மக்களை இருட்டிலே அழைத்துச் செல்வதாகவே காட்சியளிக்கின்றது.

ஈரோட்டுப் பாதையிலே செல்ல ஏன் மக்களில் ஓர் சாரார் துடிக்கின்றனர் என்பதை திரு அரங்கம் எண்ணுவது புத்திசாலித்தனம்.

சமுதாயத்தில் பிற்பட்டவர்களை, பலஹீனமானவர்களை முன்னேறச் செய்யத் தனிச் சலுகை காட்டச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றது அரசியல் சட்டம். திரு அரங்க முகாமினர், ஈரோட்டாரைப் போலன்றி, அரசியல் சட்டத்திலே நம்பிக்கை கொண்டவர்கள். ஆபத்துக் காலங்களில் அனுதரட்சகனாக அதை அழைப்பவர்கள். ஆனால் அரசியல் சட்டத்தின் இந்தக் கோரிக்கையை, மனப்பூர்வமாக விட்டுக் கொடுக்க மறுப்பதன் விளைவாகவே, ஈரோட்டுப் பாதைக்குக் கூட்டம் சேருகின்றது.

இதை எண்ணி மனமாற்றம் காண்பதே திரு அரங்க முகாமினரின் இன்றைய முழு முதற் கடமை.

அதை விட்டு விட்டு, பொது மக்களில் பெரும்பாலோரின் ஆத்மீக அறவுணர்வை, ஈரோட்டின் பக்கம் திருப்பி விடக்கூடிய அளவிலே, பல காரியங்களை

யும், சொற்போர் முழக்கங்களை யும் அடிக்கடி செய்து வரும் சக்கரவர்த்தியாருக்குப் பல் லாண்டு பாடுவது தற்கொலைக் கொப்பாகும்.

சமரச மனப்பான்மை படைத்த தலைவர்களை நம்பு வதை விட்டு, சந்தடி சாக்கில் அரசாங்கத் தலைமையை அசைக்க விரும்பும் அரசியல் வாதிகளின் வலையில் சிறு பான்மையினர் விழுந்து விடக் கூடாது.

அவர்களுக்கு, நிதானம் தவ ருத ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யங்கார், ஸ்ரீ சத்தியமூர்த்தி போன்ற தலை வர்களே இன்று தேவை. சாம் ராஜ்ய ஆசை கொண்ட சக்கர வர்த்திகள் அல்ல!

அத்துடன் மற்ருென்று; திரு ஈ. வே. ரா. வின் வழியிலே செல்லும் அளவிற்கு தமிழகம் இன்னும் நிதான புத்தியை இழக்கவில்லை.

அரசாங்க அளவிலோ குறிப்பிட்ட எந்த வகுப்பையும் கொடுமைக்கு உள்ளாக்க எண் ணும் பலாத்கார வாதிகளை ஒடுக் காமல் அரசாங்கம் உறங்க முடி யாது. அப்படி விட்டுக் கொடுத் தாலும், அதே தீய சக்திகள் வேறு உருவிலே அந்த அரசாங் கத்தையே கல்லி எறிந்து விடும். ஆகவே இத்தகைய பலாத்காரச் செயல்களை ஒடுக்காமல் எந்த சர்க்காரும் இயங்க முடியாது.

குறிப்பாக நமது சென்னை அரசாங்கத்தை பற்றி ஓர் வார்த்தை! முதுகுளத்தூரிலும் சரி, ஈ. வெ. ரா. வின் பிரச்னை யிலும் சரி நமது அரசாங்கம் சற்றுத் தாமதித்தே நடவடிக்கை களை எடுத்தது என்று எண்ணு கின்ருேம். சுடச்சுட, உரிய காலத்தில் நடவடிக்கை எடுத் திருந்தால் இத்தகைய குழப்பங் களை வளர விடாமல் தடுத் திருக்க முடியும். எதிர்காலத் திலாவது, இந்தப் படிப்பினை களின் விளைவாகவாவது அர சாங்கம் இத்தகைய தீய சக்தி கள் எந்த உருவத்தில்லாவது, உருவெடுத்தால் முளையிலேயே கிள்ளி விடுவார்கள் என்று எதிர்பார்ப்போமாக!

ஆகவே, ஈரோட்டுப் பெரி யாரே! திரு அரங்கப் பெரி யோரே! ஆத்திரம் கொள்வது தவறு. அமைதியாகச் சிந்தித் துச் செயல்படுங்கள்!

ஜாதி ஒழிய—உண்மையில் ஒழிய—நிரந்தரமாக ஒழிய—ஓர் வழி காண நமது யோசனையை யும் இந்தத் தலைப்பிலே தரா விட்டால், கடமையில் தவறிய வர்களாவோம் என்று கருது கின்ருேம்.

மேலே நாம் குறிப்பிட்ட இந்த மும்மூர்த்திகளும் 'ஜாதி வளர்க' என்ரே, 'ஒழிக' என்ரே கூறிக் கொண்டு தத்தம் தலைமையைக் காப்பாற்றிக் கொள்வதில் தான் முனைந்து நிற்கிருர்கள். ஆகவே ஜாதி ஒழிய வழி காண்பதும் பொது மக்களாகிய நமது தலை யிலே பெரும் பொறுப்பாகச் சுமத்தப் படுகின்றது.

'பிராமணர்— பிராமணரல்லா தார்' என்ற போர்வையில் ஒரு சிலரின் சூரையாடல் படலங் கள். பிராமணரல்லாதாரிலும் எத்தனை மேல் ஜாதி? எத்தனை கீழ் ஜாதி? எண்ணத் தொலை யாத எத்தனை வகுப்புகள்? உயர்ந்த ஜாதியைக் காட்டிக் கொண்டே, தனது ஜாதிப்

பாமரனைச் சுரண்டும் கொடுமைகள் எத்தனை ?

சமுதாயத்திலே இத்தகைய சுரண்டல் ஓர்புறம் என்றால், இந்த ஜாதிக் கொடுமையை அரசியல் சந்தையிலே கொள்ளை விலையாக்கிக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளாவது உண்மையிலேயே ஜாதியை ஒழிக்க எண்ணுகின்றனவா ? கிடையாதே !

சமுதாயத்தைப் பீடித்துள்ள இந்தப் பிணி நீங்க மருந்தே இல்லையா ?

இருக்கின்றது; கடுமையான, கசப்பான, பத்தியம் உள்ள மருந்து தான். கடுமையான வியாதிக்குக் கடும் பத்தியம் வேண்டியது தானே ?

"ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தன் சொந்த ஜாதியில் திருமணம் செய்வதைச் சட்ட பூர்வமாகத் தடை செய்ய வேண்டும். மீறுபவர்களுக்குக் கடும் தண்டனை என்று விதி செய்ய வேண்டும்."

இந்த நடவடிக்கையின் விளைவாக, இந்தச் சட்டத்திற்குப் பிறகு இத்தகைய புரட்சி மணத்தினால் நாட்டிலே பிறக்கின்ற குழந்தை தனக்கு என்று சொந்த ஜாதி ஒன்று இல்லை; நாட்டின் எல்லா மக்களும் தனது உறவினர்களே, என்று எண்ணத் தொடங்கும் சூழ்நிலை அமைய வேண்டும் !

ஜாதி ஒழிய ஒரே ஒரு வழி இது தான்! இந்த நடவடிக்கை ஜீவாதார உரிமைகளைப் பறிக்கிறதே என்று அங்கலாய்ப்பார்கள். அஞ்சக் கூடாது. தடைகள் அனைத்தையும் பொடி செய்து எல்லா எதிர்ப்புக்களையும் நிலைகுலையச் செய்து, குறுக்கே நிற்கும் சட்டங்களை எல்லாம் ரத்தாக்கி,இந்த மருந்தைத் தயாரிக்க வேண்டும்.

வாய்ச் சொல்லில் வீரராக இருக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும், இதைச் செயலாக்க முன் வருவார்களா ?

நேரிய ஜனநாயக வழியிலே இதைச் செய்யச் சீரான பாதை இருக்கின்றது. கொலையும், கொள்ளையும் வேண்டாம். ஈரோட்டுப் பாதை அவசியமில்லை.

கூச்சலும், குழப்பமும் தேவை இல்லை. திரு அரங்க வழியும் பயன்படாது.

சமுதாயத்தின் பெரும்பான்மையினர் ஆசியுடன், அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பில் எதுதான் சாத்தியமில்லை? 'முடியாது' என்ற வார்த்தை, மடிந்து போகும் அந்த நாள் வருமா ?

O

---


## சந்தா விகிதம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | 25 ந. பை. |
| 6 மாதச் சந்தா | ரூ. 1-50 |
| வருடச் சந்தா | ரூ. 3-00 |

# தூங்குகிறதா, தொண்டைமான் திட்டம்?

வடஇந்திய அகதிகளுக்கு கோடிக் கணக்கிலே நிதியுதவி... அழகிய... காலனிகள்..வேலை வாய்ப்புக்கள்... புனரமைப்பு வசதிகள் எல்லாம் ஏராளமாகச் செய்யும் இந்திய சர்க்கார், இலங்கையிலிருந்து குடி பெயர்ந்து வந்துள்ள தமிழர்களுக்குக் கணிசமான அளவிலே உதவி எதுவும் செய்யவில்லை என்ற எண்ணம் பரவலாக நம்மில் பலரிடை இருந்து வருகின்றது.

நாளொன்றிற்கு 3 லட்சம் ரூபாய் வீதம், ஆண்டிற்கு 300 கோடி ரூபாய் வட இந்தியாவில் அகதிகள் புனரமைப்பிற்காகச் செலவிடப்பட்டு வருவதாகச் செய்திகள் வருகின்றன.

பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளையும், இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களையும் ஒப்பிடுவது முறையாகாது.

பாகிஸ்தான் அகதிகள் மனைவி, மக்கள், உடைமை எல்லாம் இழந்தவர்கள். ஈழத்திலிருந்து குடி பெயர்வோர் அவ்வாறு அல்ல.

நாம் இவ்விதம் கூறுவதால், இலங்கையிலிருந்து வருவோருக்கு எதுவும் செய்ய வேண்டாம் என்று கூறுவதாக எண்ணக் கூடாது.

வாழ்வில் நம்பிக்கை இழந்து வரும் தமிழ் மகனை வரவேற்று நம்பிக்கை ஊட்ட நமது மாநிலத்தில் எத்தகைய திட்டமும் இல்லை, திருநெல்வேலியிலே புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கின்ற இரண்டு நூற்பு ஆலைகளைத் தவிர, என்பதும் நமக்குத் தெரியும்.

பிரதமர் நேருஜி அவர்களிடம் இது குறித்து முறையிடப் பட்டதாகவும், அவர் சென்னை அரசியலார் திட்டம் தருவதாக இருந்தால் அதை நிறைவேற்ற எல்லாவித உதவியும் செய்வதாக வாக்களித்ததாகவும் தெரிகின்றது.

அதன் தொடர்பாக, உயர்தர அதிகாரியாகிய ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோர் பிரச்னையை விரிவாக ஆராய்ந்து, ரூ. 14 கோடியில் ஓர் திட்டத்தை சமர்ப்பித்தாராம்... ஆனால் அந்த ரூ. 14 கோடித் திட்டம் ஆறு மாதங்களுக்கு அதிகமாக சென்னை அரசியலாரின் அலுவலகங்களில் தூங்குவதாகவும் அறிகின்றோம்...

'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பார்கள். நாம் ஊமைகளாக இருந்தால்...?

இந்த நிலைமைப் புரிந்து கொள்ளாது, தமிழர் குரலைக் கேட்காமல் செவிடாக இருக்கிறது 'டில்லி' என்று சொல்வது சரியா?

இலங்கையிலிருந்து திரும்பிய, தமிழர்களின் பிரச்னைக்குத் திறவுகோல் சென்னை அரசாங்கத்திடம் இருக்கிறது; அதை உபயோகித்து மத்திய அரசாங்க மனத்தையும், கருவூலத்தையும் திறக்கவேண்டும்.

ஆகவே, மத்திய சர்க்காரை குறை கூறுவதை விடுத்து, மாநில அரசியலாரைத் 'தொண்டைமான் திட்டத்தைத் துயில் எழச் செய்வீர்! விரைவிலே அத்திட்டத்தை டெல்லிக்கனுப்பி, இலங்கை அகதிகளின் துயர் களைவீர்!' எனக் கேட்பது தான் முறையாகும்.

அதே நேரத்தில், ஈழத்தில் நிரந்தரமாகத் தங்க வாய்ப்புப் பெற்றோர் அனைவரும், அந்நாட்டையே சொந்தமாகக் கொள்வதுதான் சரியானது. அது விடுத்துத் தமிழகத்தின் மீது பற்றும், ஈழச் செல்வத்தின் மீது கண்ணும் வைப்பது நீதியல்ல!

"துயருற்று இலங்கை நீத்து நாடு திரும்பியவர்கள் கண்ணீரை மாற்றுங்கள்" என்று தான் நாம் கிளர்ச்சி செய்ய முடியும்.

# புதிய மேயரின் பொறுப்பு!

வருடத்திற்கோர் முறை, மேயர்கள் வருவதும், போவதும்—வந்த புதியவருக்குப் பத்திரிக்கைகள் வாழ்த்துரைகள் வழங்குவதும், அந்தப் புதியவர் முதல் மூன்று மாதங்களை வரவேற்புகளிலும், அடுத்த ஆறு மாதங்களை அந்நிய விருந்தினர்களைத் தான் வரவேற்பதிலும், இடை இடையே ஒரு சிறிது நகர முன்னேற்றப் பிரச்னையை எண்ணுவதிலும், (எண்ணுவதில்தான்!) கடைசி மூன்று மாதங்களைப் பதவி முடிகின்றதே என்ற ஏக்கத்தில் கழித்து விடை பெற்றுக்கொள்வதும் வழக்கமாகி விட்டது.

வருடங்கள் உருள்கின்றன. மேயர்கள் மாறுகிறார்கள். சென்னை நகரம் பழைய சென்னையாகவே இருக்கின்றது.

அழகிய பங்களாக்கள்; அடுத்துக் குப்பங்கள்; உயர்ந்த மாளிகைகள்; பக்கத்திலே மண் குடிசைகள். சேரிகள் சேரிகளாகவே இருக்க, செல்வந்தர் குடியிருப்புகள் உயர்ந்தும், பரந்தும், விரிந்தும் வருகின்றன.

'ஒழிக சேரிகள்' என முழக்கம் செய்கிறார் பிரதமர் நேரு.

பொது ஜன ஆதரவு, அரசாங்க நல்லெண்ணம், திட்டக் குழுவின் ஆசி எல்லாம் இருந்தும், 'சோஷலிஸ நாடு' என நாம் தலை நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தும் கூட குப்பங்கள் ஏன் குறையவில்லை?

பெண்ணினம் பெருமை கொள்ளும் வகையில் புதிய மேயராக ஓர் அம்மையாரைத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஆண்களால் செய்ய முடியாததை இந்த அம்மையாராவது செய்வார்கள் என்று நம்புகின்றோம்.

**மொத்தம் சென்னையில் இருப்பது முன்னூற்று ஆறு சேரிகள். இதிலே ஏழுக்கு மாத்திரம் அவற்றை மாற்றியமைக்கத் திட்டங்கள் இருக்கின்றனவாம்! எனவே புதிய மேயரின் பொறுப்பு மிக மிக அதிகம்!**

'புதிய மேயர், அழகிய பெண் மேயர். அதிகச் சலுகைகளைப் பெற முடியும்' என்று பாராட்டுரை வழங்கி உள்ளனர் அறிஞர்கள்.

எவ்வகையிலாவது மீதியுள்ள சேரிகளில் பெரும்பாலானவற்றிற்காவது புதிய மேயரால் நல் வாழ்வு பிறக்க வேண்டும்.

வாழ்த்துரைகளை வாங்குவதை விட, வாழ்விழந்தோர் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றுவதே உங்கள் பொறுப்பு; அதையே நகர மக்கள் உங்களிடம் எதிர்பார்க்கிறார்கள். அதைச் செய்வீர்களா?

# துயரிடைத் தளிர்க்கும் தோழமை!

இலங்கைத் தீவில் இயற்கையின் கோர தாண்டவத்தால், துயருற்றுத் தவிக்கும் மக்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபம்.

இயற்கையின் சீற்றத்தால் நேர்ந்த இன்னல்கள் கண்டதும், அண்டை நாடாகிய இந்தியாவிடம் இலங்கைப் பிரதமர் ஸ்ரீ பண்டார நாயகா உரிமையோடு உதவி கேட்டதையும், உடனடியாக இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு தாமதிக்காமல் உதவி யனுப்பியதையும் கண்டு உலக மக்கள் அனைவரும் உவகை கொள்கிறார்கள்.

விஞ்ஞான வளர்ச்சியால் சுருங்கி வரும் உலகில் இத்தகைய நேச மனப்பான்மையை யார் தான் பாராட்டாமல் இருக்க முடியும்?

துயரிடைத் தளிர்த்துக் கிளை விரிந்து பூக்கிறது இந்திய-இலங்கை நட்புறவு!

இரண்டு நாடுகளிடையிலும் தோழமை என்றுமுண்டு. ஆகவே தான் நமது தலைப்பில் 'துயரிடைத் தளிர்க்கும் தோழமை' என்று பேசுகின்றோம்! 'துயரிடைத் துளிர்க்கும் தோழமை' என்று நாம் கூறவில்லை.

'இந்தத் 'தோழமை' உணர்ச்சியிலேயே நின்று, அரசியல் கண்ணோட்டத்தை விட்டு விட்டு, மனிதாபிமானக் கருத்துடன், இலங்கை இந்தியர் பிரச்னையையும் தீர்க்க முன் வாருங்கள்!' என்று இரு சாராரையும் கேட்டுக் கொள்கிறோம்!

# நேயர்களே!

'புதுமை' யின் ஆருவது இதழ் உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டு இருக்கின்றது.

'புதுமை' வளரும் குழந்தை. மானிடக் குழந்தையின் வளர்ச்சியில் உள்ள இன்ப துன்பங்கள், அனைத்தும் உங்கள் 'புதுமை'க்கும் உண்டு. இருந்தாலும், நேயர்களின் 'தாய்மை' அணைப்பிலே புஷ்டி நிறைந்த குதூகலக் குழந்தையாகப் 'புதுமை' வளர்ந்து, நிலைத்து வருவதை நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள்.

புத்தாண்டு, பொங்கல், குடியரசு ஆகிய பொன்னை நாட்கள் நிறைந்த ஜனவரி மாதம் அல்லவா? ஆகவேதான் இந்த இதழைச் சிறப்பு மலராக அதிகப் பக்கங்களுடன், புதிய அம்சங்களுடன் அதே விலையில் உங்களுக்கு விருந்தாக்குகின்ருேம்.

'புதுமை' யில் வளரும் எழுத்தாளர்களின் கதைகளுக்குஓரளவு அதிகமாகவே இடம் கொடுத்து வந்திருக்கின்ருேம். அதே நேரத்தில் வாசகர்களின், 'சிறுகதைப் பசிக்கு' பிரசித்தி பெற்ற பேனு மன்னர்களின் படையல்களை அளிக்கவும் மறக்கவில்லை.

இந்த இதழிலே...பேராசிரியர்கள் திரு. டி. எஸ், சொக்கலிங்கம், திரு. ஜி. வெங்கட்ராமன் ஆகியோரின் இலக்கிய, விஞ்ஞானக் கட்டுரைகளையும், திரு. என். எஸ். சுப்பையரின் 'இயற்கை வைத்தியக்' கட்டுரைத் தொடரையும் இணைத்துள்ளோம்.

புதிதாக, பிப்ரவரி இதழிலே இலக்கிய, விஞ்ஞானக் கட்டுரைத் தொடர்களைத் துவக்கவும் திட்டமிட்டு உள்ளோம் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

நேயர்களுக்குப்புத்தாண்டு, பொங்கல், குடியரசு வாழ்த்துக்கள்.

—ஆசிரியர்.

# இயற்கை வைத்தியம்

என். எஸ். சுப்பையர் பி. ஏ. பி. எல்

**குறைந்த சம்பளம்...தீர்க்கமுடியாத சிரஞ்சீவியான டாக்டர் பில்! இந்த இரண்டுக்கும் இடையில் நம்மில் பெரும்பாலோர் சிக்கி அவதிப்படுகின்றோம். இந்தப் பிணி தீர இதோ மருந்து, 'இயற்கை வைத்திய' நிபுணர் திரு, என். எஸ். சுப்பையர், பி. ஏ. பி. எல். தருகிறார்...பயப்படாதீர்கள்! இந்த மருந்துக்கும் பில் கிடையாது. !**

**திரு. சுப்பையரைப் பற்றி ஓர் வார்த்தை...சுருக்கமாக, அவர் ஓர் விசித்திர, விஷயம் நிறைந்த மனிதர்...கட்டுரைகளைப் படித்த பின் நீங்களும் என் கருத்தை ஆதரிப்பீர்கள்!**

கிராமங்களில் டாக்டர்களைக் குடியேறும்படி தூண்டும் நோக்கத்துடன், அங்கே சேவை செய்ய வருபவர்களுக்கு ரூ 100 வரை மாதச் சம்பளமும் மருந்துகளுக்கு வருஷத்திற்கு ரூ 500 க்குக் குறையாமல் கொடுத்து ஜில்லா போர்டுகளால் பல ஆஸ்பத்திரிகள் திறக்கப்படுகின்றன. இதன் நோக்கம், மேல் நாட்டு வைத்திய முறையின் மதிப்பைக் கிராமவாசிகளிடம் பரப்பவும், டாக்டர்கள் பிரைவேட் பிராக்டிஸிலிருந்து வேறாகச் சம்பாதித்து, பட்டணத்து டாக்டர்களுக்குச் சமமாக வருவாய் அடைந்து, நிரந்தரமாகக் கிராமங்களிலே தங்கி டாக்டர்கள் சேவை செய்வார்கள் என்பதும் தான். அதற்கு மாறாக ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகள் ஐம்பது சத விகிதத்திற்கு மேல் டாக்டர்கள் கிடைக்காமல் மூடிக்கிடக்கின்றன.

எந்த வைத்திய முறையும், திட்டமும் கிராம வாசிகளின் பொருளாதார நிலைமைக்கு ஏற்றதாயில்லாவிட்டால், அவைகள் ஒரு சிறிதும் பயன்தர மாட்டா. சொற்பச் செலவில், அதிக சிரமமில்லாமல் கிடைக்கும் இயற்கை வைத்தியமே, நம் தேசப் பொருளாதார நிலைமைக்கு உகந்தது.

மருந்து உட்கொள்ளாமல், உணவு, சூரியன், தண்ணீர், மண் ஆகிய இயற்கைச் சாதனங்களால் வியாதிகளைக் குணப்படுத்துவது தான் இயற்கை வைத்தியம் என்று சொல்லப் படுகிறது.

இதை ஆங்கிலத்தில் (Drugless healing) 'மருந்தில்லா வைத்தியம்' என்று சொல்வார்கள்.

மனிதவர்க்கம் தோன்று தொட்ட நாள் முதல், நோய்களைக் குணப்படுத்த மருந்துகளையே நம்பி வந்திருக்கின்றது. இந்த நிலையில் மருந்தில்லா வைத்தியம் என்று சொன்னால், அது வைத்தியமல்ல, பைத்தியம் என்று மேலெழுந்த வாரியாகப் பலர் நினைக்கக் கூடும். அதிலும், ஊசிமூலம் தேகத்திற்குள் மருந்து

செலுத்தும் (Injection) முறைக்கு அமோக பிரேமை ஏற்பபட்டிருக்கும் இந்நாளில், இயற்கை வைத்தியத்தைப்பற்றித் தாழ்வாக நினைப்பது சகஜம். இந்த அபிப்பிராயத்திற்கு முக்கிய காரணம், இயற்கை முறையைக் கையாளும் பெரும்பாலோர் அதற்கு விஞ்ஞான முறையில் விளக்கந்தர சக்தி யற்றவர்களாக இருப்பதுதான்!

சென்ற நூற்றுண்டில் இயற்கை முறையைக் கையாண்டவர்களுக்கு வியாதிகளின் காரணங்கள், போக்கு, சுபாவம் இயற்கைச் சாதனங்களான உணவு, சூரியன், தண்ணீர், மண் இவைகள் தேகத்தில் எந்த விதமான மாறுதல்களை உண்டாக்கி வியாதிகளைக் குணப்படுத்துகின்றன, என்ற விபரங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. இவர்களில் பெரும்பாலோர், வைத்தியப் பட்டம் பெற்றவர்களோ (Medical Degrees) அல்லது தங்கள் வாழ்க்கையில் மருத்துவத் துறையில் ஈடுபட்டவர்களோ அல்ல. ஆனல் இருபதாம் நூற்றுண்டில், மருத்துவப் பட்டம் பெற்று, தங்கள் தொழிலில் கீர்த்தியும், அதிக வருவாயும் சம்பாதித்தவர்கள் சில காரணங்களுக்காக வைதிக வைத்தியத்தை விட்டு, (Orthodox treatment) இயற்கை வைத்தியத்தில் இறங்கித் தீவிர ஆராய்ச்சி பண்ணியதின் பயனுக, சில அரிய பெரிய உண்மைகளைக் கண்டுபிடித்தார்கள். இதில் உணவு மனித அணுவின் சலனம், ஆகாரம் உட்கொள்ளும் சக்தியும், விதமும் (Biochemistry) இவை சம்பந்தப் பட்ட ஆராய்ச்சியும் முக்கியமானவை. இத்துறையில் விசேஷசேவை செய்தவர்கள், **டாக்டர் ஜாக்ஸன், டாக்டர் கெல்லாக், டாக்டர் வின்ட்லார், டாக்டர் டில்டன்** ஆவார்கள். (தொடரும்)



## அட்டைப்பட விளக்கம்

வானம் பொய்யாது பொழிந்து விட்டது; வயலும் வஞ்சகம் செய்யாது வளம் கொழித்து விட்டது. இந்த நேரத்திலே வருகின்றது இந்த ஆண்டுப் பொங்கல்.

வேர்வைக் குளம் பெருக்கி, வேளாண்மை நலம் செழிக்கச் செய்த மேழிச் செல்வன் குடும்பத்திலே இன்பப் பெருக்கிற்குக் கேட்கவா வேண்டும்?

குடும்பத்துடன் நகரக் கடைத் தெருவை நண்ணி, பொங்கல் விழாப் பொருள் எல்லாம் பாங்காக வாங்கித் திரும்புகிருன்...

இயற்கையின் அருளாலும், சோஷலிஸ சமுதாய அமைப்புப் பணியில்ஈடுபட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டங்களாலும் எதிர் காலத்தில் வரப் போகின்ற இன்ப உலகையும், சில நாட்களில் வரும் பொங்கல் நன்நாளையும் எண்ணியபடி, நம்பிக்கை பொங்கும் கண்களை நிமிர்த்தி ஏறு நடை போடும் இக்குடும்பம் நமது பொங்கல் இதழ் அட்டையை அலங்கரிப்பது பொருத்தந்தானே?

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

உரிமையாளர்கள் :

சுகந்த மண்டலம் S. V. பழனிமலை,

S. V. ரெங்கசாமி,

மதுரை, மதருஸ், பெங்களூர் & விஜயவாடா.

போன்: 1259 தந்தி : "FASHION" தபால் பெட்டி நெ. 16

கலை நிரம்பிக் காண்பதற்கு இனிதாகி

மலர்க்கொடியாள் மனதினை மகிழ வைத்து,

தளிர்மேனி செவ்விதழாள்

மலர்க்கண்ணைத் தன்னகத்தே ஈர்த்து

அழகொளியை அள்ளி வீசும்,

எமது கோயமுத்தூர்

சௌடாம்பிகை

சேலைகளை

வாங்கி கைத்தறியை ஆதரியுங்கள்.

தயாரிப்பாளர்கள்

ஸ்ரீ சௌடாம்பிகை தேவாங்க நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சொசைட்டி லிட்.,
நெ. K. 1517 ; கோயமுத்தூர்.

தலைமை ஆபீஸ் : & சாயச்சாலை :– 22/307 ரங்கே கவுடர் வீதி, கோவை.

விற்பனைக் கிளைகள் : 11/47, சுக்ரவார்ப்பேட்டை, கோவை. 56, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்டாக்கிஸ்டு: நியூ ராதா ஹால், பஜார் தெரு, சேலம்.

தலைவர் : A. K. பழனிசாமி.

# காமனை வென்றகண்

## அத்தியாயம் 7

## விரதபங்கம்

முத்தையன் சிரித்தான்.

கண் விழித்துப் பார்த்தால் காரில் போன முத்தையனா? சைக்கிளில் எவ்வாறு வந்தான்?

'எனக்கு எவ்வளவு கோபம் தெரியுமா?'

'எனக்குந்தான்...'

'உன் வீட்டின் பக்கம் போனால் காணவில்லை.'

'உன் வீட்டின் பக்கம் போனால், அந்த நல்ல பாம்பு இரையெடுத்துக் கொண்டிருந்தது.'

முத்தையனுக்கு ஆத்திரமாக வந்தது. ஒரு மணிக்கு முன்னதாகத் தோசையும் காபியும் தின்னத் தின்னக் கொடுத்துவிட்டு தன் முன்னிலையில் பாசாங்கு செய்வதை எண்ணினான். சிரித்து வேறு பேசினாளாம். சிரிப்பு வேறு கேடா?

'ராமையா சொன்னான். நீ கொடுத்த காபி, தேவாமிர்தமாக இருந்ததாம்.'

'உங்கள் சூரத்தனத்தையும் அவர் சொன்னார் கூட்டத்திலே .....'

அவள் பேச்சை விழுங்கினாள். கண்கள் மட்டும் ஆளை விழுங்குபவள் போல அகல விரிந்து இமைகள் படபடத்தன.

'பாதியிலே நிறுத்தி விட்டாய். சொல் செண்பகம்.'

'சொல்ல என்ன இருக்கிறது? இனிமேல் சேலை கட்டிய பெண்கள்தான் புலி வேட்டைக்குப் போக வேண்டும். மீசையுள்ள ஆண்கள் வீட்டுக்குள் பதுங்கி இருக்க வேண்டியதுதான். சட்டிசுரண்ட வேண்டியது.'

'நடுத்தெருவில் நின்று பேச வேண்டாம். உள்ளே போய் வருகிறேன்.'

'இப்போதுதான் கார் போயிற்று. நீயே ஓட்டுவதாக எண்ணினேன்.'

'அடடா...ராஜா கோபித்துக் கொள்வார். கூப்பிட்டதும் வரவில்லையென்பதாக.'

'அவருக்கும் புலி என்ருல் கிலி; அவரோடு சேர்ந்த உனக்கும் பயம்.'

'அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்'' என்றவன் பங்களாவிற்குள்ளே போய், காவல்காரனிடம் ஏதோ கேட்டவன், வாசலுக்கு வந்தான்.

'என்ன சங்கதி?'

'பாண்டித்துரை செங்கோட்டைக்குப் போய்விட்டார். நாம் இருவரும் சிற்றருவிக்குப் போகலாமா?'

'எதற்காக?'

'சும்மா பேசிக் கொண்டிருக்கத்தான்...'

'அங்கே புலி வந்து என்னை அடித்துக் கொன்ருல் மரத்திலேறி உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருப்பீர்கள்.'

'அட விட்டுத்தள்ளு புலியை'.

'எப்படி முடியும்? புலி கோல்லப்பட்டது என்ற சேதி வரவேண்டும். அதுவரை என் மனம் சாந்தியடையாது. ஊர்க் கூட்டம் போட்டதை நீங்கள் தான் கெடுத்தீர்களாம். பாண்டித்துரை ராஜாவும் கெடுத்தாராம.'

'ஐயோ, நீயேன் இப்படிக் கோபமாக இருக்கிருய்?'

'உங்களுக்கு என் மீது அன்பு இருந்தால் சாகக்கிடந்தேனே என்னைப் பார்க்க வர மாட்டீர்களா? வந்தீர்களா நேற்று?'

'வா, சொல்லுகிறேன். காரணம் சொல்லுகிறேன்.'

'நான் போகிறேன்......வரவில்லை.'

பெண்—அதுவும் காதலிக்கும் பெண், கைக்கெட்டும் தருவாயிலுள்ள பெண் -சூடுதரும் பாதரஸம் போல ஆட்டிப் படைக்கும் சக்தி கொண்டவள். இவன் சொல்லை மீறி அவள் திரும்பவே, 'உனக்காக ஒன்று வாங்கி வந்திருக்கிறேன்'' என்ருன்.

'புலிப்பாலா?,' என்று கடுமையாகச் சிரித்தாள். குளிர் நிலவாக வீசிய கண்களில் கனலின் தணல் ஜொலித்தது.

'புலியைத் தவிர எதையாவது பேசேன்.'

'எனக்கு அந்தப் புலிதான் வேண்டும். அது சாகாத வரை எனக்குக் கல்யாணமே வேண்டாம்.'

'என்ன பைத்தியக்கார சபதம்.'

'கோழைகளுக்கு என் சபதம் பைத்தியக்கார சபதம்தான்.'

அவள் பொய்க் கோபம் கொள்ளுகிருளா, நிசமாகக் கோபம் கொள்கிருளா என்று அறிய முடியாமல் தவித்தான். திருநெல்வேலியில் ஆசையோடு வாங்கி வந்த கண்மை மடியிலே துருதுருத்துக் கொண்டிருந்தது. ஆசையோ எப்படியேனும் அவள் அகன்ற கண்களில் மையிட்டுப் பார்த்து விடக் கும்மாளமிடுகிறது, படுபாவிப் புலி, நேற்று வந்து குட்டிச் சுவராக்கி விட்டதே......என்ருலும் இதயத்தின் ஆசை எப்படியும் கைகூட வேண்டும்.

'உன்னிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும்.'

'சொல்லுங்கள்.'

முத்தையன் தான் ஆலங்குளத்தில் செய்தி கேட்டதும், அடைந்த மனக் கஷ்டம், ஊர் வந்ததும் அவள் நிலைமையறியத் துடித்த வேதனை, தாய்

தன்னிடம் பெற்றுக் கொண்ட சபதம் ஒவ்வொன்றையும் சொல்ல ஆசைப்பட்டான். சொல்லி வரும் போதே வியப்புற்று அவள் கண்கள் மிரள மிரள விழிக்கு மல்லவா? அப்போது அவள் நீண்ட பெரிய கண்ணிலே இமைப் பொழுதில் அவள் அறியாமலே மை தீற்றி விட வேண்டும் என்று அந்த ரங்க ஆசையும் ஊடாக ஓடிற்று.

இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசாமல் சிற்றருவியின் மேட்டிலே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். நீரோடைகளின் 'சல்'லென்ற ஓட்டம். இரண்டொருவர் எதிரே வந்தவர்கள் புலியைப் பற்றியும் முதல் நாள் சுருட்டிப்போன மான் குட்டியைப் பற்றியும் பேசிக் கொண்ட போது செண்பகம் வெறித்துப் பார்ப்பாள்.

தேக்கு மரத்தைச் சுற்றிக் கொடி கொடியாகப் படர்ந்த காட்டு மல்லிகையின் கொடிப் பந்தல். அதனடியில் அவர்கள் அமர்ந்தார்கள். உட்கார்ந்த பாறைக்கு அடியிலே உள்ள குறுகுறுப்பாக ஓடும் நீரோடை. அதன் குளுமையை அவர்கள் உணராதபடி 'உம்'மென இருந்தார்கள், ஆண் மனம் இரக்கச் சித்தம் நிறைந்தது;. காதலி மனங் கோணச் சகியாத இளகிய உள்ளம் படைத்தது. சமாதானம் செய்து, அவள் கோபத்தை மாற்றிக் கொண்டு வந்தான்.

அப்பாவி முத்தையன் எங்கே கண்டான்? அழுவதைத் தேற்றுவதற்கு அருகாக ஆள் இருப்பதால் தானே மேலும் மேலும் கோபங் கொள்கிருள் செண்பகம்! அவன் இல்லாவிட்டால் அழுவாளா? நினைந்து நினைந்து, ஏக்கம் கொள்வாள் ; கண்முன் கண்டாலோ ஏக்கங் கொள்ள வைக்கிருள்.

முத்தையன் சொல்லி வந்த சமாதானம் மனத்துள்ளே பூர்வ மகிழ்ச்சி தந்தது. ஆனுல், முகத்திலே பாதிதான் ஒப்புக் கொண்ட பாவனை. மனம், மன்னித்து விட்டது. அவள் முகம் மன்னித்து விடவில்லை. அவளுடைய பிடிவாதப் பார்வை, பிணக்கு நிறைந்த பேச்சு, சிமெண்டில் மண் கலப்பது போல அவன் மனதை இறுக்கி வந்தது. தாயிடம் சொல்லிய உறுதி வார்த்தைகள் செண்பகம் பேசப் பேச சிமெண்டில் விட்ட தண்ணீர் உறிஞ்சுவது போல எங்கோ போய் விட்டது.

எதிரே தெரிந்த மாமரத்திலே இரண்டு மைனுக்கள் ஒன்ருேடொன்று கட்டிப் புரண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தன. சற்றுத் தொலைவில் ஒரு மைனு இந்த நிகழ்ச்சியை ஆவலோடு பார்த்தபடி இருந்தது.

'பார்த்தாயா, பட்சிகளுக்குள்ளும் கோபமும், தாபமும் இருக்கிறது'

செண்பகம் பதில் சொல்லவில்லை. ஒரு விநாடி ஊழியாகத் தோன்றிற்று. அவளது காந்தக் கண்களிலிருந்து அன்பின் அருவி கொட்டுவது போல பிரமை; அவனுடைய எண்ணம், செயல், நினைவு, சொந்தம் அத்தனையும் அறுந்தது.

'நீ என்னை என்ன செய்யச் சொல்லுகிருய்?'

அப்போதும் மௌனம். இரவின் நிசப்தமும் காதலியின் மௌனமும் பயங்கரமானவை.

'என்னுடைய அன்பை நீ வெறுக்கிறாய்.'

இதழில் ஒரு புன்முறுவல் நெளிந்தது. தான் வெற்றி பெற்றதாக எண்ணினான். அது புன்முறுவல் அல்ல, புலியின் உறுமல் என்பதை அறியச் சந்தர்ப்பம் வந்தது.

'சொன்னது என்ன?, என்று கேட்டாள்.

'என்னுடைய அன்பை நீ அறியவில்லை'.

'ஆமாம். அறியாதவள் நான். அதுதான் சிற்றருவிக் காட்டிலே மரத்தடியில் வந்து உட்கார்ந்திருக்கிறேன்?'

அவள் தளிர்க் கரத்தை விரலால் நீவினான். வெடுக் கென பிடுங்கிக் கொண்டாள்.

'என்னதான் செய்ய வேண்டும் கள்ளி?.'

'எனக்கு வெறும் அன்பு வேண்டாம். நல்லதைச் செய்யும் அன்பு காட்டுங்கள்.'

'எது நல்லது?'

'ஆண்பிள்ளை என்ற வீரத்தை, நிலைநாட்ட வேண்டும்.'

'என் அம்மாவுக்குக் கொடுத்த சபதம்?'

பதில் பேசாமல் எழுந்தாள் செண்பகம். இனி பேச்சுக்கு என்ன இருக்கிறது? அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். முத்தையன் மனமலருள் யாரோ கூரிய முள்ளைக் கொண்டு கிளறுவது போல இருந்தது. பாரா முகமாகத் திரும்பிய முகத்தை தன் முகத்தைப் பார்க்கத் திருப்ப வேண்டும்; எழுந்தவள் மீண்டும் தன் அருகாக பாறையில் அருகருகாக அமர வேண்டுமே!

'என்னைக் கொல்லாதே செண்பகம். நான் எத்தனை ஆசையாக உன்னைச் சந்திக்க இருந்தேன்?'

'இனி இந்த ஆசையை மறந்து விடலாம்.'

'உன்னை மறப்பதா......எதற்காக மறப்பது?'

'நான் செய்த சபதம் அத்தனை துயரமானது. என் வாழ்க்கைக்கு நானே எமனாக இருந்து விட்டேன். தன் தலையில் மண்ணை வாரிப் போட்ட மத யானையாகப் போய் விட்டேன்.'

'மத யானைக்கு ஏற்ற மாவுத்தன் நான்...'

'ஐயோ புலியே'......'களுக்' கென்ற சிரிப்பு சிந்திற்று.

'நீ சபதம் செய்தாயா? சொல். கேட்கலாம்.'

'உங்களுக்கு விரோதமாகப் போக எண்ணி, நான் சபதம் செய்ய எண்ணவில்லை.'

'திடீர் திடீர் என்று மரியாதை கொடுக்கிறாய். 'நீ' போய் 'நீங்கள்'......என்ன எண்ணம் உனக்கு?'

'அன்னியர்களிடம், அன்போடு, மரியாதையும் தர வேண்டும்.'

'அன்னியனா? சொல் என் முகத்தைப் பார்த்துச் சொல். நான் அன்னியன் என்பது உறுதியானால்... ... ராமையா சொன்னது உண்மை'

மறுகணம் அவள் கண்கள் அவனைப் பார்த்தன. நேருக்கு நேர் நெருங்கி வந்தாள். உற்றும் உறுத்தியும் அம்பு விடுவது போல நோக்கினாள். பார்வையின் தகிப்புத் தாங்க முடியாமல்

குனிந்தான். கொஞ்சம் நாணம். கொஞ்சம் காரியம் முறுக்கேறி கைகூடாமற் போய் விடக் கூடாதே யென்ற பயம். அவன் நாடியை வலக் கையில் தாங்கி, மறுபக்கமாகவும் தாழ்ந் தும் இருந்த முகத்தை நிமிர்த்தி ருள் செண்பகம். அதிலே உள்ள வேகம், துணிச்சல், எல்லாவற்றுக்கும் மேலாக, தளிர்க்கையின் தண்ணென்ற பூவினிலும் மெல்லிய சுக உணர்ச்சி.

'என் முகத்தைப் பார்த்து இன்னொரு முறை சொல்லுங் கள்.'

சொல்லுந் தைரியம் அப்போது ஆண்பிள்ளைக்கு ஏது? இரக்கந் தான் – பச்சாதாபந்தான் இதய முழுவதும் நிறைந்திருக்கிறதே.

'நீ மட்டும் அன்னியன் என்று என்னைச்சொல்லலாமா?'

'நான் சொன்னது உண்மை. எதற்காக அந்த அயோக்கியன் பெயரைச் சொன்னீர்கள். அது வும் என்னிடம் சொல்லும் துணிவு எங்கிருந்து வந்தது?'

'இனி சொல்ல மாட்டேன். உன் சபதம் என்ன?'

'கேட்டு ஆகப் போவது?'

'நான் கேட்க வேண்டும். நீ கேட்ட விபரங்களை நான் சொன்னேனே'.

'நீங்கள் மேலும் மனம் வருந்துவீர்கள், நான் சொல்ல மாட்டேன்.'

'நானு?' முத்தையன் தன் துணிபு, மனவலிமையை நினைத் துப் பெருமிதமாகச் சிரித்துக் கொண்டான். தான் ஓட்டும் காரைவிட, கண்டிப்பான முத லாளியைவிட, காருண்யத்தின் உருவாக உள்ள தாயன்பைவிட கடினமான யந்திரம் பெண்மை. அது யந்திரமா? யந்திர பூதம் பெண்மை யென்பதை மறந்து விட்டான், பெண்ணின் முன்னுல் பூ முகத்தின் புன்சிரிப்பின் முன்னுல் எத்தனை எத்தனை யோ பலிஷ்டர்கள், பராக்கிரம வீரர்கள் பஞ்சையாய், பறைதை யாய், கோழைகளாய்ப் போய் இருக்கிறுர்கள். முத்தையனும் அந்த ஆண் குலத்து வாரீசு என்பதை மறந்தான்.

'சிரிக்கவும் வேண்டுமா?' சள்ளென்று விழுந்தாள்.

'சிரிப்புத்தான் வருகிறது. உன் சபதத்தைச் சொல்.'

'நான் மூர்ச்சையாகி விழுந்து பின்பு எழுந்ததும் நமது தெரு விலே உள்ள காளியம்மன் கோவில் மணியடித்தது. என் மனம், 'காளியம்மா...என்னு டைய மான் குட்டியைத் தின்ற புலியைக் கொன்ற பின்புதான் எனக்குக் கல்யாணம் ஆக வேண்டும். அந்த சக்தியை அவருக்குக் கொடு', என்று எண்ணிக் கொண்டேன்.

'அவருக்கு' என்ற போது உச்சி முதல் உள்ளங்கால்வரை முத்தையனைப் பார்த்தாள். அவன் உடம்பு புல்லரித்தது. உடம்பிலே நரம்புக்கு நரம்பு பன்மடங்கு சக்தியும், துணிவும் முன்னைவிட அதிகமாக உணர்ந் தான்; அவள் பார்வையால் சூடேறி, நரம்புகள் புடைத்துக் கொப்புளித்துக் கொண்டிருந் தது. வாய் வார்த்தைகளைக் கொட்டி நேரத்தை வீணுக்கா மல், கண்ணுல் மேலும் மேலும் பேசினுள். காதற் கண்களில் நாணேற்றிய அம்புகள் பாய்ந்து சரஞ்சரமாக அவன் நெஞ்சில்

துளைத்தன. தன்னை மறந்தான்; தாயை மறந்தான். இருக்கும் இடம் எல்லாம் மறந்தான். குரலோ 'நான் அம்மாவிற்கு கொடுத்த சபதம்-என்னுவது?', என்று சிறிது நடுங்கிற்று.

'அது சிரஞ்சீவியாக இருக்கட்டும். நான் பொங்குமாங் கடலுக்குள் போய் என்மனவேதனையை கொட்டுகிறேன்' என்றவள் விடுவிடென சிற்றருவியி லிருந்து மேலே பொங்குமாங் கடலுக்குப் போகும் கரடுமுரடான பாதையில் நடந்தாள்.

"பொங்குமாங் கடல்!"

"பொங்குமாங் கடல்!!"

இச் சொற்கள் பிரமாண்டமாக ரீங்கார மிட்டன. மேலேயிருந்துவிழும் பெரிய அருவியே பல ஆயிரம் அடி பொங்குமாங் கடலுக்குள்போய் அரை மணிக்கு அப்பால் உள்ளே குழைந்து சுழன்று திக்குமுக்காடி நுரை நுரையாக வெளியே பாறைக்கு வந்து மீண்டும் அருவியாக இறங்குகிறது. முத்தையன் தலை சுக்கு நூருக வெடித்துக் கொண்டிருந்தது.

பொங்குமாங்கடலும்—செண்பகமும்!

புலியும்—மானும்!!

தன் பின்னலே தாய் நின்று 'மகனே' என்று கூப்பிடுவதாகப் பிரமை. தொலைவில் பசிய மரங்களிடையே நீலச் சேலையின் ஒளி தெரிந்தது; அவள் அணிந்திருந்த செவ்விய ரவிக்கையின் நிறம் உச்சி வெயிலில் பளிச்சிட்டது.



மறு கணம், தாய்க்குப் பிள்ளை இல்லை; பாண்டித்துரைக்கு டிரைவர் இல்லை. செண்பகத்தின் காதலன் ஆகிவிட்டான். பாறைகளைத் தாண்டி ஓடினன்!

'ஓ' வென்ற பயங்கரமான அருவியின் இரைச்சலும், பொங்குமாங்கடலில் விழுந்ததால்

மேலே காற்று வாக்கில் மிதந்து வரும் நுண் துளிகளின் பன்னீர் தெளிப்பும், அவன் முகத்தில் வந்து விழுந்தன. செத்தை குப்பைகளை மிதித்து ஓடோடி வந்து அவள் கரத்தைப் பிடித்தான். அவள் கையை உதறி முரட்டுத் தனமாக இழுக்கவே பாறையிலுள்ள வழுக்கு, அவளைக் கீழே தள்ளிற்று. உயரமான பாறையில் வழுக்கி விட்டால் கிடுகிடு வென கீழே உருட்டும்; செண்பகத்தின் நிலையும் அப்படித்தான் ஆயிற்று. பாறை வழியே உருண்டாள்.

பொங்குமாங் கடலுக்குள் அருவியாக விழும், பெரிய கிளை ஓடைகளுக்குள் அதுவும் ஒன்று; பாறையில் அடியிலே பயங்கர ஒலியோடு ஓடிக் கொண்டிருப்பதையும் முத்தையன் அறிவான். ஓடை வழியாக அவளைப் புரட்டிக் கொண்டு போனால்...போனால்?

'பொங்குமாங்கடல்—'

பொங்குமாங்கடலுக்குள் ஐக்கியமாகவா செண்பகம் அத்தனை அழகாகவும், அன்பாகவும் பழகினாள் என்று நெஞ்சு கேட்கத் தோன்றிற்று. உருண்ட உடலைப் பிடிக்க உட்கார்ந்து, உட்கார்ந்து, உட்கார்ந்து சருக்கியபடியே வேகமாகப் பாறை வழி இறங்கிக் கொண்டிருந்தான் முத்தையன்.

## அத்தியாயம் 8

# பெண்பித்து பெரிதோ?

இரண்டு மணிக்கு முன்னால் அவசர அவசரமாக தோசையை வேண்டாமெனச் சொல்லி, ஓடிப்போன ராமையா தலை தெறிக்க ஓடி வந்தான். போகும் போது தலை வெட்டிக் கொள்ளவில்லை. இப்போது முடியலங்காரமும், அசட்டுத் தனமான அலங்காரப் பூச்சினால் வருமே மணம் அதுவும் அந்தச் சிறு வீட்டுக்குள் வட்டஞ் சுற்றியது,

'ஏண்டா குறையும் சாப்பிடுகிறாயா?'',என்றாள் முத்தையன் தாய்.

'ஐயோ குடி முழுகிப் போச்சு.'

'என்னடா என்ன !'

ராமையா திட்டி முழக்கிக் கொண்டு சொல்ல ஆரம்பிக்கு முன்னதாக, இரண்டு மணிக்கு முன்னர் மண மணக்கும் தோசையையும் திக்கான காப்பியையும் எதனால் அரை குறையாக விட்டுப் போனான் என்பதை இங்கு சொல்ல வேண்டும்.

ஜமீன்தார் பாண்டித் துரையின் ஆள் முத்தையனை அழைத்துப் போன போது, இன்னும் ஆர அமர இருந்து வயிற்றுப் பெருமானுக்கு வஞ்சனை செய்யாது வழங்க இருந்தான் ராமையா.

ஐந்து நிஷத்தில் முத்தையன் போனதும் முகிலைக் கிழித்து வந்த முழுமதியாகச் செண்பகம் உள்ளே வந்தாளே; வந்தவள் தன்னெதிரே அமர்ந்து பந்தியோடு உண்ணுவாள். அவள் உண்ணும் போது அவளது

அசையும் சிவந்த உதட்டையும் கல கலக்கும் வளைக் கரங்களை யும் பார்த்துக் கொண்டே தானும் உண்ணலாமே! எத்தனை பெரிய ஆசை கை கூட வேண்டிய சமயம்....

[" மலைப் பழம், மலை வாழைப் பழம்" என்ற விருதுநகர் ஓசை கோபாலவாரியார் கவனத்தைக் கவர்ந்தது. ரெயில் நின்றதும் இரண்டு டஜனை வாங்கி வைத்துக் கொண்டு 'மேலே' என்றார். வைத்தியர் எண்ணெய் பிழி படும் வடை பஜ்ஜி முதலான பலகாரங்களை வாங்குவாரா? சற்று உண்ட பின்னர் தொடங்கினேன்.]

செண்பகம் தோட்டத்து வழியே விரைவாகப் போவது தெரிந்தது. முக்கியமாகச் செவ்வாழைக் குலை யொன்று பாரம் தாங்காமல் முட்டுக் கொடுத்த மூங்கிலையும் வளைத்துக் கிடக்கிறதே. அதன் அருகாகப் போகிறாள். அவன் வாய், 'சிறு தோட்டத்துச் செவ்வாழைக் கனியே' என்று முணு முணுத்தது.

" ஏண்டா ராமைய்யா, உனக்குச் செவ்வாழைப் பழம் வேண்டுமா? அடடா மறந்தே போனேன்."

முத்தையனின் தாய் பார்வதி தோட்டத்துள்ளே போய், குரங்கு பறிக்காமல் முள்கத்தை சுற்றிய குலையில் இரண்டு பழங்களைப் பறித்து வந்தாள். ஒன்று தின்றாலே வயிறு நிரம்பும். அத்தனை பருமன், அத்தனை ருசி, அவ்வளவும் இரும்பு போல சத்து. அவள் பந்தியில் பழங்களை போட வருவதற்குள் எழுந்து விட்டான். கை சுத்தம் செய்து முடித்துக் காப்பியைக் கூடத் தொடாமல் ஓடுவதற்கு ஆயத்தமாக நின்றான்.

" ஏன் எழுந்துவிட்டாய். உள்ளே தோசைக்கு வெண்ணெய் போட்டு முறுக விட்டிருக்கேன் "

" அவசரம் பெரியம்மா. இலஞ்சிக்கு முதலாளியைப் பார்க்க வேண்டும். இன்று நெல் விற்பனை நாள் "

" இரு, இரு"

அவன் புத்திதான் தனியாக செண்பகம் ஒத்தடிப் பாதையில் போவதைத் தொடர்ந்து கொண்டிருக்கிறதே.

" தெருவிலே வில்வண்டி ஒன்று இலஞ்சிக்குப் போகிறது. அதிலே ஒரு தகவல் அனுப்பி விட்டு வருகிறேன் "

பதிலுக்குக் காத்து நிற்காமல் பாய்ந்தான். ஊரிலே போக்கிரி என்று பலர் சொன்னாலும் செத்த சுண்ணாம்பாகிப் போன தமக்கையின் பையனிடம் மிகவும் அன்பு உண்டு. அவன் அடாப்பிடியாகச் சம்பாதித்தாலும் பார்வதி கடுமையாகச் சொல்ல மாட்டாள். வந்த நேரம் வயிறாரச் சோறுபோடுவாள். அதிலும் நூற்றைம்பது ரூபாய் பெறுமானமுள்ள பில்லைப் பசுவை வாங்கித் தந்தவன். முத்தையன் ஜமீன் வேலையாகப் போய்விடுவதால், அவள் சொல்லும் வீட்டுச் சாமானை சுமந்து கொண்டு வருகிற பிள்ளையல்லவா, அவன்?

காப்பியைக் குடிக்காமல் போனதால் கவலையோடு அடுப்பிற்குப் பின் வெண்கலத் தம்ளரை எடுத்து வைத்தாள்.

உறியிலே திங்கள்களை பந்தோபஸ்து செய்தாள். வீட்டுக்குப் பின்னுலுள்ள ஓடைக்கு மாட்டையும் கன்றையும் ஒட்டிக்கொண்டு போனுள்.

ராமையாவின் மூளை சுறுசுறுப்பாக இருந்தது. சித்தியிடம் பொய் சொல்லித் தெருவுக்கு வந்தாயிற்று. எதிர்க் கடையில் பீடியை வாங்கிப் புகைத்தபடியே நடந்தான். குறுக்குப் பாதை வழியாகச் செண்பகம் அவள் வீட்டுக்கே போவாள் என்று காத்திருந்தான். வந்தது செண்பகமில்லை! சைக்கிளில் ஏமாற்றத்தோடு போகும் முத்தையனைப் பார்த்தான். இன்னுமா செண்பகம் தன் வீட்டிற்கு வரவில்லை? எங்கே போயிருப்பாள்? யோசனைக்குள் குமைந்த சமயம். முத்தையன் சைக்கிள் பாண்டித்துரையின் பங்களா நோக்கிப் போவதைக் கவனித்தான்.

ஒரு மணி நேரமாவது, அந்தத் தெருவின் கீழ்ப் பக்கமுள்ள காட்டோடையின் பாலத்துச் சுவர் மீது அமரலாம். அமர்ந்தான். பொழுது சாம்பலாகிக் கொண்டிருந்தது, பீடிப் புகை போல. யார் யாரோ வீடுகளின் தலைப்பில் குப்பை கொட்டினுர்கள். குழந்தையை அழவிட்டார்கள். அடித்து உள்ளே மீண்டும் அழைத்துப் போயினர். அந்தப் பக்கம் செண்பகத்தின் வாடையைக் காணோம். மனம் சோர்ந்து போனுன், பீடிக் கட்டும் காலியாகி விட்டது.

ராமையா பெரிய ரசிகன். ஆற அமரத்தான் எதையும் செய்வது சுபாவம். தலையிலே, ஏமாற்றம் காரணமாக இருந்த் பாரம் குறைய வேண்டும். முடி திருத்தும் நிலையத்துள் புகுந்தான். தலைக்குள் இருக்கும் பாரத்தை முடிமேல் சுமத்திஞல் என்ன? அலங்காரமாகக் கன்னத்திற்கு எதிர் வழிப்பும், அதிக சுஞேவும் தடவிவிட்டார் சிகை அலங்காரி; அவருக்கு ராமையாவின் தயவு வேண்டும்; அதாவது ராமையா தன்னருகாக வராமல் இருந்தால் போதும்! இப்படிப்பட்ட தயவு!

"ஐயா, என்ன கவலையோட இருக்கிறீங்க?"

"சரிடாப்பா; என் கவலை உனக்குத் தெரிஞ்சு என்னுவப் போவுது"

"இல்லை. சீசன் சமயம் ஆச்சுதே. புதிய புதிய சரக்குகள்," என்று நிறுத்திக் கொண்டார் அலங்காரம். நன்மையோடு தீமையும் ஒட்டிக் கொண்டு வரும் இயற்கை நியதியைப் போல, உடலைத் தேற்ற வரும் அன்பர்கள் உள்ளத்தையும், உடலையும் பணத்தையும் பறி கொடுக்க பெண்ணுருக் கொண்டவர்கள் பலர் பிழைக்க வந்திருப்பார்கள். இவர்களையே 'சரக்கு' என்ற குழூக்குறியில் உணர்த்திஞர் குற்றலத்துக் கடைக்காரர்.

"சரக்கு எங்கேப்பா ஓடப் போவ்து? தள்ளு, குளிக்கப் போகலாம்"

ராமையா போன்ற உள்ளூர்க்காரர்கள் விவரம், அறிந்தவர்கள் பெரிய அருவிக்குள் தலைகொடுக்க மாட்டார்கள். மலை மேல் விழுகின்றதே சிற்

றருவி யென்னும் கானருவி. (பாரஸ்டு பால்ஸ்)அங்கே தான் போவார்கள். அங்கே உள்ள சுகம் தனி. தண்ணீர் அதிகக் குளுமையாக இருக்கும். கூட்டம் குறைவாக இருக்கும். மலை மேல் ஏறிவர ஸ்தூல சரீரிகள் அஞ்சுவார்கள்!

ராமையா சுருட்டு ஒன்றைப் புகைத்துக் கொண்டே ஐந்தருவி ரோட்டைத் தாண்டி, சிற்றருவிக்குப் பிரியும் கிளை பாதையில் மலைக்குப் போகும் சர்க்கார் வன அலுவலக கட்டிடத்தையும் தாண்டி மேலே நடந்தான். சிற்றருவியில் 'சில்' லென்ற குளுமை...அத்தனை குளுமை இருந்தும், அவன் முடி திருத்தியும் மண்டைக்குள் கனம் குறையவில்லை. இன்னும் கொஞ்சம் மேலே போனால், நடப்பதால் தெம்பும், உண்ட உணவு செரித்தும் சுறுசுறுப் பாக்கும்.

எதிரே வந்தது விறகுச் சுமை. இடுப்பொடிய தூக்கி வந்தவள் பெண்.

"அட, நம்ம ஆலங்குளத்தாளா?"

"போ சாமி", என்று அவள் மேலே நடந்தாள்.

"கருத்தும் போயிட்டே, மெலிஞ்சும் போயிட்டே"

அனுதாபத்தோடும் முன்னைச் சொந்தத் தோடும் வார்த்தை யாடிய போது அவன் தலைபாரம் குறைந்தது.

"இனிமே என்ன சாமி? உடம்பை உழைச்சாத்தான் காசு. அந்தக் காலம் மலையேறிப் போச்சு"

"அதுதான் விறகுக் கட்டு மலையை விட்டிறங்குகிறது."

ஆலங்குளத்தாள் மூன்று நான்கு வருஷத்துக்கு முன்னால் அந்த பிராந்தியத்திற்கு 'ஊர்வசி', 'ரம்பை', 'திலோத்தமை' என்ற தேவ மாதர்களின் கூட்டுச் சரக்கு. இன்று வயிற்றுப் பாட்டுக்கு விறகுக் கட்டுகளைக் கட்டி கட்டி அழவேண்டிய விதி தலையில் அழுத்தி விட்டது.

"ஆலங்குளத்தாள் உருவம் மலைப்பாதையின் திருப்பம் தாண்டி மறைந்ததும் ராமையா கிழக்கேயும் வடக்கேயும் பார்த்தான், மலைப் பாதையை. அந்த இடம் வரும்போதெல்லாம் அவன் நின்று பார்ப்பது வழக்கம். நிற்பதற்கு வழவழப்பான சிறு பாறை. கீழே தரைமட்டத்தில் எங்கும் தென்னஞ் சோலை, வாழைக் கொல்லை, நெற்பயிர்.. பசுமை, பசுமை. ஒரே பசுமையின் திண்மை. இடையிடையே வண்ணப் பூச்சியின் இறக்கையிலே வெண்மையான புள்ளிகள் தெரியுமே அப்படிச் சுண்ணும்பு நிற வீடுகள் மீது சிவந்த ஓட்டு வில்லைகள்...ஆங்காங்கே தெரிந்தன. தென்காசி மொட்டைக் கோபுரம் உள்பட தெரிகிற அழகுக் காட்சியில் ராமையாவுக்குக் கொஞ்சம் தலை பாரம் குறைந்தது. மலைக் காட்டின் இனிய பசுமை, ஆரோக்கியமான காற்று....இயற்கையின் பருவச் செழிப்பு...,

மேலே செண்பகா தேவிக்குச் செல்லும் பாதை நீண்டு கிடக்

கிறது. செண்பகாதேவி வரை கூடப் போய்த் திரும்பினுல் என்ன? இலஞ்சிப் பண்ணே யார் தருகின்ற காவல் கூலியில் மண் விழும். வேலேக்கு உலே வைத்து விடாமல் இருக்க அவன் உடனடியாகக் குளிக்க வேண்டும். இலஞ்சிக்குப் போய் மணி மூன்றுக்கு முதலாளி வீட்டில் விழவேண்டும்.

மலேயடி வாரத்துக் கோவில் மணி 'கணகண'வென உச்சிக் காலபூஜை துவங்கும் வெண்கல மணியின் ஒலி. அதே சமயம் ஊராட்சி அமைத்த யந்திர ஒலி சங்கின் ஓங்கார நாதம்; எல்லாம் கதம்பமாகக் காதில் விழுந்தன. சிற்றருவிக்கு மீண்டும் பாதை வழியாக இறங்கி வராமல் குறுக்கே ஏறி இறங்கினுல் நாலே எட்டுதான். திடகாத்திரமுள்ள அவனேப் போன்றவர்கள் மலேயிலே பாதைகளே நம்புவது கிடையாது. நோஞ்சானுக்கும் சக்தி அற்றவர்களுக்குமாக உள்ளது, மலேப்பாதை.

ஏறி இறங்கித் தாண்டிக் குறுக்கே வந்த சமயம், பூத்துக் குலுங்கும் சரக்கொன்றை மரத்தடியிலே எவ்வளவு இனிய நெஞ்சு வெடிக்கும் நெருப்புக் காட்சி!

(தொடரும்)


சிவகாசி

**இண்டஸ்ட்ரியல்**

**பிரின்டிங் ஒர்க்ஸ்,**

லித்தோ பிரிண்டர்ஸ்,
சிவகாசி, தென் இந்தியா.

*

கண்ணேப் பறிக்கும் வர்ண வகைகளில் உங்கள் அச்சுத் தேவைகளேப் பூர்த்தி செய்வதே எங்கள் சேவையில் இன்பமான பகுதி !

**ஸ்ரீ காளீஸ்வரி**

**லித்தோ ஒர்க்ஸ்**

தபால் பெட்டி எண் 42

**சிவகாசி**

அச்சுத் தொழில் வளர்ச்சிக்கு ஓர் அத்தாட்சி எங்கள் ஸ்தாபனம் !

ஒரு முறைப் பரீட்சித்துப் பாருங்கள்.

மக்கள் விரும்பும்

# ராமகிருஷ்ண

# பீடிகள்




## P.R. ஆறுமுகநாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

# கிண்டிக்குப் போவீர்!

''ஆரெஸ்ஸஸ்''

'போவீர், 'புதுமை' நேயர்களே கிண்டிக்கு !' ஐயையோ ! இவன் என்ன குதிரைப் பந்தய மைதானத்துக்குப் போகச் சொல்கிறானா ? என்று கூசுகிறீர்களா ? இல்லை... இல்லை...குதிரைப் பந்தய மைதானத்துக்கு நாம் கூப்பிட்டனுப்பாமலே கூட்டம் சேர்ந்து விடுகின்றதே !

பலர் வாழ்க்கை நிலத்தில் குழி பறித்து அந்த மண்ணினாலேயே சிலருக்கு மேடான இடத்தில் மாளிகை கட்டித் தரும் 'சூதாடிகளின் சொர்க்கம்' நமக்கெதற்கு ?

அதற்கும் அப்பால்—

கட்டாந் தரையாய்க் கிடந்த 130 ஏக்கர்களிலே, திட்டக் குழுவின் தீர்க்க தரிசனத்தால், மத்திய அரசியலாரின் ஒத்துழைப்பால் மாநில அரசாங்கத்தாரின் மதிநுட்பத்தால், தமிழக உழைப்பாளியின் தங்கக் கைகளால் உருவாகி, நமது கண்களை நிரப்பிக் கருத்தை மகிழ்ச்சியில் மிதக்க வைக்கும், கிண்டித் தொழில் பண்ணையைப் பார்க்கத்தான் உங்களைப் போகச் சொல்கின்றேன் !

உருவாகி வரும் இந்தத் தொழிற் பண்ணையைப் பார்வையிடும் பாக்கியம், நிருபர்களுக்கு டிசம்பர் திங்கள் 16-ம் நாள் கிடைத்தது.

ராஜ்ய தொழில் இலாகா கூட்டு டைரக்டர் திரு. ராகவனும், தொழில் இலாகா விளம்பர அதிகாரி திரு. உண்ணியும் நிருபர்களுடன் வந்து திட்டங்களை விளக்கினார்கள்.

சாதாரணமாக, ஓர் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமானால், மூலப் பொருள்கள், இயக்கும் சக்தி, தொழிலாளர்கள், கட்டிடங்கள் போன்ற வசதிகள் முதலில் வேண்டும். திட்டமிடப்பட்டு, ஒரே இடத்தில் நிறையக் கட்டிடங்களைக் கட்டி, இயக்கும் சக்திகளான மின்சாரம், காஸ், அமுக்கப்பட்ட காற்று, நீராவி போன்றவற்றையும், கச்சாப் பொருள்களைக் குறைந்த விலைக்கும் தொழிலதிபர்களுக்குத் தருவதில் இந்தப் பிரச்னைகள் தீர்க்கப்படுகின்றன.

இது போன்ற பண்ணைகள் இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் பெரும் வெற்றி பெற்றுள்ளன.

இந்தியாவில் பல ராஜ்ஜியங்கள் தொழிற் பண்ணைகளைத் திட்டமிட்டிருந்தாலும் கூடப் பெருமளவிற்கு வேலை முன்னேறி இருப்பது, கிண்டி தொழில் பண்ணையில் தான் என்பது பெருமைக்குரியதன்றோ?

கிண்டி தொழில் பண்ணைக்காக மத்திய சர்க்கார், ரூ. 70·03 லட்ச ரூபாய்களைக் கடனாக, 4½% வட்டிக்குக் கொடுத்திருக்கிறது. இதை 20 ஆண்டுகளில் திருப்பித் தர வேண்டும்.

மொத்தம் இந்தப் பண்ணையில் 90 யூனிட்டுகள் இருக்கும்; தற்பொழுது 52 யூனிட்டுகளின் கட்டிடங்கள் கட்டப்பட்டு விட்டன.



(கிண்டி தொழில் பண்ணை: ஓர் தோற்றம்.)

பாக்கியுள்ள 38 யூனிட்டுகளும் 1958 மார்ச்சிற்குள் கட்டப்பட்டு விடும்.

மாநில அரசாங்கம், தொழிலதிபர்களின் விசேஷ சேவை வசதிகளுக்காக, 11 சேவை நிலையங்களை ரூ. 84·47 லட்ச ரூபாய்கள் செலவில், ஏற்படுத்துகின்றது. இவைகளில் பலவிதத் தொழில்களின் இயந்திரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

இது தவிர ஒரு சரஞ்சன் காரியாலயம், மத்திய அம்பர் சர்க்கா நிலையம் ஆகியவை ரூ. 11·02 லட்ச செலவில் திட்டமிடப் பட்டுள்ளன.

மத்திய அரசாங்கம் செருப்புத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையம் 4 யூனிட்டுகளில் செயல்பட்டு வருகின்றது.

மாநில, மத்திய அரசாங்க யூனிட்டுகள் தவிர மற்றவை தனியார் யூனிட்டுகளாக இயங்கும்.

பூர்த்தியாகிப் பணியாற்றுகின்ற சில யூனிட்டுகளைப் பற்றி இனி பார்க்கலாம்.

முதன் முதலாக, ரூ. 9·69 லட்சம் செலவில் உருவாகி வரும், இயந்திர உறுப்பு வார்ப்புத்தொழிற்சாலை. நவீன இயந்திரங்கள் பல இங்கே அமைக்கப்பட்டு தேவையான அளவு வார்ப்புகளை தயாரிக்கின்றன. இதனால்இத்தொழில் பண்ணையின் இயந்திர உறுப்புத் தேவைகள் முழுவதும் பூர்த்தி செய்யப்படலாம்.

அரசாங்க விஞ்ஞான சாஸ்திரக் கண்ணாடிக் கருவிகளுக்கான ஆராய்ச்சிச்சாலை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது; பட்டதாரிகள் பத்துப் பேர் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி முடிந்ததும் ரூ. 500 பெறுமான கருவிகள் இலவசமாக அவர்களுக்குத் தரப்படும்; குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு அவைகளை உபயோகிக்க வேண்டும் என்பதுதான் நிபந்தனை!

கண்களில் கறுப்புக் கண்ணாடி; கைகளில் கண்ணாடித் துண்டும் ஓர் கருவியும்; காஸ்பர்னரில் அப்படி இப்படிக் கண்ணாடியை அசைத்து, கருவியால் தங்கள் கைத்திறனைக் காட்டுகிறார்கள்; அவ்வளவுதான்! தேவையான வடிவங்கள்! வேண்டிய கருவிகள்! அற்புதம், போங்கள்!

இங்கே உற்பத்தி ஆக்கப்பட்ட விஞ்ஞானக் கருவிகளை-சோதனைக் குழாய்கள், பிப்பெட், பியூரட் போன்றவைகளைப் பார்த்தோம்.

இரசாயனக் கருவிகளில் அளவை

களைக் குறிக்க நவீன இயந்திரங்களை இங்கிலாந்தில் இருந்து தருவித்துள்ளார்கள்.

கண்ணாடி பொம்மைகளில், டான்க்விக்ஸாட், காந்திஜிக்குப் பிடித்த மூன்று குரங்குப் பொம்மைகள், ஏர் உழவன், முருகன் போன்றவை என்னைக் கவர்ந்தன. டான்க்விக்ஸாட்டின் பொம்மையை ஸ்ரீ மொரார்ஜீ தேசாய்க்குப் பரிசாகக் கொடுத்தார்களாம்!

'பத்து பேருக்குத்தானா இங்கே பயிற்சி?' என்ற ஒரே குறையுடன் வெளி வந்தோம்!

அடுத்து மத்திய அரசாங்க செருப்புத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டோம்.

கன்னியா குமரியிலிருந்து காஷ்மீர் வரையுள்ள பரந்த பகுதிகளிலிருந்தும் 90 மாணவர்கள் இங்கு பயிற்சி பெறுகின்றனர். இங்குள்ள நிபுணர்களுக்கு ரூ. 300. சம்பளம், நாளுக்கு ரூ. 30க்கு அதிகமான படி என்று கேள்விப்பட்டதும் அயர்ந்து போனேன்!

ஒரு நிருபர், இந்த நிலையத் தலைவரை 'நீங்கள் போட்டுள்ள செருப்பு இங்கே செய்ததுதானா?' என்று கேட்டுவிட்டார்! பாவம், அவர் 'இல்லை...' என்று சற்றுத் தயங்கியே சொல்ல வேண்டியதாயிற்று.

விளையாட்டுக் கருவிகள் தயாரிப்பு நிலையமும், மரச் சாமான்கள் தயாரிப்பு மாதிரி நிலையமும் என்னைப் பெரிதும் கவர்ந்தன!

கிண்டித் தொழிற் பண்ணைக்கு எதிரே...பிரமாண்டமான மத்திய பல்துறைத் தொழில் நுணுக்கப் பயிற்சிக் கல்லூரிக் கட்டிடம் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. பயிற்சிக் கல்லூரி பண்ணைக் கருகிலிருப்பதே பொருத்தம் அல்லவா?

தொழிலாளர்கட்கு வீடுகளையும் சீக்கிரத்தில் கட்டப்போகிறார்கள்.

முடிவாக, கிண்டித் தொழிற் பண்ணையால், தென்னகத்தின் தொழில் வளம் சிறக்கும்! விருதுநகர், பேட்டை, ஈரோடு தொழிற் பண்ணைகளும் அதற்குதவி செய்யும்!

இலட்சக் கணக்கானவர்கள் வாழ்வைப் பறித்த கிண்டி, இனி இரண்டாயிரம் பேர்களுக்கு வேலை தந்து வாழ்வளிக்கும் பணி புரியும்! இன்று குதிரைப் பந்தய மைதானத்தால் புகழ் பெற்றுள்ள கிண்டி, வருங்காலத்தில் 'தொழில் நகரம்' என்ற சிறப்புப் பெறும்!

O

(கிண்டி தொழில் பண்ணை: மற்றோர் தோற்றம்.)



## காயலின் கண்மணியே! மறைந்தாயோ?

ஜனுப் அ. க. அவர்கள் மறைவால் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அனைவருக்கும் 'புதுமை'யின் ஆழ்ந்த அனுதாபம்.

குடி நீரின்றித் துயருற்ற காயல் வாசிகளின் கண்ணீரை மாற்ற அரசாங்கமே 'நிதி இல்லை' என்று கை விரித்த பொழுது, 'இதோ... நான் இருக்கிறேன்' என்று முன் வந்து, பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை அள்ளிக் கொடுத்து, 4 இலட்சம் நிதி திரட்டிய வள்ளல் இன்று இல்லை.

சென்னை மாநிலத்திலேயே ஓர் முன் மாதிரியாக நின்று சர்க்கார் ஆரம்பிக்கு முன்னரே, காயல்-நேரி உயர் நிலைப் பள்ளியில் 150 மாணவர்களுக்கு இலவச நண்பகல் உணவு படைத்த பண்பாளர் மறைந்து விட்டார்.

அவர் விட்டுச் சென்ற நற்பணிகளைத் தொடர்ந்து நடத்துவது தான் இனி நமக்கு ஆறுதலளிக்கும். அதைச் செய்வோமாக!

— ஆசிரியர்.

---

தொண்டர்கள் துணையின்றித் தவிக்க 3-12-57 அன்று பட்டிணம் மர்ஹூம் அ. க. முகம்மது அப்துல் காதிர் அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டார்.

'தோன்றிற் புகழுடன் தோன்றுக' என்ற வள்ளுவர் வாக்கினை உண்மையாக்கி வாழ்ந்தவர் ஜனுப் அ.க. அவர்கள். வாழ்க அவர் நாமம்!

குலசை M. S. தீன்.

---


# அகில இந்திய காதி, சுதேசி, தொழில் பொருட்காட்சி,

காங்கிரஸ் மைதானம், தேனும்பேட்டை, சென்னை.

நூற்றுக்கணக்கான ஸ்டால்கள்! நூதன சாமான்கள்!

கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்துகள்!

இதுவரை சென்னை நகர் கண்டிராத மாபெரும் பொருட்காட்சி!

மத்திய, மாநில அரசாங்கத் துறைகளின் மகத்தான ஸ்டால்கள்!

தொழில் துறை வேந்தர்களின் எழில் மிகு கடைகள்!

டெலிவிஷன், திறந்த வெளி அரங்கம்,

சிறப்பு அம்சங்கள்!

இன்றே வருக! இன்பம் பெருக!

**பொருட் காட்சிக் கமிட்டியார்.**

போன் : 2257

# ஸ்ரீ பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

## செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள் : 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும் கதிர்கள் : 3,472

★

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான துணியையும் பொறுத்திருக்கிறது.

எங்கள் ஆலை மிக நேர்த்தியான உயர்ரக நூல்களை விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் & ரங்கசாமிநாயுடு ஸன்ஸ் கம்பெனி

Tel : PREMIER Phone No. 66

# THE PREMIER LITHO WORKS

Post Box No. 37

**P. K. S. STREET, SIVAKASI (S. INDIA)**

**Creative Lithographers and offset Printers,**

(Premier House for Attractive Calenders, Posters, Invitations for all commodities)

We undertake the printing of lable for matches, Beedies, Fireworks etc., soap wrappers waxed and ordinary.

*Speciality* : **PHOTO OFFSET PRINTING.**

## பிரீமியர் லித்தோ ஒர்க்ஸ்,

தபால் பெட்டி 37, சிவகாசி

அழகான கலர் காலண்டர்கள், போஸ்டர்கள், அழைப்பிதழ்கள், சோப் ராப்பர்கள், சோப் லேபில்கள், தீப்பெட்டி, பீடி, வாண தொழிற்சாலைகளுக்கான லேபிள்கள் பிரிண்ட் செய்கிறோம்.

---

# சுடர்

*தீப்பெட்டிகள்*



3ISTAS-

தயாரிப்பாளர் ;

## அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை

**பெரம்பூர், சென்னை.**

வியாபார விஷயமாக விசாரிக்குமிடம் :

**தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை-5.**

# பொங்கல் விரதம்!




**வளரும் குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சுகளில் காணப்படும் தூய்மை, வாழ்வின் முடிவுவரை காப்பாற்றப்பட்டு விட்டால், உலகில் பிறகு வஞ்சகத்திற்கும், சூதிற்கும் இடமுண்டோ? இந்த உயரிய கருத்தைப் பின்னணியாகக் கொண்டு 'பொங்கல்' விரதத்தைப் பின்னுகின்றார், ஆர். பி. மல்லாரி.**

அன்று 'அல்லாப் பண்டிகை' தினம்! தீ மிதிக்கும் நாள்!

நபி அவர்களின் பேரர்களுக்குண்டான பயங்கரமான சோகமுடிவை எண்ணி மனம் கொதித்து வருந்த வேண்டிய தினம்.

அமீர் இலாஹி தன் திறமையை எல்லாருக்கும் தெளிவாக எடுத்துக் காட்டத் தயாராக இருந்தார்!

சுமார் ஐந்தடி அகலம், பதினைந்தடி நீளமுள்ள ஒரு குழியில் பல வண்டி விறகுக் கட்டைகள் எரிந்து கொண்டிருந்தன. காலையில் பத்து மணிக்கெல்லாம் தீ தயாராக இருக்க வேண்டுமென்று இரவு ஒரு மணிக்கே ஒரு பாட்டில் எண்ணையை ஊற்றி கொளுத்தி விட்டிருந்தார்கள். சுமார் ஒன்றரை அடி உயரத்துக் குத்தி பரவி இருந்தது. முப்பது, நாற்பது கெஜம் தூரத்தில்



னின்ருலும், அனல் அடிக்கும் வகையில் அதன் தணல் பரவி இருந்தது.

கடைசியில் இலாஹி ‘பஞ்ஜா’ (“அல்லா”) வைத் தூக்கிக் கொண்டு வந்தார் ; அநாவசியமாக அந்தத் தீயில் நடந்து சென்ருர். இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக சுமார் பத்துப் பன்னிரண்டு தடவை நடந்தார். தணலில் மூன்றங்குலம் வரையில் அவர் பாதங்கள் பதிந்திருந்தன. ஆனல் கொஞ்சங்கூட ரணமாகவில்லை.

அவர் முகம் புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தது. ஆனல், அவர் எதிரிகள் சுலபமாக ஒப்புக் கொள்வார்களா இந்த வெற்றியை? நெருப்பின் சூட்டைத் தடுக்கும் மருந்தைக் காலில் தடவிக்கொண்டு வந்திருப்பார் என்றனர் ஒரு சிலர். ஒரு வேளை கால் மரத்துப் போகும் வகையில் ஏதேனும் செய்திருப்பாரோ என்று சந்தேகப்பட்டனர் வேறு சிலர். இது ‘ஹிப்னுடிஸம் தான் ; வேறில்லை !’ என்பது இன்னெரு சாராரின் கருத்து. ஆனல் இவைகளுக் கெல்லாம் தலைமை தாங்கி வெற்றிகரமாக இதுபோல சந்தேகங்களைக் கிளப்பி விட்ட பெருமை பூங்காவனத்தைத் தான் சாரும் ! காரணம் அநேக நாட்களாக நண்பர்களாக இருந்து திடீரென்று பிரிந்து போனவர்கள் அவர்கள். ஒருவர் ஏதேனும் ஒரு சாதனையைச் செய்து காண்பித்து விட்டால், மற்றவர் அதை அவ்வளவு சுலபமாக ஒப்புக் கொள்ள முடியுமா ?



ஆனல் பூங்காவனத்தின் மகன் கடம்பவனம், இலாஹியின் மகன் குரேஷ் சொன்னதை நம்பினுன் !

“எங்க அப்பா நெருப்பிலே நடந்தார்னு அதுலே ஒண்ணும் பிரமாத விஷயமில்லை. நானே என் வாப்பாவைக் கேட்டேனே. அவரே சொன்னுர். தீ மிதிக்கிறதிலே சூது வாது எதுவுமே இல்லையாம் ; சாதாரணமா யாரும் அதைச் செய்யலாம்; தணல்லே கால் வக்கிருங்கல்லே அப்போ அழுத்தாம வைக்கணும். பாதம் படுற நேரம் எவ்வளவு குறைவா இருக்க முடியுமோ அவ்வளவு குறைவா இருக்கணும். காலை லேசா வைச்சு, வேகமா நடந்து போனு நெருப்பு கால் தோல்லே உறைக்கிறதுக்கு முன்னுலே, பாதம் வேற இடத்துக்குப் போயிடுது. அதனுலே கால் கொப்புளிக்கிறதில்லை... நெருப்புத் ண்டு ஒண்ணு கீழே விழுந்துட்டா, நாம் அதைச் சீக்கிரமா எடுத்துப் போட்டிடுறதில்லே, அதுபோலத்தான் இந்த வேலையும் !...... வேற கண்கட்டு வித்தையே இல்லை !”

குரேஷ் பிரமாதமாக விவரித்துக் கொண்டிருந்தான். இதைக் கேட்டு கடம்பவனம் ‘கட கட’ வெனச் சிரித்தான். ‘பூ ! இவ்வளவுதாஞ !’ என்று அவனுக்குத் தோன்றியது. ஆனல் இதுபோல வேலை எல்லாம் அவசியந்தாஞ என்று அவனுக்குப் புரியவில்லை. இந்த வேலைக்காகப் போட்டி கூட போடுருங்களே என்றும் வியப்படைந்தான் ! தன் தந்தை பூங்காவனதிடம் இந்த இரகசியத்தைச் சொன்னுன். அவர் நம்ப ததுபோல தன் மகனை விரட்டி அனுப்பி விட்டாலும், இந்த விஷயம் அவர் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. தானும் இது போல ஒரு வேலை சய்து காட்டி, அந்தக் கிராமத்தாரின் பெருமதிப்பைப் பெற்ருல் என்ன ?’ என்று தீவிர

மாக யோசனை செய்யலானுர்.

பல நாட்கள் கழிந்தன.

அவருக்கு சர்க்காரில் தான் பார்த்த ஒரு வேலை ஞாபகத்துக்கு வந்தது.

இலாஹி நெருப்பைக் காலால் மிதித்து ஒரு வேலை செய்தால், தான் வாயிலேயே நெருப்பைப் பற்ற வைத்தால் என்ன வென்று எண்ணினுர். இது பயங்கரமான வித்தைதான். வாய் நிறைய பெட்ரோலை வைத்துக் கொண்டு, ஒரு குழாய் மூலமாக அதை ஊதி , அந்தச் சமயத்திலே நெருப்பைப் பற்றவைப்பது அவ்வளவு எளிதல்ல, என்பது அவருக்குத் தெரியும்.

அதற்கான பயிற்சியைப் பெறலானுர். தீபாவளிக்குள் இந்த வேலையைச் செய்து காட்டி, இலாஹியை விட ஒரு படி மேலான "பட்டம்" பெறவேண்டாமா? அது என்ன பட்டம் என்று அவருக்கே தெரியாது!

ஒரு எஃகு கம்பி வழியாக வாயிலிருக்கும் பெட்ரோல் போய், கம்பியின் முனையில் கட்டப் பட்டிருக்கும் துணி பந்தத்தில் படும்; அந்தப் பந்தம் தீ வைக்கப்பட்டு, தொடர்ந்து வரும் பெட்ரோலினுல் எரியும்!

ஆனுல் இந்த வேலையில் ஒரு பெரிய சாதனையும் செய்யவேண்டும். நெருப்புக் கொழுந்துகளிலிருந்து புறப்படும் புகையைச் சுவாசிக்கவே கூடாது. இந்தப் புகை சுவாசப் பைக்குள் புகுந்தால் சுவாசப்பைக்கு ஆபத்து. அதாவது, நெருப்பு அணையும் வரை சுவாசிக்கக் கூடாது!

இந்த நிலையில் வாயிலிருக்கும் பெட்ரோலை நெருப்பு வைத்தார். இந்தப் பயங்கரச் சோதனைக்கு ஒரே மூலகாரணம் — இலாஹியைவிட பெரிய சாதனை செய்ய வேண்டும்! போட்டி மனப்பான்மை!

தீபாவளியன்று இந்த சர்க்கஸ் வேடிக்கையை பூங்காவனம் மிகவும் திறமையுடன் செய்துகாட்ட, இந்தச் செய்தி காட்டுத் தீ போல எங்



கும் பரவி விட்டது. அக்கம் பக்க முள்ள கிராமங்களிலெல்லாம் பூங்காவனத்தைப் பற்றியே பேச்சு. தீபாவளியன்று கிடைத்த பட்டாஸைக் கொளுத்தக் கூட மறந்து போனார்கள். பூங்காவனம் வைத்த தீயைப் பற்றிப் பேச யாரும் மறக்கவில்லை. தீ மிதித்ததைவிட தீயை மென்றது மெச்சத் தக்கதில்லையா?

இலாஹி தம் மனதுக்குள் பொங்கினார். பூங்காவனத்தைத் தூக்கிச் சாப்பிடும் வகையில் இன்னொரு வேலை செய்து காட்ட வேண்டுமென்று உடனே தீர்மானம் செய்தார்! கத்தியை விழுங்கினால்? சாதாரண மனிதன் சுமார் ஒன்றரை அடி நீளமுள்ள பொருளைத்தான் விழுங்க முடியும். தான் சுமார் இரண்டடி, இரண்டேகாலடி நீளமுள்ள பொருள்களை அப்படியே விழுங்கினால் என்ன? அதுவும் இரண்டடிக்கு மேல் நீளமுள்ள கத்தி? வெகு எளிதில் வளையக் கூடிய வாள் ஒன்றை வாங்கி, தன் வயிற்றை எட்டும் வகையில் விழுங்கிக் காட்டினால்?.........இதுவரை யாரும் செய்து காட்டாத மிக மிகத் துணிச்சலான செயல்.......

இலாஹி அதற்கான பயிற்சியை தீபாவளி தினத்தன்று முதல் ஆரம்பித்தார்—இழை தவறினாலும், தம் உடலின் உள் பாகங்கள் கத்திபட்டு அறுந்து போகும் என்பதை நன்றாக உணர்ந்தும்!............

தீபாவளியன்று இலாஹியின் மகன் குரேஷும் பூங்காவனத்தின் மகன் கடம்பவனமும் ஆனந்தமாகப் பச்சை மத்தாப்பும் சிகப்பு மத்தாப்பும் கொளுத்திக் கொண்டிருந்தனர். குரேஷும், தீபாவளி கொண்டாடினான்! குழந்தைகளுக்குள் வெவ்வேறு இருதயம் கிடையாது!

"நான் பச்சை" என்றான் குரேஷ்.

"நான் சிகப்பு" என்றான் கடம்பவனம். "அப்பா! நம்ம ரெண்டுபேர்லே யாருமே டேஞ்சரா இருக்க வேண்டாம்" என்றார்கள் இருவரும் சேர்ந்து!

அடுத்த இரண்டு நிமிஷங்கள் கபடமற்ற சிரிப்பு!

பிறகு இருவரும் அழகான கம்பி மத்தாப்பு கொளுத்த ஆரம்பித்தார்கள். இந்தச் சிறுவர்களுக்குள் போட்டி மனப்பான்மை என்பதே கிடையாது!

"நம்ம மனசு மாதிரி சுத்தமாகவும் நம்ம மனசு மாதிரி ஒத்துமையாகவும், நம்ம மனசு மாதிரி மற்றவர்கள் துன்பத்தைக் கண்டு இரங்கும் படியாயும், நம்ம பெரியவர்களுக்கு—அதுலேயும் தலைவர்களுக்கு எண்ணங்கள் இருந்தால்" என்று இழுத்தான் குரேஷ்......நம்பிக்கை ஒளியோடும் கண்களை விரித்தபடி... "நாட்டிலே இல்லைங்குற பேச்சே இருக்காது!" என்று முடித்தான் கடம்பவனம்.

மத்தாப்பு வெளிச்சத்தில் அந்தச் சிறுவர்களின் மாசற்ற முகங்கள் ஜெகஜ் ஜோதியாக பிரகாசித்துக் கொண்டிருந்தன!

இதை இலாஹி கண்டார். ஆனால் கிறிஸ்துமஸ் தினத்திற்கு முன் இந்த வாள்வேலையை செய்து காட்ட வேண்டுமென்ற தீர்மானம் மட்டும் அவர் மனதை விட்டு அகலவில்லை! டிஸம்பர் 25ந் தேதி கிறிஸ்து மகான் பிறந்ததினம்! அன்றுதான் இலாஹி கத்தியை முழுதும் விழுங்கினார்!

பூங்காவனம் பொங்கல் தினத்தன்று வேறு ஏதோ அபாயகர வித்தையைச் செய்யப் போவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

இந்தப் போட்டியும், பூசலும் எதிலே போய் முடியுமோ?

கடம்பவனத்துக்கும், குரேஷுக்கும் உள்ள உள்ளத் தூய்மை நம்மில் ஒவ்வொருவருக்கும் இருந்தால்...உலகில் பிறகு போர் ஏது? பூசலுக்கு இடமேது முண்டா?

அந்த உள்ளத் தூய்மை ஓங்கட்டும்! இதுவே நமது பொங்கல் விரதமாக இருக்கட்டும்!

த. பெ. நெ. 297

# S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

**83-85, குமாரவீதி :: கொழும்பு-11.**

—:●:—

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகாரவகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனா, சிலேட் பென்சில் வகைகள், சாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாய மாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**பிராஞ்சு:**

**போன்: 333**

19, கொட்மலே ரோடு

**நாவலப்பிட்டிய.**

—:●:—

**ஏஜன்ட்ஸ்:**

**போன்: 3262** த. பெ. நெ. **2345**

## S. சந்தோச நாடா & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதரூஸ்.

&

37, ஹைரோடு

**திருநெல்வேலி ஜங்ஷன்.**

பொன்னையா சுவாமி துணை

TRADE MARK
Regd. No. 161859

மதுரை நாடார் கடை

**M. N. P.**

**லிங்க மார்க்**

# சுருட்டுகள்

**M. N. P.** லிங்க மார்க் பட்டணம் பொடி, துண்டு, நைஸ், சிவபுரிபானை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.

M.N.P.N. & M.N.P.T.

மதுரை.

phone: 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.

## ஜோதீ

## ஆனந்த பவான்

காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்

கீழமாசி வீதி, மதுரை.

N.B.—ஜோதி ஆனந்தா காபி ஓர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

தபால் பெட்டி நிர்: 17 :: போன்: 65

# தீ ஓரியண்ட் லித்தோ பிரஸ்

## சிவகாசீ

வித விதமான உயர்ந்த கலர்
அச்சிடுவதற்கு சிறந்த, புகழ் வாய்ந்த

**லித்தோ பிரஸ்**

# விரல் வீக்கம் ஏதுக்கடி?

**ராஜன்**

**'சைவ உணவு மகாநாடு' சென்னையில் நடந்தது... நம்மில் சிலர் அதைக் கவனித்திருக்கலாம். ஆனால் எல்லோராலும் 'ராஜனை'ப் போல கற்பனைக் குதிரையை ஓட்டி இத் தகைய சிறந்த நகைச்சுவை நாடகத்தைப் படைக்க முடிகிறதா என்ன?**

[அண்ணாமலை தம் வீட்டுக் கொல்லைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார். அடுத்த வீட்டுச் சங்கரன் வேப்பங் குச்சியை வைத்துப் பல் விளக்கிக் கொண்டு அவருடைய தோட்டத்திலிருந்து எட்டிப் பார்க்கிறார்.]

அண்ணாமலை : (தனக்குள்) காலையில் கடின வேலை செய்தால் உடம்பிற்குத் தனி சோபைதான்!

சங்கரன் : (தனக்குள்) காலையில் வேப்பங்குச்சியில் பல்லைத் துலக்கினால் உடம்பிற்குத் தனி சுறு சுறுப்புதான்!

அண் : ஹலோ, சங்கரனா? அடுத்த வீட்டு வேப்பமரத்திலிருந்து குச்சி கிடைக்கும்போது சுறுசுறுப்பு மட்டுமா வரும்; பல் பொடி வாங்குகிற காசும் மிச்சமாகுமே!

சங் : அண்ணாமலை, அப்படித் தான் நீங்களும் மிச்சம் பிடியுங்களேன்!

அண் : வேண்டாம், ஐயா. வேண்டாம். ஒரு நாள் நான் வேப்பங் குச்சியை வைத்துத் தேய்த்து விட்டு, ஒன்பது நாள் பல்வலியினால் அவஸ்தைப் பட்டேன்.

சங் : ஆனால் இந்தப் புது அவஸ்தை எதற்குப் படுகிறீர்கள்? இந்த உள்ளங்கைத் தோட்டத்தில் முள்ளங்கி போடப் போகிறீர்களா?

அண் : இல்லை, பசுமாடு கட்டு வைக்கப் போகிறேன்! நாலைந்து கன்றுக் குட்டிகள் முளைத்தால் கசக்கவா செய்யும்?

சங் : அப்படிச் சொல்லுங்கள்! அதுதானே பார்த்தேன். ஏன் இவ்வளவு ஆழமாகத் தோண்டுகிறீர்களென்று. இப்போது தான் தெரிகிறது.

அண் : போங்கள், ஐயா; ஏன் கேலி பேசமாட்டீர்கள். நீர் ஐந்து மணிக்கே எழுந்து தோட்ட வேலையை முடித்து விட்டீர். எனக்கு வேலை கிடக்கிறது. இன்னும் நாலு பாத்தி கொத்தியாகணும்.

சங் : சரி. நடத்துங்கள். பேனா பிடிக்கிற கை மண்வெட்டி பிடிக்கிறதாக்கும். நான் வருகிறேன். [வீட்டுக்குள்ளிருந்து அண்ணாமலையின் சகதர்மிணி அற்புதம் குரல் கொடுக்கிறாள்.]

அற்புதம் : அங்கே என்ன பேச்சு? வேலையை முடித்துவிட்டு சீக்கிரம் வாங்கோ, ஆபீசுக்கு நேரமாகலையா?

அண் : நீ உன் வேலையை முடித்துவை. இதோ வந்து விடுகிறேன்.

அற் : (முணுமுணுக்கிறாள்) இந்த சைவ உணவு மகாநாடு வந்தாலும் வந்தது, இங்கே நல்லாக்கிடந்த நிலத்தை கொத்திக் கொதறி அமர்க்களப்படுத்துகிற வேலை

யாய்ப் போச்சு.

அண் : (வந்துகொண்டே) என்ன முணுமுணுக்கிறாய் ? காய்கறி வேண்டுமென்றால் தரையிலிருந்துதான் விளைவிக்கவேண்டும். ஆகாயத்திலிருந்து விழுமா ?

அற் : ரொம்ப அற்புதமாகத்தான் பேசுகிறீர்கள் !

அண் : நீ இருக்கும்போது என் பேச்சு அற்புதமாகத்தான் வரும், அற்புதம் !

அற் : (கோபமாக) குழந்தைகள் மகாநாட்டுக்குப் போய் விட்டு வந்து அவர்கள் மாலை நேரம் ஆடி ஓடி விளையாட வேண்டுமென்று கொல்லைப்புறம் விசாலமான இந்த வீட்டைப் பிடித்தீர்கள். இப்போது சைவ உணவு மகாநாடு வந்து நிலத்தைக் குண்டுங் குழியுமாக்கி விட்டீர்கள். அடுத்தாற்போல எந்த மகாநாடு வரப்போகிறதோ, கடவுளே ?

அண் : மகாநாடுகளுக் கெல்லாம் ஒரு மகாநாடு கூடி......

[அடுத்த வீட்டு சங்கரன் வருகிறார்.]

சங் : அண்ணாமலை, இன்னும் ஆபீசுக்குப் புறப்படவில்லையா ?

அண் : நீங்கள் போங்கள், ஐயா ! இங்கே ஒரு மகாநாடு கூடப் போகிறது. முடித்து விட்டு வருகிறேன்.

சங் : என்னையும் ஒரு பிரதிநிதியாகச் சேர்த்துக் கொள்ளுங்களேன்.

அண் : அவசியம் உமக்கு ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்கச் சிபார்சு செய்கிறேன். 'வேம்பு கெடுப்போர்' சங்கப் பிரதிநிதியாக நீர் கண்டிப்பாக இருக்கலாம். சரி, உங்கள் கையில் என்ன ? பெரிய கட்டாகக் கட்டியிருக்கிறீர்களே !

சங் : எப்படியாவது மகாநாட்டில் சேர்த்துக் கொள்ளுங்கள். நான் வருகிறேன். கை விஷயம் நாளைக்கு.

[சங்கரன் போகிறார்.]

அற் : நல்ல வீடு பார்த்தீர்கள். பக்கத்து வீட்டில் இப்படி ஒரு தொணதொணப்பு இருந்தால் இங்கே குடித்தனம் நடத்தின மாதிரிதான். எதற்கெடுத்தாலும் முந்திரிக் கொட்டையாய் வந்து நிற்கிறாரே !

அண் : ஆபீசர் காலனியில் வீடு பிடித்தால் இப்படித்தான் இருக்கும். அவர் வேம்பு நிபுணர். முதலில் கசக்கத்தான் செய்யும். போகப் போக உடம்பிற்கு நல்லது.

அற் : உடம்பிற்கு நல்லது என்று அந்த ஆளையே கஷாயம் போட்டுச் சாப்பிட்டு விடாதீர்கள். சரி, குளித்துவிட்டு சாப்பிட வாருங்கள்.

**[அலுவலகத்தில்.]**

பரமானந்தம் : மிஸ் மனோகரி, இதைக் கொஞ்சம் டைப் அடித்துத் தாருங்கள்.

மனோகரி : என்ன சார், இது ? கையில் என்ன, பெரிய கட்டுப் போட்டிருக்கிறீர்களே !

பர : அதனால்தான் எழுத முடியவில்லை. டைப் அடித்தாவது இன்றைய வேலையை முடித்துக் கொள்ளலாமென்று வந்தேன்.

மனோ : பரமானந்தம் சார், இன்றைக்கு வேலை தலைக்குமேலே கிடக்கிறது! பாருங்கள், இத்தனை கடிதங்களையும் டைப் அடித்தாக வேண்டும். நாளைக்கு வாருங்கள்.

பர : நாளைக்கு வருவதாகயிருந்தால் இன்று உங்களைக் கஷ்டப்படுத்தமாட்டேன். இப்பொழுதே வேண்டுமாம். மானேஜர் சொல்லியனுப்பியிருக்கிறார்.

மனோ : உங்கள் கையிலென்ன ?

பர : அதையேன் கேட்கிறீர்கள் ?

[அண்ணாமலை வருகிறார்.]

அண் : மிஸ் மனோகரி, இந்த டிராப்டை டைப் அடித்துத் தாருங்கள்.

மனோ : சார், உங்கள் கையிலென்ன?

அண் ; அதுவா ? அது வந்து, வந்து நாளைக்குச் சொல்லு கிறேன்.
மனோ : இப்படி நீங்கள் எல்லோ ரும் எழுதுவதையெல்லாம் டைப் அடிக்கவேண்டுமென்றால் நான் ஒருத்தி என்ன செய்ய முடியும் ? சற்று முன்புதான் மிஸ்டர் சங்க ரனும், பார்த்தசாரதியும் வந்தார் கள். அவர்களுக்கும் எழுத முடிய வில்லையாம்.
அண் : அப்படியா சங்கதி. ஏது, பெரிய வம்பாகமுடியும் போலி ருக்கிறதே !
பர : வம்பு என்ன சார், வம்பு. நாம் என்ன வேண்டுமென்று கட் டுப் போட்டிருக்கிறோம் ?
அண் : சரி, உம் கையில்தான் என்ன ?
பர : உங்கள் கையில் என்ன வென்று முதலில் சொல்லுங் களேன், வெட்கப்படுகிறீர்களா ?
அண் : இதிலென்ன ஐயா, வெட் கம் ஆரஞ்சுப்பழம் சாறு பிழிந் தேன், பாருங்கள், கண்ணாடிக் குமிழ் குத்திவிட்டது.
பர : எனக்குக் கத்தி கிழித்து விட்டது.
மனோ : (சிரித்து) சுத்தப் பொய், பொய். எனக்குத் தெரியும்.
அண் : என்ன தெரியும் ?
பர : என்னவாம் ? சொல்லுங்கள், மிஸ் மனோகரி ?
மனோ : (சிரித்துக் கொண்டே) இன்றைக்கு வீட்டில் சாதம் வடித் திருப்பீர்கள். தவறி கையில்....
அண் : (சிரித்து) பெண்களுக்குப் புத்தி அதில்தான் போகும்.
மனோ : இல்லாது போனால் மீன் முள் தைத்திருக்கும்.
பர : அபசாரம், அபசாரம். அம்மா மனோகரி, இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கற்பனை லகான் தெறித்து ஓடுகிறது.
அண் : கடிவாளத்தைச் சீக்கிரம் ரிப்பேர் செய்யுங்கள்.
பர : இன்னும் சிறிது நேரத்தில் நாங்கள் சிங்கம், புலிகளுடன் சண்டை போட்டதால் ஏற்பட்ட காயம் என்றுகூடச் சொல்லி விடு வீர்கள்.
மனோ : கற்காலத்தில் நம் முன் னோர்கள் அப்படித்தான் சண்டை போட்டு வந்தார்கள்.
அண் : இந்தக் காலத்தில் காட்டில் சிங்கம் புலிகளெல்லாம் ஏது ? எல்லாமே நாட்டிற்குள் வந்து பெண்களாகி விட்டன.
மனோ : பெண்களைக் கேலி செய்ய வேண்டுமென்றால் நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு வந்து விடு வார்கள் இந்த ஆண்கள் !
பர : அந்த நாக்கையுந்தான் பெண் சிங்கங்கள் மேல் வாயோடு ஒட்ட வைத்து விடுகிறார்களே. நாங்கள் எங்கே பேச முடிகிறது?
மனோ : இந்த வீண் பேச்செல்லாம் எதற்கு ? எனக்கு இத்தனையும் டைப் செய்ய முடியாது. மானேஜ ரிடம் கேட்டு விட்டுத்தான் செய் வேன் .
[மனோகரி எழுந்து நேரே மானேஜர் அறைக்குள் போகிறாள்.]
அண் : போச்சு தடா ! இவள் போய் என்ன வத்தி வைக்கிறா ளோ, தெரியவில்லையே.
பர : வாருங்கள். நம் தோழர்களை நாம் அதற்குள் உஷார் படுத்தி விடுவோம்.
[சிறிது நேரங் கழித்து மானேஜர் எல்லாக் குமஸ்தாக்களையும் கூப் பிட்டனுப்ப எல்லோரும் அவரு டைய அறைக்குள் போய் நிற்கிறார் கள்.]
மானேஜர் : என்ன ? எல்லோரும் கையில் கட்டுப் போட்டிருக்கிறீர் களே. என்ன சங்கதி ? மிருதங் கம் பழகுகிறீர்களா ?
எல்லோரும் : ஒன்றுமில்லை, சார்.
மானே : ஒன்று மில்லாததற்கு வரிந்து வரிந்து கட்டுவானேன். எங்கே பியூன் ? ராமசாமி, எல் லோருடைய கைக் கட்டுக்களையும் அவிழ்த்துவிடு. அவர்களாகக் காட்டமாட்டார்கள்.
எல்லோரும் : சார், சார், வேண்

டாம். சொல்லி விடுகிறோம்.

[ஒருவர்க்கொருவர் மெதுவாகப் பேசிக் கொள்கிறார்கள். மனோகரி யின் உதடுகள் சிரிப்பைத் தாங்க மாட்டாமல் துடிக்கின்றன.]

அண் : போன மாதம் நடந்த சைவ உணவு மகா நாட்டிற்குப் போயி ருந்தோம்.

மானே : (சிரித்து) ஓஹோ! இப் பொழுது தான் புரிகிறது. அந்தப் பிரசங்கங்களைக் கேட்டுவிட்டு, இத்தனை காலம் அசைவ உணவை அள்ளிக் கொடுத்த கைகளை கடித் துக் கொண்டீர்களா? ஏதோ பக்த விஜயத்தில் படித்த கதை மாதிரி யிருக்கிறதே!

[மனோகரியின் கிளுகிளுப்பான



சிரிப்பொலி அந்த அறையில் எதி ரொலிக்கிறது. மற்றவர்கள் சப்த நாடியும் ஒடுங்கி நிற்கிறார்கள்.]

மானே : சொல்லுங்களேன், அப் படித்தானே.

சங் : இல்லை, சார். காய்கறித் தோட்டம் ..

மானே : (உரக்கச் சிரித்து) காய் கறித் தோட்டம் போட்டீர்களா? மண்வெட்டி, கடப்பாரை, கோடாலி, அரிவாள் பிடித்து வேலை செய்தீர்களா? ஹஹ்ஹா!

பர : ஆமாம், சார். அதனால் தான் கை கொப்புளித்து விட்டது. விரல்கள் வீங்கி மடக்க முடிய வில்லை.

மானே : கையையும் கெடுத்து ஆபீசு வேலையையும் கெடுத்து விட்டீர்கள். கடைகளில் காய் கறிகள் கிடைக்கவில்லையா?

மனோ : நிறையக் கிடைக்கிறது, சார். இன்று காலையில் கூட எங்கள் வீட்டிற்கு வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் வந் தேன்.

[எல்லோரும் மனோகரியை விழித் துப் பார்க்கிறார்கள்.]

மானே: சரி, சரி, போங்கள். இப் படிக் கட்டுப்போட்டுக் கொண்டு என்ன வேலை செய்யப்போகிறீர் கள்? இன்றைக்கு ஆபீசு லீவு. சைவ உணவு நினைவு விடுமுறை என்று வைத்துக் கொள்ளுங்கள். விரல்களைச் சுகப்படுத்திக் கொண்டு நாளை வாருங்கள்.

[எல்லோரும் வெளியேறுகிறார் கள்.]

பர : ஒரே நாளில் விரல் வீக்கம் தணியுமா?

அண் : (பாடுகிறார்)

"கருதும் காய் வகைகள்
கடைதனில் விற்கும்போது
விரல் வீக்கம் ஏதுக்கடி—குதம்பாய்
விரல் வீக்கம் ஏதுக்கடி."

[சைவ உணவு மகா நாட்டிற்கு "ஜே" போட்டுக் கொண்டு வீடு செல்லுகிறார்கள்.]



உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிட்.
மதுரை - திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்
மதருஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிட்.
மதருஸ் - பெங்களூர்
ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.
மதுரை
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-6
டி.வி.எஸ்.
ஸ்தாபனங்கள்
TVS
தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
மதருஸ்
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
புதுக்கோட்டை - மதருஸ்
இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
பிரைவேட் லிட்.
மதருஸ்-2
சுந்தரம்ஸ் பிரைவேட் லிட்.
மதுரை
சுந்தரம் பைனன்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-2

கோயமுத்தூர்

## தனலட்சுமி சேலைகள்




**DHANALAKSHMI 100s SAREES**

Mfrs: Dhanalakshmi Handloom Weavers' Co-op. P. & S. Society Ltd., No. K. 1554, Coimbatore.

உத்திரவாத முள்ளவை

Sole Agents for Greater Bombay:
M/S M. KHANDWALA & CO.,
KALBADEVI ROAD, BOMBAY-2.

உழைப்பிலும், தரத்திலும் சிறந்தவை.

தலைவர்
G. மருதாசலம்

வளர்க கைத்தறி! வாழ்க கூட்டுறவு!!

## ஜவஹர்புரம் தேவாங்க நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிட்.,

நெ. K. 1516.

100 நெ. கெட்டிச்சாய கைத்தறி சேலைகள் தயாரிப்பவர்கள்.
வேலாண்டிபாளையம் P.O., கோயமுத்தூர்.

புதுமையான டிசைன்கள்!
கண்ணைக் கவரும் கலர்கள்!!
உத்திரவாதமான கெட்டிச் சாயம்!!!

உடைக்கு உகந்தது!
விலையில் குறைந்தது!!
நாணயமான சரக்கு!!!

இவை யனைத்திற்கும் பெயர் பெற்றது
எமது **ஜவஹர் சேலைகள்.**

இந்தியா, பர்மா, சிலோன் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்கிறோம்.

கோவை கைத்தறித் துணிப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.
தங்கள் தேவைக்கு எழுதவும்.

எமது சேலைகள் கிடைக்குமிடம்:—

R. S. புரம், காந்திபுரம் சேல்ஸ் எம்போரியங்களிலும்
மற்றும் எல்லா இடங்களிலுமுள்ள சேல்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

**குறிப்பு:** ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்புகிறோம்.

S. மாரி செட்டியார், தலைவர்.




# மறுமணம்

'சிற்பி'

**பிரிந்த உள்ளங்கள் கூடுகின்றன ... தடைபட்ட மணம், 'மறுமணமாக' மலர்கிறது...அழகு தமிழ் நடையில் இந்தச் சிறு கதையைத் தருகின்ருர், ஈழத்து இளம் எழுத்தாளர்.**

"எனக்கு இன்று ஏதாவது கடிதம் வந்ததா?'' என்று கேட்டுக்கொண்டே வந்த சந்திரன் தன் அறைக்குள் நுழைந்தான்.

''இது ஒன்றுதான் இன்றைக்கு.'' தாய் ஒரு கடிதத்தை நீட்டினுள். வழக்கம்போல் ஏதோ சிந்தனையுடன் கடிதத்தைத் திறந்தான். கடிதம் கூறிய செய்தி அவனைக் கற்சிலை ஆக்கிவிட்டது.

பிரிய அண்ணு,

உங்கள் ஊரிலேயே நான் சில மாதங்களுக்கு உத்தியோகம் பார்க்க வேண்டும். முன்பின் தெரியாத ஊரில் எப்படி வாழ்வது என்று நான் கலங்கியிருந்த போது, நீங்கள் அங்கேதான் இருக்கின்றீர்கள் என்பதைத் தற்செயலாகக் கேள்விப்பட்டேன். பழைய சம்பவங்களை மறந்து விடுங்கள். அண்ணிக்கு எனது சுகம் சொல்லவும். அவளை எனக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்களா? நான் அங்கே தங்குவதற்கு ஓர் இடம் வேண்டும். சிரமம் கொடுத்ததற்கு மன்னிப்பீர்களென்றே நினைக்கின்றேன். வணக்கம்.

உங்கள் தங்கை,

சந்திரா.

கடிதத்தைக் கையிலேயே பிடித்திருந்தான். கடல் மடை திறந்துவிட்டாற்போன்று கண்களிலிருந்து நீர் பெருகியது. அண்ணு—அண்ணி என்ற வார்த்தைகள் அவன் நெஞ்சைக் குத்திப் பிளந்தன. ஒரு காலத்தில் தான் கட்டிய காதற் கோட்டையை எண்ணிப் பார்த்தான். அசைக்க முடியாத கற்கோட்டை என்று அவன் நினைத்தது, அந்தரத்தில் ஆடி அசைந்து மறையும் காற்றுக் கோட்டையாகி விட்டதே!

அவனுல் அன்று ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. கல்லூரி உடுப்பைக் கழற்றக்கூட மறந்து 'தொப்'பென்று நாற்காலியுள் விழுந்துவிட்டான்.

"வீணுக மனத்தை வருத்துவதால் உடல் நலம் கெடுமே தவிர, உருப்படியான காரியம் ஒன்றையும் செய்ய முடியாது'' என்று அவனே பலருக்கு உபதேசம் செய்திருக்கிருன். மாணவர்களுக்கும் வேறு நண்பர்களுக்கும் எத்தனையோ தடவை செய்த போதனைகளை அவனுல் கடைப்பிடிக்க முடியவில்லையே!

பழைய காலத்தை நினைத்து அழுது தீர்க்கத்தான் அவனுல் முடிந்தது. அவனது படிப்பு, வாழ்க்கை அனுபவம், நண்பர்களின் புத்திமதிகள் எல்லாமே அவனைக் கைவிட்டு விட்டன.

விதி அவன் வாழ்க்கையில் விளையாடிவிட்டது. அது சாதாரண விளையாட்டல்ல. நெஞ்சைப் பிழிகின்ற, உயிருடன் வதைக்கின்ற விளையாட்டு. சமூகத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு 'சாதி'என்கின்ற பாசக் கயிற்றுடன் சந்திரன்—

சந்திரா ஜோடிகளுடன் விளையாடியது விதி. எட்டி விலகி விடலாம் என்று நினைத்த அவர்களைத் தடம் தட்டி வீழ்த்திவிட்டது.

ஆம்! சந்திரனும் சந்திராவும் இணையற்ற காதல் ஜோடிகளாக ஒரு காலத்தில் வாழ்ந்தார்கள். உண்மையில் அவர்கள் அண்ணன் தங்கைகளல்ல. இந்த உறவு முறை அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றி வாழ்ந்தபோது ஏற்படுத்திக்கொண்டதுதான். இரண்டு ஆண்டுகளை இரண்டு யுகங்களாகக் கழித்த அவனிடம் இன்று அந்தத் 'தங்கை' வரப் போகின்றாள்.

சிவசுந்தரத்தின் உயர்ந்த குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தபொழுது அதன் ஓர் அங்கத்தினராக உதித்தான் சந்திரன். ஆனால் அவன் ஏழையைப்போல் வாழவில்லை. செல்வச் சீமானைப் போன்றே வாழ்ந்தான்.

வாழ்க்கை ஓர் அழகிய பூங்காவாகத் தோன்றியது. அங்கே கிடைக்கும் நறுந்தேனைக் குடித்துப் பாடி மகிழும் வண்டாகத் தன்னை நினைத்தான். கல்வியை நன்கு கற்றான். விரைவில் எல்லோருடைய மகிழ்ச்சிக்கும் இடையில் பி. ஏ. பரீட்சையிலும் வெற்றியடைந்தான். தன் இலட்சியத்தின் ஒரு பகுதி நிறைவேறியதைக் கண்டு மகிழ்ந்தான்.

கொழும்பிலே ஒரு சிறந்த கல்லூரி அவனை ஆசிரியனாக ஏற்றது. களங்கமற்ற மாணவர்களுடன் என்றுமே கலந்து பழக வாய்ப்பு ஏற்பட்டதில் அவனுக்கு மிக்க மகிழ்ச்சி. எல்லோருடனும் நன்கு பழகினான். கதைகள், கட்டுரைகள் எழுதுவது அவனது பொழுது போக்காக இருந்தது. இசையிலும் ஆர்வம் அதிகம் இருந்தது.

நாட்கள் நகர்ந்தன. கொழும்பு ஆசிரியர் சங்கத்தினர் நடத்தும் கதம்பக் கச்சேரிக்கு இணைச் செயலாளருள் ஒருவனாகத் தெரிவு செய்யப்பட்டான் சந்திரன். மற்றவர் ஒரு பெண்மணியாக இருந்ததனால் எல்லா வேலைகளையும் இவனே செய்தான். இவனுடைய திறமையைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

கதம்ப நிகழ்ச்சி நடைபெறும் நாள் வந்தது. சைவ மங்கையர் கழக மண்டபம் நிரம்பி வழிந்தது. ஆனால் அன்று தலைமை வகிக்க வேண்டிய மந்திரி சரியான நேரத்திற்கு வரவில்லை. ஒலிபெருக்கி வேறு வேலை செய்ய மறுத்து விட்டது. சபையோரின் பொறுமை எல்லை மீறியது. ஒரே கூச்சல் போடத் தொடங்கினர். சந்திரனுக்கு "நாடி" விழுந்து விட்டது. எப்படி நிலைமையைச் சமாளிப்பது என்று தெரியாமல் திணறினான். அவமானத்தால் முகம் சுன்றிவிட்டது. மற்றக் காரியதரிசியினால் இதைப் பார்க்கச் சகிக்கவில்லை. உடனே மேடையில் தோன்றி கணீரென்று பாடத் தொடங்கினாள்..........................

சந்திரனுடைய சிந்தனை திரும்பத் திரும்ப இதையே வட்டமிட்டது. அன்று அவள் பாடிய பாட்டு......! "சுடர்விடு பொன்விளக்கே" என்ற அந்தப் பாட்டு அவனது உயிருடனேயே ஒன்றிவிட்டது. இன்றுங் கூட அவள் நேரில் இருந்து பாடுவது போன்ற ஒரு பிரமை அவன் மனதுள் எழுந்தது.

சிந்தனை பின்னோக்கி ஓடியது. மகுடியின் இசையில் கட்டுண்ட நாகம் போல் மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். சந்திரனுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அவன் தன்னையே மறந்து விட்டான்.

சங்கீத தேவதை அவளுக்கு— சந்திராவிற்கு அடிமை என்பதைக் கண்டான்! தனது இதயங்கனிந்த நன்றியையும் மட்டில்லா மகிழ்ச்சியையும் அவளுக்குத் தெரிவித்தான். அப்போது அவள் அவனைப் பார்த்த பார்வை! ஏற்கனவே அவளது இசையில் மயங்கிய அவனால் இப்போது தப்ப முடியவில்லை. அர்த்தம் நிறைந்த புன்னகையொன்றை உதிர்த்தான்.

சந்தர்ப்பம் அவர்களை நெருங்கிப் பழக வைத்தது. மாலை வேளை களில் மனம் விட்டுப் பேசினர். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டனர். அவர்களுக்கு உல கெல்லாம் ஒரே இன்ப மயமாகவே காட்சியளிக்கத் தொடங்கியது.

எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து விட்டு ஒரு சிறு பாடசாலையில் சங்கீத ஆசிரியை யாகக் கடமையாற்றும் தனக்கு, சந்திரன் போன்ற நல்லவன் காத லனுகக் கிடைத்ததில் சந்திரா விற்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

அழகும் நற்குணமும் இனிய சங்கீத ஞானமும் கூடப் பெற்ற சந்திரா தனக்குக் கிடைத்தது தன் அதிர்ஷ்டம் என்றெண்ணிப் பெரு மை யுற்முன் சந்திரன். அவளில் லாமல் தன் வாழ்வு பூரணமாகாது என்பதை உணர்ந்தான். தன் இலட் சியம் கைகூட வேண்டுமென்று எந்நேரமும் இறைவனை வேண்டிய படி இருந்தான்.

சித்திரை விடுமுறைக்கு யாழ்ப் பாணம் சென்முன். புதிய ஆண் டிலே புது ஜோடிகளாக ஆக வேண்டுமென்பது அவன் விருப் பம். நண்பன் ஒருவன் மூலம் தந்தையிடம் விஷயத்தைத் தெரி வித்தான். பார்வைக்குப் பசு போல் இருந்தவர், புலியைப் போல் பாய்ந்தார், விபரம் முழுவதையும் கேட்டவுடன்.

''இப்படித் தறுதலையைப் போல் நீ நினைத்ததைச் செய்யவா உன்னை நான் படிக்க வைத்தேன்? அவள் வேறு சாதி. நாம் வேறு சாதி. அவளை எனது மருமகளாக் கவே முடியாது'' கோபத்தால் சீறினுர் அவர்; அவமானத்தினுல் பொருமினுர்.

'வறுமையே தெரியாமல் வளர்த் தேனே! அவன் இப்படியா நடக்க வேண்டும்!'' என்கின்ற வேதனை யும் அவர் முகத்தில் தெரிந்தது.

## நமது பொது மொழி பற்றி ஓர் ஜெர்மானியர்!

டிசம்பர் 16-ந் தேதியன்று, சென்னை அரசாங்க கைத் தொழில் வர்த்தக இலாகா வினர் பத்திரிகை நிருபர்களை கிண்டி தொழிற் பண்ணையைப் பார்வையிட அழைத்துச் சென்றனர்.

மத்திய அரசாங்க செருப் புத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிலயத்தை நிருபர்கள் பார்வையிடும் பொழுது அதன் தலைவரான ஜெர்மானி யரை, ஓர் அனுபவத்தில் முதிர்ந்த பத்திரிகை நிருபர் சாமர்த்தியமாக ஓர் கேள்வி கேட்டார். 'இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வந் துள்ள இந்த மாணவர்களி டம் தாங்கள் எந்த மொழியில் பேசுகிறீர்கள்?' ஜெர்மானி யர் 'சட்' டென்று 'ஏன்.... ஆங்கிலத்தில் தான்' என்றுர். நிருபர் முகம் வெற்றிப் புன்னகை பூத்தது......ஆங்கி லம் நீடிக்க வேண்டும் என் பது அவர் பத்திரிகைக் கருத்து...

ஆனுல் ஜெர்மானியர் பதில் தொடர்ந்தது! "ஆமாம்...... என்னை ஒரு நாள் டெல்லிக் கும் மறு நாள் பம்பாய்க்குமாக மாற்றுகிறுர்களே! உங்கள் நாட்டில் ஒவ்வொரு இடத் திற்கு ஒரு மொழி இருப்ப தால் என்னுல் ஆர்வம் இருந் தும், பிராந்திய மொழிகளைக் கற்க முடியவில்லை......உங்க ளுக்கு ஒரு பொது மொழி இல்லையே?' என்று முடித் தார்.

நிருபர்கள் அடுத்த கேள் விக்குத் தாவி விட்டார்கள்!

இவ்வளவு தூரம் தந்தை எதிர்ப்பார் என்று சந்திரன் எதிர்பார்க்கவில்லை. வாழ்க்கையிலே முதன் முதலாக ஏற்பட்ட தோல்வியை, எதிர்பாராது தலையில் விழுந்த பேரிடியை அவனால் பொறுக்க முடியவில்லை.

உலகம் அவன் முன்னே சுற்றியது; சுழன்றது; நடு நடுங்கியது. உணர்ச்சியற்ற மரப் பொம்மைகளைப் போலத் தோன்றினர் மனிதர்கள்.

தனியே இருந்து அழுது தீர்த்தான். தனக்கு அவள் செய்த அன்புப் பணிகளையும் உதவிகளையும் நினைத்து உருகினான். தன்னைக் கல்யாணம் செய்யமாட்டான் என்பதை அவள் அறிந்தால், அந்த மெல்லிதயம் என்ன பாடுபடும்? அவனால் அதைக் கற்பனை பண்ணவே முடியவில்லை.

பெற்றோரின் மேல் இருந்த ஒரு வகைப் பாசம் அவனை, அவர்களுக்கு எதிராகப் போக விடாது தடுத்தது. ஆனால் அதற்காகச் சந்திராவை இழக்கவும் அவன் தயாராக யில்லை. இருதலைக் கொள்ளி எரும்புபோல் ஆனான். இந்தச் சிக்கலிலிருந்து மீட்சி கிடையாதா என்று ஏங்கினான்.

நாட்கள் கழிந்தன. வாழ்க்கை வெறுத்து விட்டது. அவன் முகத்திலிருந்த சோபை, உள்ளத்திலிருந்த மகிழ்ச்சி, உடலிலே இருந்த ஒருவகைக் குளு குளுப்பு எல்லாம் எங்கோ மறைந்து விட்டன. ஒருவாறு தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

இன்ப ஏணியின் உச்சிப் படியிலே ஒரு சில நாட்களாவது இருந்து மகிழ்ந்துவிட்டான் அவன். மனதறிந்து அவன் சந்திராவைத் தீண்டவில்லை. அவள் பக்கத்திலிருந்தபோது அவன் உள்ளம் நிறைந்திருந்தது; துள்ளி விளையாடியது. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருந்தாள் அவள். நெஞ்சு கனிந்த புன்னகையை உதிர்த்தாள் அவனுடைய இதய ராணி. அந்த இன்பகரமான நாட்கள், காதல் வானிலே வானம்பாடிகள் போல் பறந்து மகிழ்ந்த நாட்கள் இனித் திரும்பி வரப் போவதில்லை!

தன் எதிர்காலத்தை எண்ணிப் பார்த்தான். நீண்டு, பரந்து, விரிந்து இருண்டு கிடந்தது அது. அந்த இருளை அகற்றும் சுடர் விடும் பொன் விளக்கு அவனிடம் இல்லை. அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அந்த இருளில்தான் நடக்க வேண்டும். தவறி விழுந்தாலும் அவன் கவலைப்படப் போவதில்லை.

ஆனால் சந்திரா.........!

அவளை நினைத்தபோது நெஞ்சு உருகியது. 'இந்தப் பாவியைக் காதலித்து அவள் என்ன சுகத்தைக் கண்டாள்? எங்களுக்குள் இருந்த ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் காட்டியபோது, எத்தனை தடவை அவளுக்கு நம்பிக்கை யூட்டும் வகையில் பேசியிருக்கின்றேன்?'

'என் இதயத்தில் உனக்குத் தவிர, வேறொருவருக்கும் இடமில்லை சந்திரா!' என்று அன்றொரு நாள் அவளிடம் கூறிய வார்த்தைகள்......! அந்த சிற்பி செதுக்காத பொற்சிலையின் அழகைத் தன் கண்களால் அள்ளிப் பருகி மகிழ்ந்திருந்த நாட்கள்.........! அவனுக்குப் பிடித்தமான அந்தச் சிகப்புச் சேலையுடன் அப்ஸரஸ் போன்று அவள் தளிர் மேனி அவனுடன் உராய நின்று கொண்டு எத்தனை தடவை அலுக்காமல், சலிக்காமல் அந்தப் பாட்டைப் பாடியிருக்கின்றாள்.........!

இன்று அதே சந்திராவைக் கை விடுவதா?

திரும்பத் திரும்ப இதைப் பற்றியே எண்ணினான்; சிந்தையைக் குழப்பினான்; கலங்கிக் கண்ணீர் விட்டான்.

கடைசியில் அவன் ஒரு முடிவிற்கு வந்தான். தன்னைப்போல் நெக்கி

நெக்கி உருகாமல், மக்கி மடியாமல், அவளாவது வாழ வேண்டும். மனத்தை கல்லாக்கிக் கொண்டு தன் முடிவைச் சந்திராவிற்குத் தெரிவித்தான்.

''சகோதரி சந்திரா!

மனிதன் அறிந்து கொண்டே சில வேளைகளில் தவறிழைக்கின்ருன். என்ருலும் இதைத் தடுக்க முடியாதிருக்கின்றது. நான் வேருெருத்தியை மணக்க விரும்புகின்றேன். நீயும் ஒரு நல்ல கணவனை அடையவேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன். உன் வாழ்க்கை செழிக்கட்டும்! உன்னுடன் மனம் விட்டுப்பழகிய என்னை மன்னிப்பாயா? பதில் வேண்டாம்.

அன்புள்ள,
சந்திரன்.

திடீரென்று கொழும்பிலிருந்து மறைந்தான் சந்திரன். மன்னரில் அஞ்ஞாத வாசம் செய்ய விரும்பினன். அங்கே ஒரு கல்லூரியில் வேலை கிடைத்தது. பெற்ருேரிடமிருந்து பிரிந்தான்; பிரிய காதலியிடமிருந்து பிரிந்தான். இவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு தூரத்திலோ அவ்வளவு ஆறுதல் அவனுக்கு.

மாதங்கள் சில மறைந்தன. தனது போக்கை நினைத்து அவனே ஆச்சரியப்பட்டான். எல்லாவற்றிலுமே விருப்பு-வெறுப்பற்ற நிலை. செல்லப் பிள்ளைபோல் சொகுசாக வாழ்ந்த சந்திரனு இப்படி மாறிவிட்டான்!

இருதய நோயினுல் அவன் தந்தை இறந்தபோதுகூட அவனது போக்கில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை. ''ஆண்டாண்டு தோறும்'' என்ற ஔவையின் பாட்டைக் கூறித் தாயையே தேற்றினன். சில நாட்களில் தாயுடன் வந்து சேர்ந்தான் மன்னருக்கு.

x x x

அன்ருெரு நாள் அவனுடைய கல்யாணத்தைப் பற்றி ஆசையுடன் பேச வந்தாள் அவன் தாய்.

''கல்யாணத்தைப் பற்றி என்னுடன் பேசினல், என்னை உயிருடன் காணமாட்டாய்!'' சீறிச் சினந்து, உடனேயே அந்தப் பேச்சிற்கு முற்றுப் புள்ளி வைத்தான் சந்திரன்.

திகைத்துவிட்டாள் அவள். பிள்ளையின் பிடிவாத குணம் அவளுக்குத் தெரியும். விபரத்தை அறியாது வருந்தினள். ஏதேதோ வெல்லாம் எண்ணி மனம் நொந்தாள். மகனுடைய கல்யாணத்தைப் பற்றி அவள் கண்ட கற்பனை என்ன! இன்று அவன் சொல்வதென்ன! அந்த மர்மத்தை அறிய முடியாது அவள் தவித்தாள். மகனைப் பற்றிய ஏக்கம் அவளை வாட்டியது. முகத்திலிருந்த களையும்எங்கோ மறைந்து யந்திரம் போல் வாழ்க்கையை நடத்தினள்.

x x x

எந்த நேரத்திலும் சந்திரா அங்கே வந்து விடுவாள். அவளை எதிர்பார்த்துக் கொண்டு முள்ளின் மேல் நடந்து வந்தான் அவன். அந்தச் சந்திப்பின் மூலம் இன்னும் எத்தகைய சூருவளியைக் கிளப்ப இருக்கின்றதோ விதி!

கடைசியில் அவள் வந்தே விட்டாள். கட்டுப்படுத்திக் கொண்டான் தன் இதயக் குமுறலை.

'வணக்கம் அண்ணு! எப்படி இருந்த நீங்கள், இப்படி இளைத்து விட்டீர்களே! வரட்டும்... அண்ணியையே கேட்டுவிடுகின்றேன்!'

முந்திய அதே பாசம், அதே குழைவு, அவன் நெஞ்சு கனத்தது. தூய வெள்ளை உடையணிந்த சந்திராவைக் கண்டு உள்ளம் குதித்தது.

''உட்கார் சந்திரா! ஏது வெள்ளையுடையில்?'' அவன் தொண்டை கரகரத்தது.

''அது கிடக்கட்டும் அண்ணு! அண்ணியை இன்னும் அறிமுகப்

197691

காணவே முடியாது!”. கண்கள் இருண்டன, கால்கள் நிலை தடுமாறின. கீழே விழுந்தான்.

பாய்ந்தோடிப் போய் அவனைத்தூக்கினாள் சந்திரா. அவள் உடம்பும் நடுங்கியது. தன்னையே நொந்து கொண்டாள்.

“மன்னித்து விடுங்கள் அண்ணா! மறைந்து போன அவள் நினைவைத் தெரியாது கிளறிவிட்டேன்... சிறு பிள்ளையைப் போல் அழாதீர்கள். பல நாட்களின் பின் இந்த நிலையிலா நாம் சந்திக்க வேண்டும்?”, அனுதாபம் மேலிட அவள் கூறினாள்.

சந்திரனால் எழுந்திருக்கவே முடியவில்லை. கையால் முகத்தை மூடிக் கொண்டு கண்ணீர் பெருக்கினான். பயங்கரக் கற்பனைகள் மன




படுத்தவில்லையே!” வேண்டுமென்றே பேச்சை மாற்றினாள் அவள்.

கொலைகாரனைப் போன்று அவன் முகம் மாறியது. கண்ணீர் ‘பொல பொல’ என்று வழிந்தது. சுவரில் தலையை மோதிக் கொண்டான். அறிவு கலங்கிய நிலையில் பைத்தியம் போலக் கதறினான். “நீ அவளைக் காணமுடியாது சந்திரா!

இல் தோன்றின. அவளின் மடியில் கிடப்பதற்கு எத்தனை நாள் தவம் கிடந்தான்! இன்று அந்தச் சந்தர்ப்

பம் வாய்த்தும் அவனுல் அனுபவிக்க முடியவில்லை !

கடைசியாகச் சொன்னுன் சந்திரன் :—

"நடந்ததை நினைத்து வருந்துவதால் பயனில்லை. என் வாழ்வு இப்படி ஆகும் என்று நான் கனவு கூடக் காணவில்லை.........இன்று உன்னைக் கடைசி தடவையாகக் கேட்கின்றேன். அந்தப் பாட்டைப் பாடுவாயா சந்திரா?"

தயங்கவில்லை அவள். கணீரென்று பாடத் தொடங்கினுள். "சுடர்விடு பொன் விளக்கே..."

"பாடு, சந்திரா, பாடு" அவன் கண்களில் நீர் வழிந்தோடியது.

"பாடிக்கொண்டே இரு சந்திரா!" பித்தனுக மாறிவிட்டான் சந்திரன்.

அவளுடைய அதே இனிமையான குரல்! தனக்கே ஒரு காலத்தில் சொந்தமாக இருந்தவளின் சொந்தக் குரல்! அவன் நெஞ்சைப் பிழிந்துகொண்டிருந்தது அது.

பாட்டு முடிந்தது. எதையோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் சந்திரன்.

தன் கண்களில் துளிர்த்த நீரை, அவள் துடைத்தாள்.

"நாளைக்கு ஆறுதலாக வருகின்றேன் அண்ணு! அண்ணியிடம்".... ஏதோ சொல்ல வாயெடுத்தவள் தன் நாக்கைக் கடித்துக் கொண்டாள். தன் மறதிக்காகத் தன்னையே நொந்தாள்.

சந்திரனது உறுதி சிதைந்து விட்டது.

கூச்சலிட்டான் அவன். "போதும் சந்திரா! அண்ணி, அண்ணி என்று என்னைச் சித்திரவதை செய்யாதே! நான் வேருெருத்தியை மணக்கவுமில்லை; அவள் மறைந்துவிடவுமில்லை. இப்போதும் தனியன் தான்......"

"ஆ... நிஜமா இது?" இப்போது அவள் அலறினுள்.

"ஆமாம் சந்திரா! நான் வாடி வருந்தினுலும் நீயாவது வாழ வேண்டுமென்று விரும்பினேன். நான் தனியனுக இருக்கும் வரைக்கும் நீயும் கல்யாணம் செய்ய மாட்டாய் என்று தெரியும். அதனுற்ருன் நான் கல்யாணம் செய்யப் போவதாக ஒரு பொய்க் கடிதம் எழுதினேன்..." குரல் விக்கியது-

"நிறுத்துங்கள் சந்திரன்! நான் உங்களை மறந்து வாழ்வேனென்று நீங்களும் நினைத்தீர்களே...!"

"அப்போ நீ!" துள்ளி எழுந்தான் சந்திரன். உடலில் ஒரு புதுப் பலம் புகுந்து கொண்டது.

"நானுந்தான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. உங்கள் கடிதம் கண்டு உள்ளம் வெதும்பினேன். என் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாததை உணர்ந்தேன். கடைசியில் ஆசிரியை வேலையை விட்டு இந்த 'நர்ஸ்' வேலையில் சேர்ந்து விட்டேன்."

அவனிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. மேலே என்ன பேசுவது என்று தெரியாமல் இருவரும் மௌனமாக நின்றனர்.

அந்த மௌனத்தைக் கலைத்தாள், உள்ளே நுழைந்த சந்திரனின் தாய்.

"உங்கள் பேச்சு என் காதிலும் விழுந்தது. இதை முன்னமே என்னிடம் கூறியிருக்கக் கூடாதா சந்திரன்? உன் விருப்பத்திற்கு நான் எப்போதாவது குறுக்கே நின்றிருக்கின்றேனு?" அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

தந்தையின் அனுமதி மறுக்கப்பட்ட பின், தாயிடம் சொல்லிப் பிரயோசனமில்லை என்று எண்ணினுன் சந்திரன். எவ்வளவு முட்டாள்தனம்!

அந்தத் தெய்வத் தாயின் திருவடிகளில் சந்திரனும் சந்திராவும் விழ்ந்து வணங்கினர். சிறிது நேரம் கழித்து, சந்திரனின் அறையிலிருந்து 'சுடர்விடு பொன் விளக்கே!' என்ற பாடல்—இழைந்தது. ஆனுல் இப்போது அதில் சோகம் இல்லை... மோகம் கிளுகிளுத்தோடும் ஆண் பெண் குரல்களின் வேகம் நிறைந்த இன்பம் இழைந்தது...!

O

*For everything in PRINTING*



Please Contact

# THE KARCO LITHO WORKS

PHOTO OFF SET & LITHOGRAPHIC PRINTERS
EQUIPPED WITH LATEST MACHINERIES & EXPERT PRINTERS

POST BOX No. 56, SIVAKASI




எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க், சிம்கோ லைட்
மார்க், சிம்கோ சைகிள் மார்க், மைனர்
சைஸ் சீனு லேடி மார்க்
60 வேட்டை சிங்கம் மார்க்
தீப்பெட்டிகள்.

கடற்கரை குளிர்ப்பிரதேசங்களுக்கும், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தது.

**சிறந்த விதமான சரக்கு உற்பத்தி!**

**சிறப்பான பொதுஜன ஆதரவு!**

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ்கள் தீப்பெட்டிகளும் எங்களுடைய டெப்போக்களிலேயே செலவாகின்றன.

**சிம்கோ :: :: சிவகாசி S. I.**

போன்: **63** — தந்தி: ***SIMCO***

# மாமிசம் உண்ணும் தாவரங்கள்

பேராசிரியர்: ஜி. வெங்கட்ராமன்

(எம். ஏ., எம். எஸ். ஸி. எல்., டி)

**மனித வாழ்க்கையில் தான் விசித்திரமான பழக்க வழக்கங்கள் இருக்கின்றன என்று எண்ணுவது தவறு— இதோ! தாவர வாழ்க்கை விநோதங்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை!**

பிராணிகளை 'சாகபக்ஷிணிகள் என்றும்','மாமிச பக்ஷிணிகள்' என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம். ஏன், மனிதர்களில் கூடத்தான் 'மாமிச உணவு உண்போர்' என்றும், 'மாமிச உணவு உண்ணாதார்' என்றும், இருபிரிவுகள் இருக்கின்றனவா? என்றால் இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். மாமிசம் உண்ணும் தாவரங்கள் மிகச் சில; அபூர்வமானதும் கூட; மற்ற தாவரங்கள் எப்படி ஆகாரம் உட்கொள்கின்றன என்பது தெரிந்ததே. சூரிய ஒளியின் சக்தியால் தாவரங்களின் பச்சையங்கள், காற்றிலுள்ள கார்பன் டை-ஆக்ஸைடு, வேர்களால் உறிஞ்சப்படும் தண்ணீர் இவற்றைக் கொண்டு 'ஸ்டார்ச்சை'த் தயாரிக்கின்றன.

மாமிசம் உண்ணும் தாவரங்கள் உலகில் எல்லாப் பாகங்களிலும் வளர்கின்றன. அவைகளில் பல வகைகள் இருக்கின்றன. இருந்த இடத்தில் இருந்து கொண்டு, சிறு பூச்சிகளைப் பிடிக்கின்றன. அதற்கு ஏற்றவாறு இலைகளைப் பொறிகளாக மாற்றி அமைத்துக் கொண்டிருக்கின்றன. பொறிகளில்தான் எத்தனை வகைகள்! பிடித்த பூச்சிகளை ஜீரணம் செய்வதற்காக, சுரப்பிகள் ஏராளமாகப் பொறிகளின் உள் சுவற்றில் அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்தச் சுரப்பிகளில் ஊறும் திரவமும், பிராணிகளின் குடல்களில் ஊறும் திரவமும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவாம். இல்லாவிட்டால் பூச்சிகளை எப்படி ஜீரணிக்க இயலும்? பூச்சிகளைத்தான் இச்செடிகள் பிடித்து ஜீரணிக்க முடியுமே ஒழிய, பக்ஷிகளையோ, பெரிய பிராணிகளையோ பிடிக்க முடியும் என்று சொல்லுவது வெறும் கதை தான்.

இந்தியாவில் முக்கியமாக நான்கு விதமான மாமிசம் உண்ணும் தாவரங்கள் இருக்கின்றன.

**டிரோஸிரா** (Drosera) என்பது சில சதுப்பு நிலங்களில் காணக் கூடிய அழகிய ஓர் சிறு செடி. (படம் 1.) ஒரு சில சிவந்த இலைகளைக் கொத்தாக உடையது. தண்டு தெரியாது. பூக்கள் உண்டு. ஒவ்வொரு இலையும் ஒரு சிறு தேக்கரண்டி வடிவத்தில் இருக்கும். இலையின் ஓரங்களிலும் நடுவிலும் நுண்ணிய ரோமங்கள் அதிகமாக இருக்கின்றன. ஒவ்வொரு ரோமத்தின் நுனியும் கொஞ்சம் பெருத்து உருண்டை வடிவாக இருக்கிறது. பனித்துளிகள் இந்த ரோமங்களின் நுனிகளில் ஒட்டிக்கொண்டு, சூரிய உதயத்தில், கிரணங்கள் இச்செடிகளில் பட்டதும், ஒவ்வொரு இலையைச் சுற்றிலும் வைரங்கள் பதித்து வைத்தது போல ஓர் அழகான

காட்சியை அளிக்கும். நாமே ஆச்சரியத்துடன் அந்தப் பிரகாசத்தைப் பார்க்கும் பொழுது, ஒன்றும் அறியாத பூச்சிகளைக் கேட்க வேண்டுமா? பறந்து சென்று இலைகளின் நடுவே உட்காரும். அவ்வளவு தான். ஒவ்வொரு ரோமமாக மடங்கி பூச்சியைச் சீக்கிரம் கவ்விக் கொள்ளும். ரோமங்களின் நுனிகளில் இருக்கும் சுரப்பிகளிலிருந்து 'பிசிபிசு'ப்பான திரவமும் கசிய, பூச்சி தப்பி ஓட முடியாதபடி சிக்கிக்



[ படம் 1. ]

கொண்டு விடும். அதனுடைய உடம்பின் மிருதுவான பாகங்கள் எல்லாம் ஜீரணமாகிவிடும். பிறகு, ரோமங்கள் பழைய நிலைமைக்கு வந்து விடும். ஜீரணிக்கப்பட முடியாத கெட்டியான பாகங்களைக் காற்று கீழே தள்ளிவிடும்.

**நிபெந்திஸ்** (Nepenthes) இமய மலைப் பிரதேசத்தில் ஸிக்கிம் பள்ளத் தாக்கில் அதிகமாக இருக்கின்றன. (படம் 2). இலங்கையிலும் இவை காணப்படுகின்றன. இது வும் சதுப்பு நிலங்களில்தான் வளரும். ஆனால் டிரோஸிராவைவிட மிகப் பெரியது. ஒவ்வொரு இலையும் ஒவ்வொரு பொறியாக மாறும் தன்மை உடையவை. சிறு ஜாடியும், அதன்மேல் ஒரு மூடியும் இருப்பதைக் காணலாம். மழைக் காலங்களில், ஜாடியில் தண்ணீரைப் பாதி அளவுக்கு மேல் நிரப்பிக் கொள்ளும். அதிகமான தண்ணீரைத் தடுக்கவே மூடி உபயோகப்படுகிறது. பாதிக்கு மேல் நிரம்பி விட்டால், ஜாடியின் மேல்பாகம் மடிந்து, தேவைக்கு மிகுதியான தண்ணீரைக் கொட்டிவிடும். ஜாடியின் விளிம்பு, அழகிய சிவப்பு வர்ணத்



[படம் 2.]

துடன் இருப்பதால், பூச்சிகள் இதைத் தேடி வருகின்றன. வழவழப்பான விளிம்பில் சுற்றி வரும் பொழுது அடி சறுக்கித் தண்ணீரில் விழுந்து பூச்சிகள் உயிரை நீக்கிக் கொள்கின்றன. ஜீரணச் சுரப்பிகள் திரவத்தை உற்பத்தி செய்து பூச்சிகளை ஜீரணித்து விடுகின்றன.

**யூட்ரிகுலேரியா** (utricularia) என்னும் செடி இந்தியாவில் எங்கும் நீர்க்குட்டைகளில்காணப்படும். (படம் 3) வேர்களே இல்லாத

இச்செடி தண்ணீருக்குள் அழுந்தி இருக்கும். இலைகளே வேர்களைப் போல தோற்றத்தை அளிக்கின்றன. ஒவ்வொரு இலையிலும் உருண்டை வடிவான பல சிறு பொறிகள் இருக்கின்றன. தண்ணீரில் இருக்கும் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய ஜீவராசிகளே இப்பொறிகளுக்குள் அகப்பட்டுக் கொள்கின்றன. பொறி



[படம் 3]



[படம் 4]

யின் வாய் பாகத்தில் உணர்ச்சியுள்ள ரோமங்கள் இருககின்றன. அவைகளைத் தொட்டதும், வாய் திறந்து பூச்சிகளை உள்ளே அனுமதிக்கின்றன. வாய் மறுபடியும் தானுகவே மூடிக் கொள்வதால், பூச்சிகள் அகப்பட்டு ஜீரணமாகி விடும்.

**ஆல்ட்ரோ** (Aldrovanda) என்னும் செடி வங்காளத்தில், குளம் குட்டைகளில் வளர்கின்றது. (படம் 4.) யூட்ரிகுலேரியா மாதிரி இதற்கும் வேர் கிடையாது. ஒவ்வொரு சிறு இலையும், ஒரு எலிப் பொறி மாதிரி அமைந்திருக்கிறது. ஓரங்களில் கெட்டியான ரோமங்களும், மேல்பாகத்தில் உணர்ச்சியுள்ள ரோமங்கள் சிலவும் இருக்கின்றன. பூச்சி ஒன்று அந்த ரோமங்களில் பட்டதும், இலையின் நடு நரம்பு மடங்கி, பூச்சியைப் பிடித்துக் கொள்ளும். இப்படிப் பொறிக்குள் அகப்பட்ட பூச்சி கொஞ்ச நேரத்தில் ஜீரணமாகி விடும்!

இப்படித் தாவர வாழ்க்கையில் எத்தனையோ விநோதங்கள்!



**பாண்டியன்**
**லாட்ஜ்**
பெஸ்ட் பிரியாணி சாப்பாடு
ஹோட்டல்

8. வெங்கலக்கடை தெரு,
**மதுரை.**

N. B: கோழிப் பிரியாணி,
கோழிச் சாப்ஸ்

**புருச் சாப்ஸ்**
**தினசரி கிடைக்கும்.**

திங்கள், சனிக்கிழமைகளில்
வான்கோழிப் பிரியாணி,
வான் கோழிச் சாப்ஸ்

கிடைக்கும்

Prop- P. K. S. S.

**அவள் சிங்காரி**
**அழகிலே அகங்காரியானுள்**
**அவனுக்காக... ஆடினுள்...**
**பாடினுள்**

ஆனல்
அலங்கோலமாக்கப்பட்டாள்...
காரிகை ஒருவளைச்சுற்றிக்
கரை புரண்டோடும்

கற்பனைகாட்டாறு—கற்பனைக்கருவூலம்
கேரளத்துச் சிங்காரி.

எழுதியது: **எம். கே. நாதன்:**

மூவர்ண அட்டை
விலை 50 புதுக்காசு

நிர்வாகி,

**தேவன் பதிப்பகம்**

புத்தகம் வெளியிடுவோர் &
விற்பனையாளர்
**மரக்கடை ரோடு,**
**சாலை, திருவனந்தபுரம்**

**சேவைக்கும் பாதுகாப்பிற்கும் சிறந்தது!**

# பாண்டியன் பாங்க் லிட்.

**சென்ட்ரல் ஆபீஸ்: மதுரை**

**சென்னை கிளை: ஆபிஸ் 121, அரண்மனைக்காரத் தெரு.**

எங்கள் சேவிங்ஸ் பாங்க் பரிசுத் திட்டத்தில் கலந்து கொண்டு பயனடையுங்கள்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்.

**தென் ஜில்லாக்களில் மட்டும் 48 இதர கிளை ஆபீஸ்கள் உள்ளன.**

S. N K. **சுந்தரம்**
*மானேஜிங் டைரக்டர்.*

# தஞ்சையின் வீழ்ச்சி

(டி. எஸ். சொக்கலிங்கம்)

தஞ்சையும், தாயகமும் தாழ்ந்தன.....ஏன்? பிளவுச் சக்திகள் தலை விரித்தாடும் இந்த நேரத்திலே பிரிட்டிஷார் நமது பிரிவினைகளை விரிவாக்கி நாடு பிடித்த வரலாற்றை நினைவூட்டி, குடியரசு காக்க அறிவுரை தருகின்றார்,

பேராசிரியர்.

சுயநலத்திற்காகத் தங்களுக்குள்ளேயே அடித்துக்கொண்டு வெளி நாட்டானுக்கு உதவியாயிருந்ததனால்தான், இந்தியநாடு பிரிட்டிஷாரிடம் முன்னால் அடிமையாயிற்று,என்பதை எல்லாரும் அறிவார்கள். அம்மாதிரியாக இந்தியாவில் கொஞ்சங் கொஞ்சமாக படை வன்மையினால் இடங்களைக் கைப்பற்ற ஆரம்பித்த வேலை முதல் முதலாக தஞ்சாவூரில் ஆரம்பமாயிற்று. அச்சமயம் தஞ்சாவூரை ஒரு ராஜா ஆண்டு வந்தார். சிவாஜியின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தஞ்சாவூரில் ஆண்டு வரும்போது கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரால் பிரிட்டிஷார் இந்நாட்டிற்கு வந்தார்கள். 1742-ஆம் வருஷத்தில் தஞ்சாவூரை ஆண்டு வந்த சாகுஜி என்பவரை அரண்மனை சூழ்ச்சியினால் பட்டத்தை விட்டு இறக்கி பிரதாப் சிங் என்பவரை அரண்மனைக்காரர்கள் பட்டத்தில் வைத்தார்கள். சென்னையிலிருந்த ஈஸ்ட் இந்திய கம்பெனிக்கு இந்த விஷயம் தெரியும். அதைப் பற்றி அவர்கள் சிரத்தை கொள்ளவில்லை. புதய ராஜாவை ஒப்புக்கொண்டு அவரோடு கடிதப் போக்குவரத்துக்களை வைத்துக் கொண்டார்கள். ஏழு வருஷமானதும் பட்டத்தை விட்டு விலகிய சாகுஜி என்பவர் கம்பெனியின் ஆதரவைக் கோரினார். தமக்கு உதவி செய்தால், அந்த முயற்சியில் கம்பெனி வெற்றிபெற்றால்,கம்பெனிக்கு தேவி கோட்டையிலுள்ள ஜாகிரையும், கோட்டையையும் கொடுத்து விடுவதாகச் சொன்னார். அதோடு அந்தப் போருக்கு ஏற்படும் எல்லாச் செலவுகளையும் கொடுப்பதாகவும் சொன்னார். இச் சமயத்தில் பட்டத்திலிருந்து வந்த பிரதாப சிங் என்பவர் கம்பெனியோடு நேச நாடு என்ற முறையில் இருந்து வந்தார். பிரெஞ்சுக்காரரை எதிர்ப்பதற்காக அவருடைய உதவியை கம்பெனியார் நாடினார்கள். ஆகவே அவருக்கு விரோதமாக கம்பெனியார் நடக்கவேண்டிய அவசியம் எதுவுமில்லை. என்றாலும் , சாகுஜியின் கோரிக்கையை அங்கிகரித்துபிரதாப சிங்கை பட்டத்திலிருந்து இறக்குவதற்காக ஒரு படையை அனுப்பினார்கள். பொய் பித்தலாட்டங்கள் மீதே பிரிட்டிஷ் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டபடியால் அந்த வழியை இதிலும் பின்பற்றினார்கள். ஆனால் கம்பெனியார் அனுப்பிய ராணுவம் தோல்வியுற்றுத் திரும்பியது. இதனால் கம்பெனியார் தளர்ந்துவிடவில்லை. அவர்களுடைய நோக்கமெல்லாம் இப்பொழுது சாகுஜியை பட்டத்தில் ஏற்றுவதல்ல, தேவி கோட்டையை எப்படியாவது பிடித்துவிடவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். ஆகவே தேவி கோட்டையை பிடிப்பதற்காக ஒரு படையை அனுப்பினார்கள். தேவி கோட்டை பிடிபட்டது. அதைப் பிடித்தவுடன் பிரதாப சிங்கோடு

## அனுபவ ராஜர்,

## காமராஜர்!

வாழ்க்கைக் கல்லூரியிலே அநுபவத்துறையில் பல பல ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற்றவர் திரு. காமராஜர் என்பதை விளக்க இதோ ஓர் உதாரணம்!

சென்னைப் பத்திரிகை நிருபர்கள் காங்கிரஸ் பொருட் காட்சியை 22-12-57மாலை சுற்றிப் பார்த்த பிறகு, ஸ்ரீ ராஜம் ராமசுவாமி அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில், 'எல்லா ஸ்டால்களும் பூர்த்தியானதாகப் பத்திரிக்கைகளில் போட்டு விட்டால் நலமாக இருக்கும். பொதுமக்கள் தயக்கமில்லாமல், பொருட்காட்சி திறந்த உடனே வந்து விடுவார்கள்' என்றார்.

அருகிலிருந்த திரு. காமராஜ் சிரித்துக்கொண்டே சொன்னார். 'ஊர்க்காரங்க அவ்வளவு ஏமாந்தவங்களா என்ன... முதல்லே வீட்டிலே ஒரு ஆள் வந்து பாத்துட்டுப் போன பிறகு எல்லாம் சரியாயிருந்தாத்தான் குடும்பத்தை அழைச்சிட்டு வருவாங்க!'— என்றதும், எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர்!

ஒரு உடன்படிக்கை செய்வதற்கு கம்பெனியார் முயற்சி செய்தார்கள். இனிமேல் பிரதாப சிங்சிற்கு விரோதமாக தாங்கள் நடப்பதில்லையென்று வாக்குறுதி கொடுத்தார்கள். சாகுஜியைக் கைது செய்து தங்களோடு அவரை வைத்திருப்பதாகவும் வாக்குறுதி கொடுத்தார்கள். அதற்காகக் குறிப்பிட்ட பணம் கொடுக்கவேண்டுமென்றும் தேவிகோட்டையும் ஜாகிரும் தங்களுடையவை என்று ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் கோரினார்கள்.

நேசநாடு என்ற முறையில் பிரதாப சிங் இருந்தபோது அவர் மீது கொஞ்சங்கூட யோக்கியதையில்லாமல் கம்பெனியார் படையெடுத்தார்கள். கடைசியாக எந்த சாகுஜிக்காக படையெடுத்துப் போனார்களோ அவரைக் கைது செய்து வைக்கவும், தாங்களாகவே முன்வந்தார்கள். மீண்டும் பிரதாப சிங்கோடு நேச ஒப்பந்தம் செய்து கொள்ளவும் விரும்பினார்கள். ஆனால் அவர்களுடைய குறியெல்லாம் பிரதேசங்களை கைப்பற்ற வேண்டும் என்பது ஒன்றில்தான் இருந்தது. அதனால் பிரதாப சிங்கிற்கும் சாகுஜிக்கும் இடையிலுள்ள சண்டையினால் தேவகோட்டையையும். ஜாகீரையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இதுதான் இந்தியாவைகொஞ்சங்கொஞ்சமாக கைப்பற்றுவதற்கு ஆரம்பமானதாயிருந்தது. தென்னிந்தியாவில் பிரிட்டிஷார் முதலில் வந்து சேர்ந்துதங்குவதற்கு நினைத்தபோது தஞ்சாவூர் ராஜாக்கள்தான் அவர்களுக்கு உண்மையான ஆதரவாளர்களாயிருந்தார்கள். மகா யோக்கியர்கள் என்று நம்பி தஞ்சாவூர் ராஜாக்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கு விரோதமாக அவர்களுக்கு உதவி செய்தார்கள். அம்மாதிரி செய்த உதவியை சுலபமாகச் சொல்லமுடியாது. அந்த

ராஜாக்களின் உதவியினுல் தான் பிரஞ்சுக்காரர்களை பிரிட்டிஷார் தோற்கடித்தார்கள் என்று சொல்லலாம். என்ருலும் அவர்களுடைய வேலை முடிந்ததும் அவர்களுடைய குணத்தைக்காட்ட ஆரம்பித்தார்கள். ஆற்காடு நவாபுக்கு தஞ்சாவூர் ராஜா மீது கோபம் இருந்த போதிலும் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனுல் தஞ்சாவூர் ராஜாவின் பணத்தைக் குறைப்பதற்காக தஞ்சை மன்னரை ஆற்காடு நவாபுக்கு உட்பட்டவராக இருக்கும்படி செய்தார்கள். அதோடுகூட வருஷம் நாலு லட்சம் ரூபாய் நவாபுக்கு கொடுக்க வேண்டுமென்று 1762-ம் வருஷத்தில் கையெழுத்துப்போடச் செய்தார்கள். இதுவும் போதாது என்று 1771-ம் வருஷத்தில் அப்பொழுது மன்னராய் இருந்த பிரதாப சிங்கின் குமாரரான துல்சாஜியை தாக்குவதற்கு நவாப் படைகளை அனுப்பியது இதற்கும் கம்பெனியார் உதவி செய்தார்கள். இந்தப் போரினுல் தஞ்சை மன்னருக்கு ஏராளமாக நஷ்டமேற்பட்டது. அதன் பின்னுல் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் தஞ்சை மன்னரை முற்றிலும் நவாபுக்கு அடிமையாக இருக்கும்படி செய்தார்கள். 1773-ல் நவாபும் கம்பெனியாரும் ஒன்று சேர்ந்து தஞ்சை நகரைக் கைப்பற்றி ராஜாவை சிறையில் வைத்தார்கள்.

1787ல் ஒரு நேச உடன்படிக்கை செய்து கொண்டார்கள். தஞ்சை மன்னரும் கம்பெனியாரும் நிரந்தர நண்பர்களாய் இருப்பது என்று அந்த ஒப்பந்தத்தில் காணப்பட்டது. ஆனுல் இந்த 'நிரந்தர நண்பர்கள்' என்ற நிலைமையை மாற்றுவதற்கு 1793-ல் மற்ருெரு ஒப்பந்தத்தைச் செய்தார்கள். தஞ்சாவூர் மன்னரினுல் 1787-ம் வருஷத்திய ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியவில்லையென்ற காரணம் சொல்லி, 1793-ம் வருஷத்திய ஒப்பந்தத்தை செய்தார்கள். ஆகவே 1787-ம் வருஷத்திய ஒப்பந்தம் அடிபட்டுப் போயிற்று. இந்த ஒப்பந்தம் செய்யும்போது அங்கே மன்னராய் இருந்தவரின் பெயர் ராஜா அமர் சிங். கம்பெனியாரின் பாதுகாப்புச் செலவுக்காக ஏராளமாக பணம் கொடுக்கவேண்டுமென்றும் வற்புறுத்தி வாங்கினுர்கள்.

ராஜா அமர் சிங் என்பவருக்கு ராஜா துல்சாஜி ஒன்றுவிட்ட சகோதரர். துல்சாஜிக்கு ஆண் குழந்தைகள் இல்லாதபடியால் சரபோஜி என்பவரை தத்துப் புத்திரராக தாம் சாவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு தேர்ந்தெடுத்தார். அம்மாதிரி சரபோஜியை தேர்ந்தெடுத்தது இந்து சட்டத்திற்குப் பொருத்தமானதாக இல்லையென்று கருதப்பட்டது. ஆகவே ராஜா அமர் சிங் பட்டத்தில் அமர்ந்தார்.

ராஜா அமர்சிங்கிற்கு விரோதமாகச் சிலர் புகார் செய்தார்கள். சரபோஜியை சரியாக நடத்தவில்லையென்றும் கொடுமைப்படுத்துகிருர் என்றும் புகார் வந்திருப்பதாகச் சொல்லி, கம்பெனியார் சரபோஜியையும், துல்சாஜியின் ராணிகளையும் சென்னையில் கொண்டு வந்து வைத்தார்கள். சரபோஜியைசென்னைக்குக் கொண்டு வந்த பின்பு அவரோடு கம்பெனியார் பேரம் பேச ஆரம்பித்தார்கள். அவரோடு ஒரு ஒப்பந்தத்தையும் செய்து கொண்டார்கள். அதாவது அவருடைய ராஜ்யம் பூராவையும் கம்பெனியாருக்குக் கொடுத்து விடவேண்டுமென்றும் கோட்டைக்குள் மட்டுமே அவருக்கு அதிகாரம் உண்டென்றும் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். சரபோஜி ராஜா உண்மையான வாரீஸ் என்பதாய் இருந்தால் அவரைப் பட்டத்தில் வைத்த பின்புதான் அவரோடு ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும்.

அவரைக் கைதியாக வைத்துக் கொண்டு அவரை மன்னராகப் பாவித்து பித்தலாட்டமாக ஒப்பந்தம் செய்ய கம்பெனியார் கொஞ்சங் கூட வெட்கமடையவில்லை. அந்த ஒப்பந்தம் ஏற்பட்டதும் எவ்வித காரணமும் சொல்லாமல் அமர்சிங்கை பட்டத்தை விட்டு நீக்கினுர்கள். இம்மாதிரியாக, தஞ்சாவூர் ராஜ்ஜியத்தைக் கம்பெனியார் அழித்து முடித்தார்கள். பிரிட்டிஷார் இங்கே தங்குவதற்கும் பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றுவதற்கும் உதவியாயிருந்த தஞ்சாவூர் ராஜப் பரம்பரையின் முடிவு அம்மாதிரி ஆயிற்று.

இந்தியாவுக்கு இப்பொழுது சுயராஜ்ஜியம் கிடைத்துவிட்டாலும் பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டு வெளியேற்றிவிட்டாலும் ஒரு விஷயத்தை இந்தியராகிய நாம் மறந்துவிடக்கூடாது. அதாவது எம்மாதிரி காரணங்களினுல் இந்தியா முன்பு அடிமைப்பட்டது என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடாமல் சிந்திப்போமானுல், அம்மாதிரி வழிகளில் இந்தியாவுக்கு எந்தக் கெடுதலும் ஏற்படாமல் காப்பாற்றிக் கொள்ள முடியும். ராஜ்ஜிய விஷயங்களாயிருந்தாலும் சரி, வேறு பொது விஷயங்களாய் இருந்தாலும் சரி, நமது சுயநலத்தைக் கொஞ்சம் விட்டுக்கொடுத்து நாட்டினுடைய நன்மையை முன்னுல் வைத்து நாம் யோசிக்க வேண்டும்.

★

## வாழ்க மணமக்கள்!



கச்சனுவிளை திரு. ஜி. கலியாணசுந்தர நாடார் அவர்கள் சகோதரர் திரு. ஜி. மகராஜன் அவர்கள் செல்வன் ராமானுஜம் அவர்களுக்கும் திரு. கோபாலசுவாமி நாடார் அவர்கள் செல்வி பத்மாவுக்கும் 1-12-57ல் வெகு விமரிசையாகத் திருமணம் கச்சனுவிளையில் நடைபெற்றது.



மகிழ்ச்சியான
செய்தி!
தங்கமீன் மார்க்
(CONES & HANKS)
20ம்.நெ
சிறந்த பஞ்சு நூலை
நாங்கள் தயார்செய்கிறோம்
விபரங்களுக்கு:
போன் நெ 1134
DPF டெக்ஸ்டைல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
மேட்டுப்பாளையம் ரோடு - G.N. மில்ஸ் P.O. கோயமுத்தூர்.
DPF TEXTILES (PRIVATE) LTD
METTUPALAYAM ROAD COIMBATORE
DPF
TEXTILES
V.S.V.

போன் : 203 தந்தி : "TRANSPORT"

# சண்முகம் டிரான்ஸ்போர்ட்
# பஸ் & லாரி சர்வீஸ்

## அருப்புக்கோட்டை



**எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.**

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

**பொதுஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.**

போன் : 512 - பிராஞ்சு: மதுரை - தந்தி : "TRANSPORT"




## அத்தியாயம் 7

## அந்தரங்கம்

கு.ப.சேது அம்மாள்

மேலே வான் வெளியைச் செந்நிற மாக்கிக் கொண்டே மலைவாயில் இறங்கிக் கொண்டிருந்தான் அந்திச் சூரியன்.

அந்த நேரத்தில், வடபாதி பண்ணை ராமசுவாமியும், நாகலிங்கமும் நின்று மரத்திலிருந்து மாங்காய்களை இறக்குவதைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராமசுவாமி, "ஏன் நாகு, நான் விசாரிக்கச் சொன்ன சங்கதி என்னவாயிற்று?", என்று கேட்டார். "விசாரித்து விட்டேனே! தென்பாதி பண்ணையார் வந்து, 'விடேன், தொடேன்' என்று மல்லுக்கு நின்று ஆயிரத்தைந் நூறு ரூபாயைக் கறந்து கொண்டு போய் விட்டாராமே! மகன் தான் படிப்பை முடித்துக் கொண்டு வந்தாகிவிட்டது! இன்னும் எதற்கு ஆயிரத்தைந் நூறும், இரண்டாயிரமும் என்று புரியவில்லை!", என்றான் நாகு.

"எனக்குப் புரிகிறது! மகன் மெட்ராசிலே வாங்கின கடனுக்காக இருக்கும்!"

"என்னது? கடனா?", என்று விழித்தான் நாகு ஒன்றுமறியாதவன் போல. "ஆமாம்! மெட்ராசிலே ஷோக்காக வாழ்க்கை நடத்தினால் கடன் வாங்காமல் முடியுமா நாகு?"

"நம் சோமுவும்தானே மெட்ராசில் படிக்கிறார்?"

"இது சுத்தப் பட்டிக் காடு! அவர் மைனர் துரை யல்லவா! ஆசாரமும், நியமமும் பெருத்த அவர்கள் வீட்டில், மைனர் காலத்தில் வீட்டு எஜமானிஎந்த ஆங்கிலோ......"

"சாமி காய்களை வண்டியில்

ஏத்தலாம்களா?", என்று கேட்டுக்கொண்டு வந்தான் ஒரு ஆள்.

பேச்சு அத்துடன் நின்றது. நாகலிங்கம் மாங்காய்க் குவியலை நோக்கிச் சென்றான்.

ஒரு மொட்டை வண்டியில் முன்னும், பின்னும் பாய்களை வைத்துத் தடுத்து மாங்காய்களைக் கொட்டி நிரப்பி, மேலே மாங்குழையும் வைக்கோலும் போட்டு விட்டு, 'ஓட்றா வண்டியை', என்று வண்டியோட்டிக்கு உத்தரவிட்டான் நாகு.

"நாகு, வண்டியோடு கூட நான் போகிறேன். நீ இப்படியே போய் அந்த ரத்தினம் பயலைக் கண்டு, 'நீ மோதிரம் பண்ண வேண்டியதில்லை, தங்கத்தைக் கொடுத்து விடு', என்று கேட்டு வாங்கிக் கொண்டு வந்துசேர் வீட்டுக்கு என்ன?', என்றார் ராமசுவாமி.



நாகு பதில் பேசாமல் வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

'வேண்டிய பொழுது இருக்கிறது நாகு, சையது ராவுத்தர் கொய்யாத் தோப்பு வழியாகப் போனாயானால் இரண்டெட்டு!'', என்று கூறிவிட்டு வண்டியைப் பின்தொடர்ந்து நடந்தார் ராமசுவாமி.

நாகு அங்கிருந்து புறப்பட்டு பர்லாங்கு தூரத்திலிருந்த கொய்யாத் தோப்பை நோக்கி நடந்தான்.

ஐந்து நிமிஷத்திற்குள் சாலையை விட்டிறங்கித் தோப்பினுள் புகுந்ததும் பேச்சுக் குரல் கேட்டது.

"சின்ன விஷயமடா சோமு! இதைப்போய்'கிண்டிக் கிளறி அந்தக் குட்டியைக் கேட்டு, அதற்கு ஒரு கான்பரன்ஸ், தீர்மானம்! சேச்சே! சுத்த மோசம். வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை எனக்கு வரவர'', என்று படபடப்புடன் பேசிய துரையின் குரல் கேட்டுவிட்டு அப்படியே நின்று விட்டான் நாகு.

"இந்த 'பக்கவெட்டு' சங்கதிகளெல்லாம் இருக்கட்டும்துரை. இதைப் பற்றி அப்புறம் பேசிக் கொள்ளலாம். உன் கருத்து எதில் புகுந்து வேலை செய்கிறது என்பதை மாத்திரம் சொல். வள்ளியின் மேல் உனக்குக் காதல் உண்டா, இல்லையா?''

"உண்டு, இல்லை! விஷயம் தெரியாமல் அந்தக் குட்டியைத் திட்டிக் கொட்டுகிறார்கள் பார் அதைப் பற்றிப் பேசு! அவள் என்னை இந்த இரண்டு நாட்களுக்குள்ளேயே மயக்கி, அவள் கைக்குள் போட்டுக்கொண்டு விட்டாளாம்...?''

"சே! அது சுத்தப் பொய்! அவளுக்கு மயக்கத் தெரியாது என்கிற உண்மையை கோயில் முன் சென்று சத்தியம் பண்ணலாம்! ஆனால் அவளைக் கண்டு நீ மயங்கியதென்னவோ உண்மை! அப்படித்தானே?''

"அது அவள் குற்றமா சோமு?''

"ஊம்! அப்படி வா வழிக்கு! அது அவள் குற்றமல்ல என்பதை நீயும், நானும், நம்மைப் போன்றவர்களும் ஆமோதிக்கலாம். நமது மேலதிகாரிகள்,

நமது விண்ணப்பத்தை ஏற்க வே மாட்டார்கள்! ஆகையால் எனக்கு ஒன்று தோன்றுகிறது சோமு''

''என்ன?''

''இரண்டு மாதத்திற்கு முன்பு நீ போட்ட 'பிளான்' பிரகாரம் மேல் நாட்டிற்குப் போய்விடு, மேற் கொண்டு படிக்க. பணம் செலவழிந்தாலும் சம்பாத்தியம் உண்டு நிச்சயமாக! இல்லையா—உன் அத்தையின் பெண் விலாசினியை உனக்குக் கொடுக்க ரெடியாக இருக்கிறார்கள். சீக்கிரத்தில் அவர்கள் புறப்பட்டு வந்து ஜாதகம் கேட்கப் போவதாகப் பிரஸ்தாபம். 'ஜம்'மென்று கலியாணத்தைப் பண்ணிக் கொண்டு குடும்பஸ்தனாகி விடு!...''

''இரு, இரு! இதெல்லாம் உனக்கு யாரடா சொன்னார்கள்?''

''யார் சொன்னால் என்ன? பெண் வருகிறது; கலியாணம் ஆகிவிட்டால் இந்தத் தலைவேதனை ஒரு வழியாக நிவர்த்தியாகிவிடும்''.

''அப்பா! அருமை நண்பா! ரொம்ப அனுகூலமாக யோசனை சொல்லிக் கொடுத்து விட்டாயே! இவ்வளவு கரிசனத்தோடு யார் சொல்லித் தருவார்கள்?''

''ஏன், என்ன குணதோஷமாம் அந்தப் பெண்ணுக்கு?''

''குணத்திலே தோஷ மில்லை! போயும், போயும் அந்த 'ட்ரையாங்கிள்' மூஞ்சியும், கருடாழ்வார் மூக்குமாக இருக்கும் அந்த அழகைக் கட்டிக் கொண்டு அழு என்கிறாயோ?''

''வேண்டாம்! உன் மனதுக்குப் பிடித்த 'ரம்பை'யாக எங்காவது பார்த்துக் கண்டு பிடி, பண்ணிக்கொள்!''

''கீரை மசியலும், வற்றல் குழம்பும், சுட்ட அப்பளமுமாகச் சாப்பிடும் நம் பெண்கள் எல்லாமே ரம்பையாகத்தானிருக்கிறார்கள்! பார்க்கவில்லையா என்ன?'', என்று வயிற்றெரிச்சலுடன் 'வள்'ளென்று விழுந்தான் துரை.

சோமு நகைத்துவிட்டு, ''ஏய் அப்பனே! உனக்கு 'மூளை' சரியாக இல்லை! இப்படி ஒரு சுற்றுப் பிரயாணம் போய்விட்டு வா!''

''சுற்றுப் பிரயாணம் எதற்காம்? இவ்வளவு பணம் செலவு செய்து படிக்க வைத்ததைவிட நாலு எருமைகளை வாங்கிக் கொடுத்து'மேய்த்துக் கட்டடா', என்றால் கட்டி யிருக்க மாட்டேன்?''

''அது இளப்பம் என்று நினைத்திருக்கிறாயோ உன் மனதில்? மேய்த்துக் கட்டினால், பாலாயிற்று, தயிர், வெண்ணெய், நெய்யாயிற்று! நாலு எருமை கறந்தால் எவ்வளவு சமர்த்தி வீட்டில் என்பது தெரிந்தால் நீ இப்படி பேசியிருக்கமாட்டாய்! இப்பொழுது தான் என்ன முழுகிவிட்டதென்கிறாய். இரண்டு எருமை வாங்கி மேயேன்! பொழுதும் போகும்; லாபமும் உண்டு!''

''டேய்! எவ்வளவு திமிரடா உனக்கு?—ஆங்!''

''கிடையவே கிடையாது, நாளைக்குப் பெரிய வாய்க்கால் கரைக்கு வந்து பார். தினமும் மாடு குளிப்பாட்டுகிறது, மேய்ச்சலுக்கு விடுவது எல்லாம்



நான்தான்! இதனல் நம் கௌரவம் ஒன் றும்குறைந்து விடாது என்றேன் ”

“ சரி நானும் மேய்க் கிறேன் ! இடுப்பில் கோவணம், தலையில் முண்டாசு, கையில் தடி, இன்னும் என் னென்ன வேண்டும் அலங்காரத்துக்கு ?”

“ ஒன்றும் வேண் டாமப்பா ! நீளமாகக் கயிறு விட்டு மாடு களைக் கட்டிவிட்டு மரத் தடிநிழலில் ஒரு கயிற்றுக் கட்டிலைக் கொண்டு வந்து போடச் சொல்லி, ஹாய்யாகப்படுத்துக் கொண்டு படித்தால் ஒரு புஸ்தகம் முடிகி றது! நல்ல காற்று, நிசப்தமான இடத் தில் படிப்பதால் மன தில்விஷயம் நன்ருகப் பதிகிறது. மூளைக்கு நல்ல ஓட் டம்! அ தோடு மேய்ச்சல்



கூலி லாபம்! பண்ணைக் கா ரன் வீட்டிலே பிறந்து நீ ஏன டா ! இப்படி ஊதாரியாக ஆகி வருகி ருய்? அடடா, பேச்சின் சுவையில் பொழுது போனதே தெ ரிய வில்லை யே !எழுந்திரு நடைபாதை ...அட! பார். அந்தப் பக்கம் சருகு } களில் சல சல வெ ன்ற ஓசை! பூச்சி பொட்டு நடமாடலாம்.

போவோம். கிளம்பு'', என்று கூறி எழுந்தான் சோமு.

துரையும் எழுந்து சோமுவிடம் விடை பெற்றுக்கொண்டு மறுபுறம் சென்றதும் சோமு தன் வழியில் திரும்பி இரண்டடி வந்ததும் நாகு எதிர்ப்பட்டான்.

அவனைப் பார்த்த சோமு திடுக்கிட்டவனாக, ''இங்கெங்கு வருகிறாய் இந்த நேரத்தில் நாகு?'', என்று கேட்டான்.

''அப்பா என்னை ஆசாரி வீட்டுக்குப் போய் வரச்சொன்னார். குறுக்கு வழியிலே வந்தால் கிட்டமாயிற்றே என்று தோப்பிலே புகுந்தேன் அவசரமாக! நீங்கள் என்னடா என்றால் ரொம்ப சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தீர்கள். நான் குறுக்கே வரலாமா?'', என்று நகைத்தான் நாகு.

அவன் சிரிப்பிலே ஒரு இகழ்ச்சி, ஒரு பகைமையுணர்ச்சி, கோபம் எல்லாமாக பளிச்சிட்டு மறைந்தது!

''இவ்வளவு நேரமாக 'ஒட்டு'க் கேட்டுக் கொண்டா நின்றிருந்தாய்?'', என்று பிரமித்துப் போய்க் கேட்டான் சோமு.

''அதற்கு என்று நான் வரவில்லை சோமு! வந்த இடத்தில் செய்தி அகப்பட்டது! என்ன-? மைனருக்கு ஏதோ கிரகம் போதாது என்று தெரிகிறது. இல்லாவிட்டால் இப்படியெல்லாம் ஏன் புத்தி போகிறது? சரி. இருட்டிக்கொண்டு வருகிறது, சீக்கிரமாய் வீடு போய்ச்சேர்'', என்று கூறி விட்டு நடந்தான் நாகு.

## அத்தியாயம் 8.

## யார் அது?

நாகு சொன்ன சொற்களை நினைத்துப் பார்த்துக்கொண்டே நடந்தான் சோமு.

அவன் சிரித்த சிரிப்பு!

அதிலே பிறந்த வெம்மை; பழி தீர்க்க உறுமும் ஆக்ரோஷம்; இவை யிரண்டும் சோமுவைக் கலக்கிவிட்டது!

துரையின் உணர்ச்சி வேகம், நாகுவின் ஆக்ரோஷம் இரண்டையும் சேர்த்துப் பார்த்ததும் சோமுவின் உள்ளம் பதறியது! கால்கள் வெல வெலத்து நடை தள்ளாட வீடு வந்து சேர்ந்தான் சோமு.

நடு வீட்டில் வண்டி மாங்காயும் கொட்டி வீடு களேபரமாகக் கிடந்தது!

''ஏண்டா சோமு. அந்த நாகு எங்கேயடா தொலைந்தான்?'', என்று கூப்பாடு போட்டாள் ராமசுவாமியின் சம்சாரம் பாலம்மாள்.

''ஏன்? தட்டான் வீட்டுக்குப் போகச் சொன்னேன். இதோ வந்து விடுவான்'', என்று சோமுவுக்குப் பதிலாக ராமசுவாமி பதில் சொன்னார்.

''அவன் வந்ததும், தேறிய காயாகப் பொறுக்கிக் குதிரில் போடச் சொல்லுங்கள். பாக்கியை, ஊறுகாய், மாங்கொட்டை போட்டுவிட்டு......''

''அதற்கெல்லாம் நேரமெங்கே? காலையில் ஆகக் கூடாதா?''

"நன்றாயிருக்கிறதே! பொழுது விடிந்து, வருவாரும், போவாருமாக பச்சு பச்சென்று நடுக் கூடத்தில் கொட்டி வைப்பார்களா? அதற்குக் காமரா உள்ளைத் திறந்து அதிலே கொட்டச் சொல்லக் கூடாதோ? 'நீ அப்போதே சொல்வது தானே?''

"நான் என்னத்தைக் கண்டேன்? கேட்காமல், கொள்ளாமல் தபதப வென்று நடுக் கூடத்தில் சாய்க்கச் சொல்வீர்களென்று''

"அபசாரம், அபசாரம்! கேட்காமல் கொட்டினது தப்பு, தப்பு! தேறினதும், தேருததும் இந்த வேளையிலே தெரியாது; அதனுல் உள்ளே அள்ளிக் கொட்டச் சொல்லுகிறேன். காலையில் பார்த்துப் பொறுக்கச் சொல்லலாம்......''

"உங்களுக்கும், எனக்கும் தான் வெள்ளெழுத்து! நாகுவுக்குக் கூட கண் தெரியாதா? ஒரு வழியாகக் கையோடு காரியம் ஆகிவிடுமே என்று சொல்லுகிறேன்'' என்றுபிடித்த பிடியைத் தளர்த்தாமல் பேசினுள் பாலம்மாள்.

"சமையலாயிற்ரு அம்மா?'', என்று நடுவில் புகுந்து கேட்டான் சோமு.

"ஆகிக் கொண்டிருக்கிறது. சற்று இரு. தாளித்துவிட்டு இலை போடுகிறேன்......''

"சரி. மெதுவாக ஆகட்டும். பழையது போடு. பசிக்கிறது ரொம்ப'', என்ருன் சோமு.

"இதோ ஆகிவிட்டதடா'', என்று அடுப்பைத் தள்ளி எரிய விட்டாள்.

"ஏன்? பழையது வேணுமென்ருல் தயிரை விட்டுப் போடேன்; இது ரொம்ப உயர்த்தியாக்கும்—ஒட்டிக்க ஒட்டிக்க'', என்று இடை செருகினுர் ராமசாமி.

நாகு உள்ளே நுழைந்து கொண்டே, "அந்தப் பயலை வீட்டிலே காணேம்'', என்ருன்

"திருட்டுப் பயல். உள்ளே இருந்து கொண்டே 'இல்லை' என்று சொல்லச் சொல்லியிருப்பான். இருக்கட்டும் சொல்லுகிறேன். எவ்வளவு மாதமாகிறது கொடுத்து. அக்கிரமமாக இருக்கிறதே! இதோ நாகு வந்துவிட்டான்'', என்று சமையலறைப் பக்கம் திரும்பிச் சொன்னுர் ராமசுவாமி.

பாலம்மாள் வந்து கொண்டே, "ஏன் நாகு அஸ்தமிக்கிற வேளையில் இந்த மாதிரி நடுக் கூடத்தில் கொட்டச் சொல்லி......''

"அடடா! கொட்டியாகிவிட்டது. இனிமேல் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லேன்',என்றுவாதாடினுர்

## ஷாவின் அடக்கம்!

பெர்னுட்ஷா பொதுவாக யாரையும் தன்னை விடச் சிறந்தவராக ஒப்புக்கொள்ள மாட்டார். ஆனுல் மகாத்மா காந்திஜி வட்டமேஜை மகாநாட்டிற்குப் போயிருந்த பொழுது, தனது கைகளை நீட்டியபடி தன்னை 'குட்டி மகாத்மா' என்று அறிமுகம் செய்து கொண்டார்! அவருக்கும் அதனுல் ஒன்றும் குறைந்து விட வில்லையே!

ராமசுவாமி.

"சொல்லத்தானே வரு கிறேன். நாகு, இதோ பார். பழக்காயைப் பார்த்து எடுத்து காமரா உள்ளேத் திறந்து அதிலே அள்ளிப் போடு; காலே யில் குதிரில் போடலாம். பாக்கியைக் கோணிகளில் அள்ளிக் கட்டிவை.' நாளேக்கு ஆகட்டும் மற்றவை. ராத்தி ரிக்கு நீ இங்கேயே சாப்பிட்டு படுத்துக் கொள். உதயத் திலே இந்த ஜோலியை முடிக் கத் தோதாக இருக்கும்", என்று சொல்லிவிட்டு உள்ளே சென்ருள் பாலம்மாள். சாப் பிட்டுக் கொண்டே சிந்தனேயில் ஆழ்ந்திருந்த சோமுவின் நெஞ் சில் உதறல் கண்டது!

'சரிதான்! நாகு இங்கேயே சாப்பிட்டுவிட்டு, இங்கேயே படுத்து, இங்கேயே இருந்தானு ஞல் விஷயம் முழுவதும் அற்று படி ஆகிவிடப் போகிறது', என்ற கவலேயுடன் சாப்பிட்டு எழுந்தான் சோமு.

அதன் பிறகு ராமசுவாமி, பாலம்மாள் இருவரும் சாப் பிட்டு முடியவும், நாகுவின் வேலே முடியவும் சரியாக இருந்தது. கையலம்பிக் கொண்டு வந்த பாலம்மாள், "ஆகிவிட்டதா நாகு, இலே போடவா?", என்று வினவி ஞள்.

"போடுங்கள். இதோ கை கால்களேக் கழுவிக் கொண்டு வருகிறேன்", என்று கூறி விட்டுக் கோணிகளே ஒரு ஓர மாக நகர்த்தி வைத்தான்.

கொல்லேப் புறம் சென்று முகம், கை கால்களேச் சுத்தம் செய்துகொண்டு வந்தபொழுது இலே போட்டு பரிமாறி இருந் தாள் பாலம்மாள். நாகு, இலே முன் அமர்ந்து அன்னத்தைக் கலந்து கொண்டே, "எல்லாமே பழக் காயாத்தானம்மா இருக் கிறது. சின்னதாகப் பார்த்து இரண்டு கோணிக் காய்தான் கழித்திருக்கிறேன்", என்ருன்.

"ஒரு கோணி வினியோகம் பண்ணித் தீர வேண்டும். ஒரு கோணிக்காய் நம் வீட்டுக்கு வேண்டும். உனக்கு எவ்வளவு காய் வேணும்?", என்று வின விஞள் பாலம்மாள்.

"ஆமாமடி! அவனேப் போய்க் கேளு! இருந்தால் கூடையில் கொடு. இல்லா விட்டால் இரண்டு காயைக் கையில் கொடுத்து போகச் சொல்லு!", என்று கிண்டல் செய்தார் ராமசாமி.

"அதுகூட எனக்கு மனம் வராது! பழம் பழுக்கவிட்டு, நறுக்கிய பழத்தில் நாலு துண்டு கொடுத்தாலும் கொடுப்பேன், இல்லாவிட்டாலும் இல்லே!", என்ருள் பாலம்மாளும் விட்டுக் கொடாமல்.

"அடடா! நீங்கள் இரண்டு பேரும் பேசாமலிருங்கள்! எனக்கு வேண்டியதை நான் எடுத்துக் கொள்கிறேன். இது கிடக்கட்டும். நம்ம ஊரிலே புதிதாக ஒரு 'புயல்' கிளம்பி யிருக்கிறது,...",என்று சொல்லி நிறுத்திஞன் நாகு.

ஈசிச் சேரில் சாய்ந்து கொண் டிருந்தவர் 'கம்' மென்று நிமிர்ந் துட்கார்ந்து, "புயலா! அதென் னது?," என்ருர் ஆவலுடன்.

"ஆமாம் சாமி! மெட்ராசிலே மைனர் துரை பண்ணிய தொழிலே..."

"இங்கேயும் ஆரம்பித்துவிட்டானு ?", என்று வாக்கியத்தின் பிற்பகுதியைத் தமது கேள்வியாகக் கேட்டார், ராமசுவாமி.

சோமுவுக்கு முன்பாக பாலம்மாள் வந்து, "பின் யார் யாருக்கு எந்தெந்த பழக்கமோ, அது அவர்களோடுவராதாஎன்ன?", என்று ஏளனமாக உரைத்தாள்.

"அப்புறம் ?", என ஊக்கிஞர் ராமசாமி.

"மைனர் போகிற போக்கிலேயே விட்டுவிட்டால் ஊரே ஒரு பாடம் கற்றுக் கொண்டுவிடும் ! ஆனுல் அதுக்கு சோமு இடம் கொடுக்காது போலிருக்கிறதே !"

"என்ன உளறுகிருய் நாகு! தென்பாதியான் மகனுக்கும், என் மகனுக்கும் என்ன வைத்திருக்கிறது ?"

"அந்தரங்க விசுவாசம் வைத்திருக்கிறது !"

"புரியும்படி இன்ஞெரு தரம் சொல்லு ?"

"தாராளமாகச் சொல்லுகிறேன் சாமி; விண்டாலும் விரியாது அவர்களிருவருடைய சிநேகிதம் !", என்ருன் நாகு முகத்தை அசைத்துக் கொண்டே.

"யார் சொன்னது அப்படியென்று ?"

"நான் பார்த்தேனே பிரத்யட்சமாக !"

"எப்பொழுது, எங்கே, பார்த்தாய் ?"

"சற்று முன்தான் ! ரத்தனத்தைப் பார்க்க வேண்டிப் போன போது கொய்யாத் தோப்பில் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். கடவுளின் திருவிளையாடலைப் பாருங்களேன் ! உங்கள் இரண்டு பேருக்கும் தீராப் பகை. அவர்களிருவரும் நகமும் சதையுமாக ஒட்டிய சிநேகம்...", என்று புன்னகையுடன் சொன்ஞன் நாகு.

ராமசுவாமியின் நெஞ்சில் எரிமலை வெடித்தது! ஆத்திரத்துடன் "டேய் சோமு", என்று உரக்கக் கூவியழைத்தார் மகனை. நாகு, "சும்மா இருங்கள். இரண்டு கையும் சேர்ந்து தட்டினுல் சத்தம் உண்டாகும். பொறுத்துப் பார்ப்போமே கொஞ்சம்..."

"என்ன அப்பா ?", என்று கேட்டுக் கொண்டு வந்தான் சோமு.

"ஏனடா ? விரோதியின் மகனை சிநேகம் பண்ணிக் கொண்டு கூடிக் குலாவ உனக்கு வெட்கம், மானம் இல்லையா ?"

"வெட்கப்படும்படி, அவமானப்படும்படி நான் ஒன்றும் செய்யவில்லையே! நீங்களிருவரும் விரோதிகளாக இருப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை. ஆனுல் அதற்காக நாங்களும் அப்படியே இருந்தால் ஊருக்குள் புகையும், பகையும் இன்னும் கனிந்து எரிந்து ஊர் அழிந்துவிடும்..."

"அடடா ! பெரிய சீர்திருத்தவாதி ! ஊர்க் கவலை படப்போய் விட்டாயாக்கும், அந்த அல்பப் பயலுடன் சேர்ந்து..."

"நிதானம் தவருமல் பேசிஞல் நன்ருக இருக்குமே, அப்பா ?"

"சோமு, தோளுக்கு மிஞ்சிஞல் தோழன் ! நீ போ சோமு.

விஷயத்தை முழுவதும் கேட்காமல் கோபிக்கிறீர்களே!'', என்று சொல்லி, தான் சற்று முன்பு கேட்ட கொய்யாத் தோப்புக்குள் சோமுவுக்கும், துரைக்கும் நடந்த சம்பாஷணையை அப்படியே எடுத்துச் சொன்னான் நாகு.

செய்தியைக் கேட்ட ராமசுவாமி, சற்று நேரம் அசைவற்று உட்கார்ந்திருந்து விட்டு, கலவரம் நிறைந்த குரலில், "அட படுபாவி! மெட்ராஸ் என்று நினைத்துக் கொண்டானா இந்த ஊரை? ஆமாம்; ஏனடா சோமு, நீயேன் இதில் குறுக்கே நின்று மறிக்கிறாய்?''

"உங்களுக்கு ஒரு ஆப்த நண்பனிருந்து, அவனுக்கு ஒரு அவமானம் நேரவிருந்தால் நீங்களும் கூடத்தான் மறிப்பீர்கள்! அது பொதுவான மனித இயல்பு'', என்று அமைதியாகப் பதில் சொன்னான் சோமு.

"அடடா! அந்தப் பெண் பாவம், சூது வாது தெரியாமல் தளதள வென்று வளர்ந்திருப்பது அவன் கண்ணை உறுத்தியிருக்கிறது! பித்துக்குளித் தனமாக அந்தக் குட்டியின் மீது கையை வைத்தான்—; அவ்வளவுதான்! தொலைந்தான் அதோடு'', என்று விவரித்தார் ராமசுவாமி அங்கலாய்ப்பும் அமுத்தலுமாக.



"ஆமாம்; அந்தக் குட்டியே அதற்கு 'ஒத்துமத்தாக, இருந்தால், அப்பொழுது என்ன செய்வதாம்?'', என்று ஒரு வெடி வைத்தாள் பாலம்மாள், சிரமப்படாமல்.

அந்தச் சொல்லைக் கேட்டதும் நாகு துடிதுடித்தவனாக, "அம்மாவுக்குக் கோபம் வரக்கூடாது! சத்தியத்திற்கும், தருமத்திற்கும் கட்டுப்பட்டு ஏர் பிடித்து உழுது வாழும் உழவனுக்குப் பிறந்த பெண் அம்மா அது! உயிரை விட்டாலும் விடுமே தவிர மானத்தை விடாது! அதற்கு நான் கியாரண்டீ'', என்று படப் படப்புடன் சொல்லிவிட்டான் நாகு.

"பார்ப்போமே, வேடிக்கையை; என்னதான் ஆகிறதென்று!'', என்று மிதப்புடன் பதில் சொன்னார் ராமசுவாமி.

நாகு நெஞ்சில் வேலைப் பாய்ச்சியது போன்ற வேதனையடைந்த அவன், "ஆமாம்! வேடிக்கைதான்! ஆணே, பெண்ணே, ஒரு உயிர் ஒழியப் போகிறது!'', என்றான் கண்கள் சிவக்க.

"என்ன? என்ன சொன்னாய்?'', என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத்திரும்பினான் நாகு! எதிரே வந்து நின்ற சோமுவை நிமிர்ந்து பார்த்தான் நாகு. சோமுவின் வெளுத்த முகத்தைக் கண்டு ஆத்திரம் அடங்கியவனாக "நீயேன்

சோமு இவ்வளவு திகில் படுகிருய்?,'' என்று கேட்டான்.

"காரணமாகத்தான் நாகு! கல்வியறிவு உனக்கு அதிகமில்லையென்ருலும் அனுபவ அறிவு நிறைய இருப்பதால் நான் சொல்வதைக் கொஞ்சம் மனதில் வாங்கிக் கொண்டாயானுல் பிரச்னையிலுள்ள உக்ரம் தணிந்துவிடும்! நான் சொல்வதைக் கேட்டு உனக்கும் அப்பாவுக்கும் கூட கிண்டலாகத் தோன்றலாம். ஆனுல் உண்மை உண்மைதான்!

உலகத்தில் குற்றங்குறையற்ற மனிதர்கள் இருக்கமுடியாது! ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு குறைபாடு இருக்கவே செய்யும்! நமக்கு ஆகாத விரோதியாக இருந்தாலும், அவனுடைய நல்ல தன்மையை நாம் கொண்டாடத் தவறுவதில்லை. அதுபோல, துரையினிடம் உள்ள பலவீனம் சபல குணம் — அதாவது பெண்கள் விஷயத்தில். அது ஒன்று தவிர மற்றெந்த வகையிலும் அவன் சுபாவம் ரொம்ப உயர்ந்தது! தயை, தாட்சண்யம், பரோபகாரம், நீதி, நேர்மை, உண்மை, எதையும் சட்டென்று கிரகித்துக் கொள்ளும் சூட்சமமான புத்தி. கோமளமான குணங்கள் அவ்வளவும் நிறைந்தவன்''.

"என்னஉபயோகம்?அவைகளால் மனிதன் மதிப்புடன் வாழ முடியாதே? மனிதனுக்கு முக்கியமாக வேண்டியது ஒழுக்கம்......''

"அது சரிதான் நாகு; இவ்வளவு நற்குணங்களுமிருந்தும் இந்த ஒரு கெட்ட குணத்தால் அவன் வாழ்க்கை பாழ்படக் கூடாது என்றுதான் அவனுடைய சபல குணத்தை சமயம் நேரும் போதல்லாம் திருத்தப் பாடுபடுகிறேன்....''

"அடடா, என்ன கருமசிரத்தையடாப்பா உனக்கு?'', என்று சிரித்தார் ராமசுவாமி.

"கருமசிரத்தையிருந்து லாபமேதுமில்லை சோமு! நீ போதிக்கிற போதனையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குதான்! ஒன்று நிச்சயம் ..''

"அது நீ சொல்லாமலே தெரியும் எனக்கு. ஏதோ என்னுல் முடிந்தவரையில் அவனை வழிக்குக் கொண்டு வரத்தான் பாடுபடுகிறேன்'', என்று குரல் கம்ம மேலே பேச முடியாமல் பேச்சை நிறுத்தினுன் சோமு.

"நன்ருகப் பாடுபட்டுப் பார் சோமு! உன் பிரயாசை பயன் பெற்ருல் நான் ரொம்ப சந்தோஷப் படுவேன். ஆனுல் பயன் படும் என்று என் மனசுக்கேற்பத் தெரியவில்லை. ஏனிப்படிச் சொல்லுகிறேன் என்கிருயா?

அந்த மனிதனிடம் உள்ள நல்ல குணங்களுக்கு இரண்டத்தனை மடங்குக்கு இந்தக் கோணல் புத்தி இருப்பதால் அங்கே உன் போதனை எடுபடவே படாது! எடுபடக் காலம் வரும்போது தான் ...''

"அதெந்தக் காலம் நாகு?, என்ருர் ராமசுவாமி கேலியாக.

"அதுவா? இருக்கிற கௌரவம், மானம், மரியாதை, சொத்து, சுதந்திரம் எல்லாம் போன பிறகு வரும் அந்தக் காலம்! அப்பொழுதுதான் சோமுவின் உபதேசம் வேலை

செய்யும்! ஏன் சோமு அப்படி விழிக்கிருய்? உன் சினேகித னுக்கு உள்ள இவ்வளவு பவி ஷும் போகவேண்டும் என்பது உன் பிரார்த்தனையா என்று வாய்திறந்து கேட்க முடியாமல் விழியால் கேட்கிருய்! என் பிரார்த்தனை அதுவல்ல! ஆனால், நடக்கப் போவது அது தான்! அதை நீயும் நானும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், எல்லாவற்றிற்கும் அப் பால் ஆண்டவன் செயல் என் பது ஒன்று தனியாக இருக் கிறது—அதன்படிதான் நடக் கும். நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே!'', என்று சொல்லி நிறுத்தினன் நாகு.

''ஓகோ அப்படியா, சரிதான்'' என்று சொல்லி விட்டு சடக் கென்று அங்கிருந்து மாடிக்குப் போய் விட்டான் சோமு. சோமு வின் கவலையையும், வேகத்தை யும் பார்த்து, ராமசுவாமியும் நாகுவும் பிரமித்து நின்ருர்கள்.

பாலம்மாள் சிரித்துக் கொண்டே, 'பேஷாக இருக் கிறது சமாசாரம். நாகு சொல்லு கிறப் போல செம்மையாக வாங்கத்தான் போகிருன் அவன்! பாவம். அன்னம் பரம சாது. அவளுக்கு இப்படி ஒரு படு போக்கிரியாக ஒரு பிள்ளை வந்து வாய்த்தது பாருங்களேன்!'' என்று அங் கலாய்த்தாள் பாலம்மாள்.

நாகுவின் நெஞ்சம் குமுறிக் கொண்டிருந்ததால் அவன் ஒன்றுமே பேசவில்லை,

''போக்கிரிகள் எதேஷ்டமாக உண்டு உலகத்தில்! ஆனால்- இடம், பொருள் ஏவல் என்று தரா தரம் பார்த்து போக்கிரித் தனத்தைப் பயன் படுத்திக் கொள்வார்கள்! இது அப்படி யில்லையே? தகாத இடத்திலே யல்லவா காண்பிக்கிருன். அதற்குத் தகுந்த பிரதி மரி

---

## பால்ஸாக் கண்ட பாரீஸ்!

பாரீஸ் நகரை நிமிடத்திற் கோர் விதமாக மாறும் நாகரீக நகரம் என்று கொண்டாடு கிருேம். ஆனல் பிரஞ்சு இலக்கிய மேதை பால்ஸாக் பாரீஸைப் பற்றி என்ன கூறி ஞர் தெரியுமா?

''சேறும், சகதியும் நிறைந்த சாக்கடை பாரீஸ். கோச்சு வண்டியில் செல்லும்பொழுது உன்து உடைகளில் அதன் சேறு தெறித்து விட்டால், நீ கண்ணியமானவஞக எண் ணப்படுவாய்; ஆனல் கால் நடையாகச் சென்று அப்படி நேர்ந்தாலோ, நீ அயோக் கியன்! வயிற்றுப் பசிக்காக எதையாவது எவரிடமிருந்தா வது நீ எடுத்துக்கொண்டால், நீதி மன்றத்தில் மக்கள் உன்னை ஏதோ மிருகத்தைப் பார்ப்பது போல காட்சிப் பொருளாகக் கருதுவார்கள். ஆனல் ஒரு மில்லியனை நீ திருடி விட்டாலோ,'சிலத்தின் உருவம் நீதானே' என்று எண்ணும்படி உன்னை பய பக்தியுடன் நாடக விடுதி களில் காணும்பொழுது சுட்டிச் சுட்டி பேசிக் கொள் வார்கள். இதை விட அதி சயம், இந்த நீதி பரிபாலனம் நடப்பதற்காக போலீஸ் படைக்கும் நீதி மன்றங்களுக் கும் நாம் 30 மில்லியன் கொட்டிக் கொடுப்பதுதான்; என்ன அழகான நிலே!''

யாதை கிடைக்கத்தான் கிடைக்கும்! நாயின் வாலை நிமிர்த்தப் பார்க்கிறான் சோமு", என்றார் ராமசுவாமி. "பார்க்கட்டுமே! நல்லபடியாக நேராகி விட்டால் சந்தோஷம்தான்! ஆனால் ஆகாது! நிச்சயமாக சாமி— இன்றைக்கு நான் சொல்லி விட்டுப் போகிறேன்—இந்த மாதிரி சங்கதிகளிலே-தப்புத் தண்டா ஏற்பட்டால்-கொலை விழாமல்- உயிர்ப்பலி வாங்காமல் போகாது பகைமை! நமது சோமு இன்னமும் பிரயாசைப் பட்டு, அந்த மனிதன் புத்தியை மாற்றப் பார்த்தாலும் மாறாது! ஏன் இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறேன் என்கிறீர்களா? கொய்யாத் தோப்பிலே அவன் பேசின பேச்சிலே அவ்வளவு 'ஜோர்' இருந்தது சாமி!

வள்ளியம்மாளுக்காக— அவளை அடைய—அவரு எந்தத் தடையையும் லட்சியம் செய்யமாட்டார்! அதிலே அவ்வளவு தங்கு தடையில்லாத வேகம் இருக்கிறபோது— சோமு போடுகிற அணை எம்மாத்திரம் என்றேன்",

"ஏன் நாகு: இதிலே உனக்கெதற்கு இவ்வளவு ஆத்திரம் வருகிறது?", என்று கேட்டு வைத்தாள் பாலம்மாள்

"என்னடி பைத்தியக் காரியாக இருக்கிறாய்? அவரவர்கள் ஜாதி ஜனத்தை விட்டுக் கொடுப்பார்களா எங்கேயாவது? ஒருவருக்கு வரும் அவமானம் அனைவருக்கும் பங்காயிற்றே! அதனால் தான் அவன் நெஞ்சு குமுறுகிறது! என்ன போகடாத்தனம்பாரேன்! எனக்கே ஆத்திரம் வருகிறது நினைத்துப் பார்த்தால். நாகுவுக்கு எப்படி இருக்கும்?"

"இதோடு மட்டுமில்லை சாமி. இன்னொரு பெரிய விபரீதம் கூட நடக்கப் போகுது. இதோ வந்து சொல்லுகிறேன். இருங்கள்," என்று கூறி கொல்லைப் பக்கம் சென்றான் நாகு.

(தொடரும்)

**கவிஞரும், கடன்காரர்களும்!**

"பராசக்தி! இந்த உலகத்தின் ஆத்மா நீ. உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள் தோறும் உன் மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களையெல்லாம் கொடுத்து விடக் கூடாதா?.................

வைத்தியனுக்குக் கொடுக்கப்பணமில்லை. குழப்பம்,குழப்பம் — தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

பராசக்தீ, ஓயாமல் கவிதை எழுதிக் கொண்டிருக்கும் படி திருவருள் செய்யமாட்டாயா? கடன்களெல்லாம் தீர்ந்து, தொல்லையில்லாதபடி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் எப்போதும் உன் புகழை ஆயிரவிதமான புதிய புதிய பாட்டுக்களில் அமைக்க விரும்புகிறேன்.

தாயே, என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப் படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும், உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால், உன்னை எப்படிப் பாடுவேன்?

**திரு. சுப்பிரமணிய பாரதி.**
**('சித்தக்கடல்' கட்டுரையில்)**

தந்தி : 'குமரன்' டெலிபோன் : { மில் 98
ஆபீஸ் 533

# குமரன் மில்ஸ் லிமிடெட்,

## பூளைமேடு P. O; கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... 19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... 5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

**எங்கள் நூலை**

**சென்னை, ஆந்திர மாகாணங்களில் மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.**

Sri G. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

---

போன் : 151 தந்தி : VESSELS

## குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

★

# பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

**மதுரை.**

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணுடி சாமான்கள், பீங்கான், எனுமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதராஸ்.




S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR .... PT. MADRAS.

BAROO/-

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

Telegrams :
'PIONEER' Coimbatore.

Telephones :
160, 361.

# THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

**PEELAMEDU :: COIMBATORE**

FOUNDER PARTNERS:

## Messrs. P. S. G. & SONS.

**No. of Spindles ... ... 27,226**

**Manufacturing 60's, 80's and 100's Combed Yarn**

*Staff Employed* : 41.

*Labour ers Employed* 934.

—:o:—

## 'B' Mills, Perianaickenpalayam

**No. of Ring Spindles ... 22,000**

**Manufacturing 20's to 40's Yarn.**

*Staff Employed*: 6.

*Labourers Employed* 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN :

**L.T.M., L.M.E., L.E.E.,**

# V.V.S. நல்லெண்ணை

உபயோகியுங்கள்!



வே.வ.சண்முகநாடார் & சன்ஸ்

விருதுநகர்

எங்களிடம் தயாராகிற

நயம் நல்லெண்ணை

செட்டிநாடு சைஸ்

நயம் உளுந்து

துவரம் பருப்புகளை

வாங்கி உபயோகியுங்கள்

மேலான
குணம்
மணம்
நிறைந்தது!
எங்கும்
கிடைக்கும்.

## V.V.ஷண்முகநாடார் & சன்ஸ்

விருதுநகர்

போன்: 88... தந்தி: VEEVEEYES...




Regd No. M. 6928. PUTHUMAI